Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ஏப். 23 - 29, 2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 353

## குமாரின் பெயரில் குளிர்காயும் பேர்வழிகள்

## புலிகளிடம் பலிக்காத பாச்சா

- ஸ்பெஷல் ரிப்போர்ட் -




சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

## முரசின் பாதை!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சித்திரைப் புத்தாண்டு
மலர்ந்து விட்டது!
தமிழர்களைப்
பொறுத்தவரை
சித்திரைப் புத்தாண்டு
புதியதொரு
மாற்றத்துக்கான
வாயிற் கதவு.

அதுவும்,
இம்முறை உதயமாகும்
புதிய மில்லேனியத்தின்
முதற் புத்தாண்டு
விஷேசம் மிக்கது.

அத்தகைய
எதிர்பார்ப்புடன்
பிறந்துள்ள
புத்தாண்டில்
முரசும்
தன்பங்கிற்கு
சில புதிய அம்சங்களை
உங்களுக்கு
வழங்கப் போகிறதென்ற
மகிழ்ச்சிகரச் செய்தியைத்
தெரிவித்துக் கொள்கிறது.

முரசின் வெற்றிப்பாதையில்
கைகோர்த்து நின்று
ஆதரவளித்துவரும்
எம் அபிமான
வாசக நெஞ்சங்களுக்கு
மனம் நிறைந்த
வாழ்த்துக்களை
இப் புத்தாண்டின்
பிறப்போடு
தெரிவித்துக்
கொள்கிறோம்.

முரசின்
வெற்றிகளில் மட்டுமன்றி
சோதனையான காலத்திலும்
விழ்ந்துவிடாதிருக்க
அதி கூடிய
அக்கறையுடன்
கை கொடுத்துதவிய
எம் அபிமான வாசகர்களின்
வாஞ்சை மிக்க
ஆதரவுக்காக
மீண்டும் ஒரு முறை
நன்றி சொல்லக்
கடமைப் பட்டுள்ளோம்.

முரசின் வெற்றிநடையை
துப்பாக்கி கொண்டும்
தடுத்துவிட முடியாதென
நிரூபித்து விட்டீர்கள்.

முரசு இப்போது
முன்னைய நிலைக்கு மீண்டும்
விறுநடை போடுகிறது.

முரசுக்கு இது ஒரு
வெற்றியல்ல;
முரசு வெறுமனே
விற்பனையில் வெற்றியடைவது
பிரதான மானதல்ல.
பிரதானமானது எதுவென்றால்,
முரசின் உண்மை வெற்றி
எதுவென்றால்,
மக்களின் வெற்றியே!

எமது மக்கள்
தமது போராட்டத்தில்
என்று வெற்றிகாண்கிறார்களோ,
அன்றுதான்
முரசின் வெற்றி.

அன்று
முரசு என்ற
இந்தச் சிற்றேடு
இல்லாதவாறு
எந்த நாசகாரிகளாலாவது
ஒழிக்கப்பட்டு விட்டாலும்,
அன்றைய தினம்தான்
இன்றைய முரசின் பணிக்குக்
கிடைத்த வெற்றி தினம்.

அதுவரை எமது பணி
மக்களின் வெற்றிக்காகவே
தொடர்ந்த வண்ணம்
இருக்கும்.

மக்களே
வரலாற்றின்
நாயகர்கள் என்பது
முரசின்
அசையாத
நம்பிக்கை.
மக்களின் வெற்றி
நிச்சயம் என்ற
உறுதியோடு
மலர்ந்திருக்கும்
மில்லேனியப் புத்தாண்டில்
கால்பதிப்போம்.

இத்தருணத்தில்
புத்தாண்டின் வரவிலும்
புன்னகை பறிக்கப்பட்ட,
யுத்தத்தில் சிக்கிய எம்
யாழ் மற்றும் வன்னி மக்களுக்கு
அனுதாபத்தைத் தெரிவித்து,
வரலாறு உங்களை
விடுதலை செய்யுமென்ற
நம்பிக்கை வார்த்தையுடன்
விடைபெற்றுக் கொள்கிறோம்.

மீண்டும் மறுமடலில் வந்து கலகலக்கும்வரை — என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## நல்லவர் யார் கெட்டவர் யார்?

உலகில் நல்ல காரியங்களை நினைந்து நல்லன செய்பவர்களும், தீயவற்றை நினைந்து தீமை செய்பவர்களும் உளர். நல்லன செய்பவர் நல்லோர்; தீயன செய்வோர் தீயோர்.

நல்லவை செய்ய தீயவை மறையும்; தீயவை செய்ய நல்லன தெரியா. நல்லதைப் பார்; நல்லதை நினை; நல்லதைச் செய்- பலன் நல்லதாய் அமையும். நல்லதை நினைக்கும்போது பார்வையில் நல்ல கண்ணோட்டம் தெரியும். யார் நல்லவர்கள்? எல்லோரும் நல்லவர்கள்தான். யார் கெட்டவர்கள்? எல்லோரும் அல்ல; இஃது பார்க்கும் கண் பார்வையைப் பொறுத்தது. 'நல்லாரைக் காண்பது நன்று; தீயாரைக் காண்பது தீது' ஔவையார் பொன் மொழி.

ஸ்ரீ சத்திய சாயி பாபா சொல்கிறார்: சந்தன மரத்தைக் கோடரியால் வெட்டினால் கோடரியில் சந்தன மணம் கமழும். தன்னை வெட்டும் கோடரிக்கே மணம் கொடுத்து ஆதரிக்கிறது சந்தன மரம். கோடரியோ தன்னினமாகிய மரத்தை வெட்டுகிறது 'குலத்துக்கு ஈனம் கோடரிக்காம்பு'

மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் அன்பு காட்டி நன்மை செய்கிறது. கோடரி தன்னினத்துக்கே தீமை செய்கிறது.

சந்தன மரம் நல்லவர்களுக்கு உதாரணம்.

கோடரி தீயவர்களுக்கு உதாரணம். தனக்குத் தீங்கு செய்பவனுக்கும் நன்மை செய்யும் மனம் உள்ளவர்கள் நல்லவர்கள். அவர்களுக்கு கடவுள் கிருபை உண்டு. பிறருக்குத் தீங்கு செய்து மகிழ்பவர்கள் கெட்டவர்கள். அவர்களுக்கு கிடைப்பது நரகமே.

செல்வி.பா.வேலுப்பிள்ளை

# ஆன்மீகம்



## இஃதிகாஃபின் சிறப்புக்கள்

வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு சமுகமளிக்கும் ஒருவர் நல்ல முறையில் வுளூச் செய்து இறைவனின் தியானத்தில் இஃதிகாஃபோடு இருப்பாரேயானால் அடுத்து வரும் ஜும்ஆவுக்கு இடைப்பட்ட நாட்களில் அவர் செய்த அத்தனை பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான். (அல்ஹதீஸ்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: "அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக இஃதிகாஃப் இருப்பவருக்கும் நரகத்திற்கும் மத்தியில் அல்லாஹ் மூன்று அகழிகளை தடையாக ஏற்படுத்தி விடுகிறான். அந்த அகழிகள் ஒவ்வொன்றும் வானத்திற்கும் பூமிக்கும் மத்தியிலிருக்கும் தூரத்தை விட அதிக தூரம் கொண்டவை!"

மேலும் அவர்கள் அறிவிக்கிறார்கள், "இஃதிகாஃப் இருக்கும் இடம் பாவங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதோடு இஃதிகாஃப் இருப்பவருக்கு மற்ற அனைத்து நன்மைகளை செய்பவரைப் போன்றே நன்மை கொடுக்கப்படுகின்றது" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ஈமானுடன் நன்மையைக் கருதியவராக யார் இஃதிகாஃப் இருக்கிறார்களோ, அவர்களுடைய முந்திய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன." (அல்ஹதீஸ்)

அல் இஸ்லாம் அறிவுக்களஞ்சியம். தொகுப்பு: வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## உயிர்த் தெழுந்ததைக் கண்டசாட்சி

செசரியா நகரில் நேர்மையாளரும் கடவுளுக்கு அஞ்சி நடப்பவருமான நூற்றுவர் தலைவரான கொர்னேலியு வாழ்ந்து வந்தார். ஆண்டவர் பேதுரு என்றழைக்கப்படும் பேதுரு விடம் இட்ட பணிகளைப் பற்றிக் கேட்டறிவதற்காக, அவரை தமது இல்லத்துக்கு வரவழைத்திருந்தார். அங்கு குழுமியிருந்த அனைவர் முன்பும் பேதுரு இயேசு பெருமானின் இறுதிகால சம்பவங்களை நற்செய்தியாக எடுத்துரைத்தார்.

"யூதரின் நாட்டுப்புறங்களிலும் எருசலேம் நகரிலும் அவர் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். மக்கள் அவரைச் சிலுவையில் தொங்க வைத்துக் கொன்றார்கள். ஆனால் கடவுள் மூன்றாம் நாள் அவரை உயிரோடு எழுப்பி காட்சி அளிக்கச் செய்தார். ஆயினும் அனைத்து மக்களுக்குமல்ல; சாட்சிகளாக கடவுள் முன்பு தேர்ந்து கொண்டவர்களுக்கு மட்டுமே அவர் காட்சியளித்தார்.

இறந்த அவர் உயிர்த்தெழுந்தபின் அவரோடு உண்டு குடித்த நாங்களே! அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர்!" (திருத்தூதர் பணிகள் 11) மோசேதாசன் - ஜம்பட்டா வீதி,

## கவிதைப் போட்டி இல.353



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிக மில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 29.04.2000

கவிதைப் போட்டி இல.353
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.350

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

#### எச்சரிக்கை

வயிறுபிளந்து நிற்கும்
மரத்தினுள் பதுங்கினாலும்
இனவாத துச்சாதனர்கள்
உன்னை துகிலுரிவர் பெண்ணே!

எம்.மிக்கேல்-மூதூர்.

#### உடை களைய.....

சிரித்திடும் பெ(க)ண்ணே
கவனம்....!
மரத்தின் பின்
படை நிற்கும்-நீ
குண்டுதாரியென்று-உன்
உடை களைய!

த.பத்மன்-கோமாரி 01.

#### கவனம்

போஸ் கொடுக்கும்
பைங்கிளியே-பை
ஃபோலகப் பறித்திடுவார்கள்
உன்னையே-அதனால்
ஒளிந்து விடு-இல்லையேல்
வடபுலத்துப் பெண்புலியென
இம்சிக்கப்படுவாய்!

ஜனாபா சஹருல் எம்.சலாஹுஸன்
உக்குவளை.

#### இதுதான் வாழ்வா?

மரப் பொருக்குள்
மரணத்திற்கு போராடியவேளை.
சமாதானப் பேச்சாம்
பார்ப்போம் சற்று
மாளவும் முடியாது
வாழவும் முடியாது எமக்கு!

அப்துான் சுபைர்-மீரா நகர், தம்பலகாமம்.



#### வந்து விடவா?

அக்கம் பக்கம்
யாருமில்லை
அங்கே
நானும் வந்து விடவா?

ஜீ.ஒகஸ்டின்-ஓலுவில.

#### மர அடி

அலை மகள் தாலாட்ட
ஆசைகள் சிந்துபாட
அமைதியாய் உறங்குகின்றேன்-ஏன்
மர அடியில்!

பூ.ஜெயகாந்-ஆரையம்பதி 02.

#### பயங்கர(வாதி) மரம்!

தமிழ் மணியே!
விளையாட்டுக்கும் என்
பொந்தில் ஒளியாதே!
பயங்கர(வாதி) மரம்
என நாலாம் மாடியார்
நாமம் சூட்டிவிடுவார்கள்

த.காயத்திரி-கல்லடி, மட்டக்களப்பு.

#### புதுமை படைத்திடு

கொட்டு நான் உலகம்-என்று
நினைத்து கிணற்றுத்தவளையாய்,
இருந்திடாதே பெண்ணே!
சமுதாயத்தின் அடக்குமுறையில்
மௌனித்தது போதும்;
புதுமைகள் படைத்திட,
சரித்திரம் பிறந்திட,
இன்றே, ஜான்ஸிராணியாய் மாறிவிடு!

பீற்றர் ஜோன்தாஸ்-பெரிய கடை, மன்னார்.

#### போராட்டம்

இளமகளே
முது மக்கள் தாழியாக
முடங்கிடாதே!
தட்டிக் கேட்டும்
தமிழ் மகளாய்
விறு நடை போட்டி
இம்மண்ணில்!

பதுளையூர் செல்வன்.

#### கண்ணிலே பட்டிடாதே!

கண்ணாமூச்சி ஆடும் நேரமல்ல இது!
கண்கெடுவர் பூமியிது
கயவரின் கண்ணிலே பட்டுவிட்டால்
கசங்கியே போய்விடுவாய்!

திவஸ்சந்தா சசிதரன்-கொழும்பு 13.

#### மாற்றுவழி

மலரே உன் மண்வீடுதனை
மயான பூமியாக
மாரவர்கள் மாற்றியதால்
மரவீடு கட்டி வாழ
வழி செய்தாயா?

எம்.ஐ.கிப்லியா-லியான்கொட.

#### அடுத்த செம்மணி

பெண்ணே!
வெளியே வந்துவிடு!
அந்த பொந்தும் சிலவேளை
பயங்கரவாதி என்றெண்ணி
உன்னை விழுங்கிவிடும்;
அடுத்த செம்மணிக்கு
அத்திவாரமாக.

தே.சங்கீதா-புத்தளம்.

# வாசக(ர்)சாலை

அடு (எ) ன்றும் முரசு முரசு தான்!
சொல்லடி, துவக்கடி கண்டு துவண்டு விடாமல் மீண்டும் புதுப்பொலிவுடன் அற்புதன் ப(ா)ணியில் பவனி வரும் வைரமே!
கண்ணீர் என்னும் மை கொண்டு உன்னில் மலரும்
ஆக்கங்கள்-கருத்துக்கள் காலத்தால் அழியாதன;
உள்ளத்திற்கு உரமூட்டுவன; நெஞ்சை நெகிழச் செய்வன.
அன்றும், இன்றும், என்றும், என்றென்றும் சூடு, சுவை, சுவாரசியம்-
அதுதான் உன் ப(ா)ணி என்பது வெள்ளிடை மலை-கண்கூடு.

எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு 10.

என் அன்பின் முரசுக்கு! உன் முதல் இதழிலிருந்து இன்று வரை எதுவும் தப்பாமல் படிக்கிறேன். நீ ஆலமரம் போல் விருட்சமாக இன் னும் படர்ந்து உன் சேவை இன்னும் வரை என் ஆசியும் ஆசையும். உன் விழுதுகள் போல் ஆக்கங்கள் தரும் ஒவ்வொரு உள்ளமும் நீடூழிவாழ இறைவன் துணை நிற்பாராக. திருமதி. பி.அருள்தாஸ் கேட்டுக் கொண்டது போல் உறவுகளைப் பிரிந்து முகவரி தெரியாமல் இருக்கும் உள்ளங்களை உன் இதழ் மூலம் ஒன்று சேர்த்து வைக்க வேண்டும் என்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.

தே.பிரேமினி, வவுனியா.

முரசே!
'குடிசை பற்றி எரிய சுருட்டு பற்ற வைக்க நெருப்பு கேட்டது' போல் மாறிவிட்டது நம் நாட்டின் அரசியல். சர்வதேச அரங்கில் கூட நம் நாட்டி பிரச்சனை இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதற்கு காரணம் இங்கு நடைபெறும் அழிவுகளும், அத்துமீறல்களும், அதனால் ஏற்பட்ட கொந்தளிப்புமேயாகும். இந்த நிலைமையில் கூட அரசியல் காய் நகர்த்தி விளையாடுவது மிகவும் வேதனைக் குரிய ஒன்றாகும். அரசியலை ஒரு புறம் வைத்து மனித நேயத்துடன் நோக்கி இருந்தால் கூட இன்று இந்த பிரச்சனையை கட்டு படுத்தி இருக்கலாம். பெறுமதி மிக்க இந்த மனித வாழ்வு அன்றாடம் எத்தனையோ அழிக்கப்படுகின்றது. இந்த நிலமையில் ஆளும் தரப்பும் சரி எதிர் தரப்பும் சரி ஓர் எண்ணத்தில் நோக்கி ஆக்க பூர்வமான தீர்வை அளித்து மக்கள் வாழ்வை காப்பாற்றுவதுதான் அவர்களைத் தெரிவு செய்த மக்களுக்கு அவர்கள் செய்யும் நன்றிக் கடன்.

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.

வாரமோர் முறை வாசகர் நெஞ்சங்களில் மலரும் இனிய முரசே!
உன் மலர்மேனியில் நீ உடுத்தி வரும் அத்தனை அம்சங்களும் தேனிலும் மேலான சுவைகொண்டவை. அதனைப் பருகி அகம் மகிழக் காத்திருக்கும் ஆயிரமாயிரம் வாசகர்களுள் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் 'தேன்கிண்ணம்' தரும் கவிச்சுவையை வார்த்தைகளில் என்னிடம் வார்த்தைகள் இல்லை. திசரிலடா உன்சேவை இந்நாளில்லத்தில் நிலைத்து நின்று இன்னும் பல சாதனைகள் புரிய என் இதயத்தில் பூக்கும் வாழ்த்துப் பூக்களை உன்மேல் சொரிகின்றேன்.

மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

அன்பின் என் இனிய முரசே!
உன்னில் அடங்கியுள்ள அம்சங்கள் மிகவும் பிரமாதம். நீ தவறாமல் என் கையில் தவழ வேண்டும் என்பதுதான் என் ஆசை. உன் பணிகள் என்றும் தொடர வேண்டும். தொடர்வாய் என நினைக்கிறேன்.
முத்தான முரசின் ரசிகை.
எம், நஸ்லியா, யடவத்த, நிககொள்ள.

தமிழ் இலக்கியச் சோலையிலே எழிலும், மணமும் சுவையும் குன்றாவண்ணம் பல அற்புதமான இலக்கியக் கனிகளைப் படைத்துத்தந்து நீங்கா நினைவுச் சின்னமாக எமது இதயத்தில் இடம் பிடித்திருக்கும் 'முரசே' உமது பணி பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.
இவ்வண்ணம்
க.குமுதினி, வந்தாறுமூலை.



முத்தான முத்தமிழ் முரசே!
உன் உடலில் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிகச் சிறந்தவை.
அதிலும் 'இடி அமீன்', 'சிகப்பு வணக்கம்' போன்றன மிகப் பிரமாதம். இத் தொடர்களை வழங்கி வரும் 'அழகனுக்கும்' பாராட்டுக்கள்.
தற்போது முரசில் வெளிவரும் செய்திச்சிதறல் பிரமாதம்.
மேலும் உன்னை வாழ்த்த வார்த்தை கிடையாது. நீ எங்களது குடும்பத்தில் ஒருவன் போன்ற உணர்வு ஏற்படுத்தியது.
எப்போது வியாழன் வரும் என்று ஏங்கும் வாசகர்களில் நானும் ஒருவன்.
மேலும் உனது சிறப்பு பணி தொடர எனது
வாழ்த்துக்கள். ச. நஜீம் கனேசபுரம்.

மடலகள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# பேரழிவைத் தடுக்க போர் நிறுத்தமே ஒரேவழி!

## நாட்டின் நலன் விரும்பிகள் தெரிவிக்கும் அபிப்பிராயம்!

**நா**ட்டில் இன்று விவரிக்க முடியாத அனர்த்தங்களை ஏற்படுத்தி வரும் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. இதே காலத்தில் அரச துருப்புக்களும் விடுதலைப் புலிகளும் மும்முரமாக தொடர்ந்து மோதி வருகின்ற னர்.

பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் வேகம் இழந்திருக்கும் நிலையில், யுத்தத்தின் வேகம் பலமடங்கு அதிகரித்த வண்ணமுள்ளது. இதனால் பேரிழப்புகளும் துன்பங்களுமே அதிகரித்த வண்ணம் உள்ளன. அப்பாவிப் பொதுமக்கள் படும் துன்ப துயரங்களுக்கு அளவு கணக்கே கிடையாது. அமைதிப் பேச்சுவார்த்தைகள் முடிவடைவதற்கு முன்னர், யுத்தம் தனது செல்வாக்கை நிலை நிறுத்தி, அமைதிப் பேச்சுக்கு இனிமேல் அவசியமில்லை என்ற ஒரு நிலைப்பாட்டினை ஏற்படுத்திவிடும்.

இந்த நாட்டில் மட்டுமல்ல, பிற நாடுகளிலுமுள்ள-இந்நாட்டின் மீது அக்கறை கொண்ட பல நோக்கர்கள் இத்தகைய கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டு, உண்மையானதும் நியாயமானதுமான தீர்வு கிட்ட வேண்டுமானால் உடன் போர் நிறுத்தம் ஒன்றே ஒரே வழி. அரசாங்கமோ, புலிகளோ உடன் போர் நிறுத்தத்தை அறிவித்துவிட்டு திரிகரண சுத்தியுடன் அமைதிக்கான பேச்சுவார்த்தையில் உடன் இறங்கியாக வேண்டும், என்று அவர்கள் கருதுகின்றனர்.

### படைத்தலைமையின் கூற்று

யுத்தத்தைத் தொடர்வதற்கு நவீன ரக ஆயுதங்களும் தளபாடங்களும் தேவை என்று இராணுவத் தலைமைப்பீடம் முப்படைகளின் தலைவரான ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இராணுவத்தை விட்டு வெளியேறியவர்கள், போர் முனையில் உயிரிழந்தவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் இராணுவத்தின் பல்லாயிரக்கணக்கான வெற்றிடங்களை ஏற்படுத்தி உள்ளனர். இதனால் முன்னணியில் நின்று போரிடுவதற்கும் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை கண்காணிப்பதற்கும் போதுமான அளவு படையினர் இல்லை. இதன் காரணமாக மேற்கொண்டும் இராணுவப்படைப்பிரிவுகளுக்கு புதியவர்களைச் சேர்ப்பதற்கு மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

இதிலிருந்து அரச தரப்பினர் போர் நிறுத்தத்திற்கோ அல்லது தற்காலிக போர் நிறுத்தத்திற்கோ ஆயத்தம் இல்லை என்பது நிரூபணமாகிறது.

### பிரதி அமைச்சரின் கூற்று

தொடரும் பல மோதல்கள் ஒவ்வொன்றிலும் புலிப்படையைச் சேர்ந்த போராளிகள் எண்ணிக்கையில் கணிசமான அளவு தொகையினர் குறைந்து விட்டனர் என்றும் எஞ்சி இருப்பவர்கள் களத்தில் இறங்கிப் போர் புரியும் மனோநிலையற்று விரக்தியில் உள்ளனர் என்றும், புலிகள் மிக விரைவில் அரச படையினரிடம் தோல்விகண்டு விடுவார்கள் அல்லது சரணடைந்து விடுவார்கள் என்றும் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையின் போது பாதுகாப்புத் துறை பிரதி அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த பல தடவைகளில் கூறி வந்துள்ளார். ஆனால் புலிப் படையினரோ மிக மூர்க்கத் தனமான முறையில் நவீன போர்க் கருவிகளுடன் போர் முனையில் தொடர்ந்தும் மோதி வருகின்றனர். ஆகவே அவர்களும் யுத்தத்தை நிறுத்தவோ, அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தவோ முன்வரப் போவதில்லை என்பது கண்கூடு.

இந்நிலையில் பிறநாடுகளில் ஏதாவதொன்று முன்வந்து அரசாங்கத்தையும் புலிகளையும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட வற்புறுத்த வேண்டும். தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தைகளை தாமதம் எதுவுமின்றி நடத்தி நாட்டில் ஏற்படப் போகும் பேரழிவைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

இதுவே இந்நாட்டின் மீது நல்லெண்ணம் கொண்ட பலரது கருத்தாகும்.

தனி நபர்களோ இயக்கங்களோ மட்டுமல்லாமல் இலங்கை நாட்டின் மீது அக்கறையுள்ள பல வெள நாடுகளும் கூட இத்தகைய கருத்தினையே கூறி வருகின்றன. இக்கருத்துக்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இருதரப்பினரையும் அழுத்தி வருகிறது.

# வவுனியா அகதி மாணவர்களுக்குச் சீருடைகள்!

## பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் உதவி

(நமது நிருபர்)

**வ**வுனியா நகரில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அகதி மாணவர்கள் 4648 பேருக்கு பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் ஒரு தொகுதிச் சீருடைகளை வழங்கவுள்ளது.

அடம்பன் குளம், பூந்தோட்டம், வேப்பன் குளம், நெலுக்குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவ மாணவிகளுக்கே இத் தொகுதிச் சீருடைகள் வழங்கப்படவுள்ளதாக வவுனியாவிலுள்ள சனத்தொகை சேவைகள் லங்கா (PSL) உதவி நிறுவனத்தில் பணியாற்றும் உளநல ஆலோசகர் திருமதி ஏ.பி.தேவமணி தெரிவித்தார்.

நலன்புரி நிலையத்திலுள்ள அகதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பி.எஸ்.எல். நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திரு.எஸ்.சூரியமூர்த்தி பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயத்திடம் உதவி கேட்டு எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவே இது சாத்தியமாகியுள்ளதென்றும் அவர் சொன்னார்.

நலன்புரி நிலையத்திலுள்ள மாணவர்களுக்கு சர்வதேச உதவி அமைப்பான 'ஸோவா' நிறுவனம் ஏற்கனவே அப்பியாசக் கொப்பிகளையும், கலர் பெட்டிகளையும் வழங்கி உதவியிருந்தது.

ஒரு மாணவருக்கு தலா 400/= ரூபா பெறுமதியான சீருடைகளை பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# அரச கரும மொழிகள் திணைக்களத்தில்

## தமிழுக்கு இடமில்லை!

**அ**ரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழி ஆய்வு கூடம் நீதி, அரசியலமைப்பு விவகார மற்றும் இனத்துவ விவகாரங்கள், தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களால் ஏப்ரல் 7ம் திகதியன்று திறந்துவைக்கப்பட்ட பின்னர் இடம் பெற்ற கூட்டத்தில் தமிழ் மொழி பூரணமாக உதாசீனஞ் செய்யப்பட்டது. அமைச்சர் உட்பட அரச கரும மொழிகள் திணைக்களத்தின் தற்போதைய ஆணையாளர், மற்றும் கடந்தகால ஆணையாளர் ஆகியோர் சிங்கள மொழியில் உரை நிகழ்த்தினர். இடையிடையே ஆங்கிலத்தையும் உபயோகித்தனர். அமைச்சரின் உரையில் மொழிகள் குறித்த பிரச்சனையே நாட்டின் தற்போதைய இனப்பிரச்சனைக்கு மூல காரணம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசகரும மொழிகள் ஆணையாளர் திரு. சிவதாசனும் கலந்து கொண்டார். தமிழில் பேசுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படவில்லை. நாட்டின் பிரபல மொழி பெயர்ப்பாளர்கள் இருவர்களான எஸ்.சிவகுருநாதன்; மற்றும் எம்.கே. இராகுலன் என்பவர்கள் இக்கூட்டத்தில் பிரசன்னமாகி இருந்தபோதிலும் தமிழ் மொழி பெயர்ப்புக் குறித்து எவருமே அக்கறை எடுக்கவில்லை

### அரசின் மொழிக் கொள்கை

இலங்கை சோஷலிச ஜனநாயகக் குடியரசின் அரசியல் யாப்பின் 18வது உறுப்புரையில் தமிழ் அரச கரும மொழியென்பது எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு நீதி, அரசியலமைப்பு விவகார மற்றும் இனத்துவ விவகார, தேசிய நல்லிணக்க அமைச்சின் 1999ஆம் ஆண்டு செயல் நிறைவேற்று அறிக்கையில் "அரச கரும மொழிகள் திணைக்களம் அரசின் மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் பிரதான அமைப்பாகும்" என்று கூறப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய மொழிக் கொள்கையின் ஏற்பாடுகள், நன்மைகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கின்றனர் என்றும் மொழிச் சட்டங் குறித்து பொதுமக்களுக்கு கல்வியூட்டும் வகையில் மாவட்டங்கள் தோறும் பல கருத்தரங்குகளை நடத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டமும், சொல்லும் செயலும் எவ்வாறு அமைந்துள்ளன என்பது குறித்து தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். சுமார் 65 பேர் வரையில் பணியாற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் ஒரு முஸ்லிம் கூட இல்லையென்பது தேசிய நல்லிணக்கத்துக்கு எவ்வளவு தூரம் உதவிகரமானது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. சமீபத்தில் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்புப் பயிலுநர்களாக வந்திருந்த இரு தமிழ் பட்டதாரிகள் ராஜகிரிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஒரு நாள் முழுவதும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததும், இதன் விளைவாக தமது பாதுகாப்புக் குறித்த அச்சம் காரணமாக மேலதிக தமிழ் பயிலுநர்கள் எவருமே அரச கரும மொழிகள் திணைக்களத்துக்கு வருகை தராததும் பெரும் பிரச்சினைகளாக மாறியுள்ளன. அரச கரும மொழிகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக ஒரு தமிழர் அல்லது முஸ்லிம் நியமிக்கப்பட வேண்டுமென்ற தமிழ் அரசியல் கட்சிகளின் பல வருடகால வேண்டுகோள் அலட்சியம் செய்யப்பட்ட நிலையில், இப் பதவிக்கு ஒரு சிங்களவரே நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அரச கரும மொழிகள் திணைக்களம் ஒரு நம்பு தகவு குறித்த நெருக்கடியில் சிக்கியுள்ளது. மேற்படி பிரதி ஆணையாளர் அரச கரும மொழித் திணைக்களத்தின் தமிழ் ஊழியர்களைக் களையெடுக்கும் முயற்சியில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அரச கருமமொழித் திணைக்களக் கட்டிடமும், மொழி ஆய்வு கூடமும் கனடிய மக்களினதும், அரசினதும் உதவியால் கிடைத்தவை என்பதும், கனடாவில் ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் அரச கரும மொழிகள் என்பதும், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் அரச வைபவங்களில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கிடைக்கின்றது என்பதும் உற்று நோக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

அரச கரும மொழிகள் திணைக்கள நூலக வாசிப்பு நிலையத்தில் ஒரேயொரு தமிழ் செய்திப்பத்திரிகையான 'வீரகேசரி' தினமும் கிடைக்கும் நிலைமை முன்பு இருந்தது. இப்பொழுது இதுவும் நிறுத்தப் பட்டுள்ளது.

### கனடிய உதவி

'கனடிய அரசின் உதவியான ஐந்து கோடி இருபது இலட்சம் ரூபா தேசிய நல்லிணக்கத்தை ஈட்டும் நோக்கத்தில் வழக்கப்பட்டதாகும். இத்தொகையில் பெரும் பகுதி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச ஊழியருக்கு ஆங்கிலம் போதிக்கும் விடயத்தில் செலவிடப்பட்டுள்ளது. மேலும் சுமார் ஒருவருட காலத்துக்கு முன்னர் அரச கரும மொழிகள் திணைக்களம் 'சவசிரிபாய'வில் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் பிரதம் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பொ.ஐ.மு அரசின் பிரதியமைச்சராக விளங்கியவரும், தற்போது மாகாண முதலமைச்சராக உள்ளவருமான அத்தாவுட செனிவிரத்ன சிங்கள அரச ஊழியருக்குத் தமிழ் போதித்து இனப் பிரச்சனையைத் தணிக்கும் முயற்சி படுதோல்வியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டதும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

# அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக

## பௌத்த பீடாதிபதிகள் ஆராய்வர்

(கண்டி நிருபர்)

**நா**ட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் புதிய அரசியல் யாப்பு திருத்த ஆலோசனைகள் பற்றி கலந்துரையாடல் கண்டி மல்வத்தை, அஸ்கிரிய ஆகிய இரு பீடங்களின் மகா நாயக்கர்களுக்கு ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட அழைப்பினை பின் தள்ளி வைத்திருக்கின்றனர்.

புதிய அரசியல் யாப்பு திருத்தம் பற்றிய முழு விவரமும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் அது கிடைத்ததும் அவை பற்றி நன்கு அலசி ஆராய்ந்த பின்னரே. ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் பங்கு கொள்ளலாம் என மகா நாயக்கர்கள் கூட்டாடக ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் இரு மகாநாயக்க தேரர்களும் திரிசிங்கள அமைப்பின் தலைவரும் மேற்கண்ட கருத்தை மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

நோர்வே நாட்டுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முற்பட்டிருக்கும் அதேவேளையில், அதனை எதிர்த்து கொழும்பில் பௌத்த குருமார் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் எதிரொலியாகவே உத்தேச அரசியல் யாப்பு திருத்தம் பற்றி ஆராய ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை, மகாநாயக்கர்களும் மேற்குறிப்பிட்ட முடிவுக்கு வந்திருக்க கூடும் என்ற பரவலான கருத்துப் பற்றி பௌத்த குருமார் வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டும் வருகின்றன.

# கனடாவில் 'குருதி மழை'

**ரொ**றன்ரோ மா நகரம் கண்டிராத கலைக் காவியமாக முற்றிலும்புதியதோர் கருத்தோடு சென்ற 8ம் திகதி கனடா திருமறைக்கலாமன்றம் 90 கலைஞர்களுடன் திருப்பாடுகளின் காட்சியை சிறப்புற நடத்தி மண்டபம் நிறைந்த 1000 பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தனர்.

யேசு சிலுவை சுமந்து கொண்டு பார்வையாளர்கள் மத்தியில். மெதுவாக நடந்துவர சேவகர்களின் சவுக்கடிக்கு யேசுவாக மிகச் சிறப்பாக நடித்தார். அன்ரன் பீலிக்சின் அழுகையும் விம்மலும் பார்வையாளர்களையும், குருதி மழையில் நளைய வைத்தது. நவீன ஒளி, ஒலி அமைப்புக்களோடு சிலுவையில் அறையும் காட்சியும்; யேசு வின் உயிர்ப்பும் ஒரேமேடையில் எந்தவித இடைவேளையும் இல்லாமல் காட்டியது பாராட்டுக்குரியதே.

# மட்டக்களப்பு ஸ்ரீ.இ.கி. சங்க

## ஆசிரமத்தில் கொள்ளை?

**ம**ட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தில் சுமார் ஒரு இலட்ச ரூபா பணம் உட்பட தங்க ஆபரணங்களும், துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த 17 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் அந்த ஆசிரமத்திற்குள் புகுந்த கொள்ளையர்கள் ஸ்ரீமத் ஜீவனாநந்தாஜி அவர்களையும் மற்றும் அங்கிருந்த மாணவர்களையும் ஒதுக்குப்புற அறையொன்றில் பூட்டி வைத்து விட்டு பணப் பெட்டியைத் திறந்து கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் இராணுவத் துணைப் படையைச் சேர்ந்த குழுவைச் சார்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக ந.அந்தோனி ராஜதுரை, வி.அமிர்தலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்குழுவைச் சேர்ந்த மற்றுமொருவர் தேடப்படுவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்படும் போது தங்க ஆபரணங்கள், கைக்குண்டுகள், போலித்துப்பாக்கி, மற்றும் பணம் என்பன அவர்கள் வசமிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ இராமகிருஷ்ண நிலையம் ஏழைச் சிறார்களுக்கும் அநாதைச் சிறார்களுக்கும் உதவும் ஒரு அறநெறி இல்லமாகும். பெருந் தொகையான ஏழை மாணவர்கள் இங்கு கல்வி கற்கிறார்கள்.

சம்பவம் இடம் பெற்ற ஆசிரமத்திற்கு சுமார் 100 மீட்டர் தூரத்தில் பொலிஸ் காவலரணும் அதனை அண்டியதாக றாசிக் குழு உறுப்பினர்களின் சாவடியும் உள்ளன.

இப்பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கிறார்கள். கடந்த வாரம் கடையொன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

# பேரினவாதிகள் இணைந்து

## புதிய அரசியல் கட்சிக்கு முஸ்தீபு?

"இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியினாலோ எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினாலோ முடியாது. அத்துடன் தேசிய நலனில் இக்கட்சிகளுக்கு போதிய அக்கறையும் கிடையாது. ஆகவே சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அதேவேளை, ஏனைய சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை, சிங்கள மக்களின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்காமல், விட்டுக் கொடுக்கவும் எமது கட்சி பாடுபடும்."

இவ்வாறு இம்மாதம் 26ம் திகதி தொடங்கப் படவிருக்கும் புதிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்களான ஐ.தே.கட்சி பா.உ.திலக் கருணரத்னவும் சம்பிகா ரணவக்கவும் தெரிவித்தனர்.

தேசியக் குழுக்களின் ஒன்றியம், சிங்கள வீர விதான இயக்கம் போன்ற இயக்கங்களுடன் மேலும் 30 சிங்கள பௌத்த இயக்கங்கள் இந்தக் கட்சியில் இணைந்து செயற்பட விருப்பதாகத் தெரிகிறது. "1951ம் ஆண்டு திரு.எஸ்.டப்ளியூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்த சந்தர்ப்பத்தைப் போன்றே இன்றும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதைப் போன்றே புதிய கட்சியும் தோற்றுவிக்கப்படுகிறது" என்று சம்பிகா ரணவக்க கூறினார்.

# மட்டக்களப்பு அரச அதிபராக மீண்டும்!

## மோனகுருசாமி பதவி ஏற்றார்?

(மட்டக்களப்பு நிருபர்)

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 5 வருடகாலமாக அரச அதிபராக இருந்த திரு.ஏ.கே.பத்மநாதன் சேவையிலிருந்து ஏப்ரல் 17ம் திகதியுடன் ஓய்வு பெற்றார்.

தற்சமயம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக திரு.இ.மோனகுருசாமி பதவியேற்றுள்ளார். முன்னர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த திரு.மோனகுருசாமி பொதுசனமுன்னணி அரசு பதவியேற்றது முதல் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

மீண்டும் அவர் அரச அதிபராகப் பதவியேற்றதை வரவேற்று மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அவ் வைபவத்தில் கருத்துத் தெரிவித்த திரு.மோனகுருசாமி, "தற்போதைய இக்கட்டான போர்ச்சூழலிலும் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் அரசசார்பற்ற உள்நாட்டு, வெளிநாட்டு உதவி அமைப்புக்களின் முழுமையான பங்களிப்பும், ஆதரவும் தேவை.

மாவட்ட அபிவிருத்திக்கு எனக் கிடைக்கும் நிதியில் ஒரு சதம் கூடப் அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பப் படக் கூடாது. பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதில் கட்டுப்பாட்டுப் பகுதி, கட்டுப் பாடற்ற பகுதி என வேறு படுத்திப் பார்க்காமல் மக்களுக்கும் தேவைகள் எங்குள்ளதோ அங்கு சேவை செய்ய வேண்டும். இதற்கு சகலரினதும் ஆதரவு தேவை!" என்றார்.

இச்சந்திப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் பி.ஜெகநாதன், செயலாளர் எம்.கமலநாதன் மற்றும் 'வூஸ்க்' நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.மாமாங்க ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ் கல்விக் கல்லூரி

**யா**ழ் தேசிய கல்விக்கல்லூரி எதிர்வரும் 02.05.00 அன்று ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது. இதற்கான நடவடிக்கையினை யாழ் கல்விக்கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் அவர்கள் செய்து வருகிறார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்விக் கல்லூரிக்கு ஏழு பாடங்களுக்கு முதற்கட்டமாக 100 பயிற்சியாளனர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர்களே மேலதிகமாக கல்விக்கல்லூரியிலும் விரிவுரையாற்றவுள்ளனர்.

## 23வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
இன்பகௌரி
இராஜேஸ்வரன்

13.04.2000



மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த இராஜேஸ்வரன்-மகேஸ்வரி தம்பதியினரின் புதல்வி சுதா தனது இருபத்தி மூன்றாவது பிறந்த தினத்தை 13.04.2000 அன்று LONDONல் தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அன்பு அம்மா, அக்கா(மாலா) அத்தான், மகள்மார்(றுக்ஸ்சி, மேனா) மகன் (வவுனியா) தங்கைமார் (பிரியா, லக்கி) Lebanon மற்றும் இலங்கை வாழ் அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், தம்பிமார், London வாழ் நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: இ.மகேஸ்வரி (அம்மா)
Lebanon.


## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்ரல் 26 முதல் மே 03வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் மே 06, 07 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மே 13, 14 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## —கவலை வேண்டாம்—

உங்கள் பிரச்சனை எதுவாயினும் அதனை வெற்றிகரமாகத் தீர்வுகாண எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். ஜோதிட ரீதியான சகல விடயங்களும்; மற்றும் உங்கள் அந்தரங்க பாலியல் குறைபாடுகள்; காதல் விவகாரங்கள் "சித்தர் மாந்திரீக" முறையின்படி வெற்றிகரமாகத்தீர்வு காணப்படும். வெளிநாட்டு அன்பர்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். இரகசியம் பூரணமாகப் பேணப்படும். நேரில் வருபவர்கள் முன் கூட்டியே உங்கள் சந்திப்புக்கான நேரத்தைப் பதிவு செய்யவும்.

**"SHAKTHY SARAVANA"**

வியாழன் விடுமுறை.

48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. T.P 723646



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு
* இளைப்பு
* மூச்சுத்தட்டல்
* சளி
* தலைவலி
* இழுப்பு
* மாய்ச்சல்
* இருமல்
* மூக்கடைப்பு
* தும்மல்
* பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

30.10.97 வீரகேசரி - தினக்குரல் பேப்பரில் வெளிவந்தது.

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பலவருடங்களாக இரவு பகலாக நித்திரையின்றி அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இல.25, சென் சில்வெஸ்டர் றோட், கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப்பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ் பெர்னான்டோ 156/44, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு.

டொக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.DH(Ind); M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்)

தொலைபேசி 074-201582 -- 728767

இவ்விடத்தில் பழைய நோயாளர் களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய் - வியாழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00 மணி வரையும் பார்வையிடப்படுவர்.

சகல புதிய நோயாளர்களும் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் நான்கு நாட்களுக்கு முன்பு பதிவு செய்து வரவும். தூர மாவட்டத்திலுள்ள நோயாளர்கள் காலை நேரங்களிலும் பார்வையிடப்படுவர்.



## விளம்பரப் பகுதி

**தபால் மூலம் விஞ்ஞானம்**

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்:
குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

P.T.C
14, Covington Road,
Batticaloa.

மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தில், எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9- மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி.

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13
Tel. 342463, 344831, 431137
Fax: 0094 1 342464


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு — 1976 ♦ 05 ♦ 31



உதிர்வு — 1999 ♦ 04 ♦ 02

**செல்வி வேலன் கோமதி**


முன்னம் போடி வெட்டை, தோப்பூர்.

கண்ணுக்குள் உன் அழகு முகம்
கல்லினில் செதுக்கிய
கலையாத ஓவியமாக
காட்சி யளிக்குதடி-உன்
கடைசி ஊர்வலம்
காணாத
கருவறை சொந்தங்களும்
கடைசிவரை உன்முகம்
காணாமல்
கசங்கிப்போன
காகித நண்பர்களும்
கதறியழும் சத்தம்-உன்
காதுகளில் கேட்கட்டும்.
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்தனை
செய்யும்:
அம்மா, அப்பா,
அக்காமார், தம்பிமார்,
மைத்துனன் நண்பர்கள்.

தகவல்: எஸ்.சிவா
டோகா கட்டார்.

'தகவல் பிந்தியதற்கு மன்னிக்கவும்'

## முதலாண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 14.10.1937
மறைவு : 18.04.1999

**பரதன்
வேல்முருகன்**

(காலஞ்சென்ற திரு. க.பரதன் திருமதி.ப.பத்தினியம்மா தம்பதிகளின் புதல்வர்) முன்னாள் திருகோணமலை, இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்.

அன்பின் திருவுருவாய் ஆதரவின் பிறப்பிடமாய்
கடமையின் வரனாய், நல்லதொரு தந்தையாய்
எம்மைக் காக்கவென, சவூதி அரேபியாவில்
அல்லும் பகலும் பாடுபட்டு அகால மரணம்
அடைந்தாலும் உங்கள் நினைவுகள்
எத்தனை ஆண்டு கழிந்தாலும் எங்கள்
நெஞ்சத்தை விட்டு ஒருபோதும் நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
கண்ணீரோடு பிரார்த்திக்கிறோம்.
பிரிவுத் துயரில் தவிக்கும்
மனைவி-மக்கள்-மருமக்கள்
பேரப்பிள்ளைகள்-சகோதர, சகோதரிகள்
உறவினர்கள்-நண்பர்கள்.

தகவல்: வே.பிரேமானந்த் (மகன்)
24, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.


உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

* காய்ச்சல்
* தலைவலி
* தலைச்சுற்று
* தலைப்பாரம்
* ஜலதோஷம்
* இருமல்
* மூக்கடைப்பு
* பல்வலி
* காதுவலி
* வயிற்றுவலி
* வாதத்தால் வரும் வலிகள்
* உணர்ச்சியற்ற பாகங்கள்
* சுளுக்கு
* தசை வலிகள்
* பூச்சிக் கடிகள்
* பிரயாணக் களைப்பு
* மதுவால் ஏற்படும் பிரச்சினை




ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984


## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி. முருகேசு இராசம்மா** திதி:20.04.2000


**தோற்றம் : 1937.08.12 // மறைவு : 1999.04.02**

அன்பின் திருவுருவமாய் எங்களுக்காகவே வாழ்ந்து வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே! மின்னலென மறைந்து ஓராண்டு சென்ற போதும் கூட உங்கள் திருவுருவம் பாசம் நிறைந்த நினைவுகள் என்றும் எங்களை விட்டு நீங்காத நினைவலைகளாய் நிற்கின்றன! உங்கள் பிரிவால் தவித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த வண்ணம் வாழும்-மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

தகவல்: மகன்மார் புஸ்பகுமார்-சுவிஸ், திருக்குமார்-டோஹார் கட்டார்.

## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு ✻ 12 ✻ 04 ✻ 1936



உதிர்வு ✻ 04 ✻ 05 ✻ 1999

**அமரர் திரு.சிதம்பரநாதர் கணபதிப்பிள்ளை**

திதி: 22.04.2000


அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய் எம் குடும்பத்தின் குலவிளக்காய் எங்களுக்காகவே வாழ்ந்து நல்வழிகாட்டிய அன்பு ஐயாவே நீங்கள் எங்களை விட்டு மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் பாசம் நிறைந்த திருவுருவம் என்றுமே எங்களை விட்டு நீங்கா நினைவலைகளாக நிற்கின்றன. எம்மை எல்லாம் ஆளாக்கி வளர்த்து எங்களை எல்லாம் மீளாத்துயரில் விட்டுச் சென்ற அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நீர்வையூர் விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கும். மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல் : க.சிவகுமார்-மகன் ஜேர்மனி
க.நந்தகுமார்-மகன் சுவிஸ்.

ETZELSTRASSE STR - 27
8852 ALTENDORF
SWITZERLAND.
T.P NO. 0554421698

## நீங்காத நினைவில் ஓராண்டு நிறைவு

தோற்றம் ✻ 31 ✻ 12 ✻ 1964



மறைவு ✻ 28 ✻ 03 ✻ 1999

**திருமதி.கதிரமலைராசா ஆன்கிறிஸ்டின் (ராஜி)**

(மன்னார் உயிலங்குளத்தைப் பிறப்பிடமாகவும், பெரியபண்டிவிரிச்சானை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டவர்)

விண் தொட்ட காலம் ஓராண்டு சென்றாலும்
மண் விட்டு நீர்தான் மறைந்து போனாலும்
மனம் விட்டு உங்கள் நினைவு மறையாது.
ராஜியே! தாங்காத வேதனையால் அழுதழுது வாழ்கின்றோம்
எங்கள் துயர்தீர்க்க மீண்டும் ஒரு பிறவி எடுத்து நீங்கள் வாருங்கள்.
எங்களோடு வாழ்வதற்கு.
ஆத்மா சாந்தியடையச் சத்தியப் பேரொளியைத் துதிக்கும்,
அன்புக் கணவர், பிள்ளைகள், தாய், தம்பிமார், தங்கைமார், உற்றார் உறவினர் அயலவர்கள்.

தகவல்: சண்முகநாதன் மேரித்திரேசா,
1108, பாலையூற்று, திருக்கோணமலை.

# குமாரின் பெயரில் குளிர்காயும் பேர்வழிகள்

இறப்பிலிருந்தும் அற்ப அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ளும் கயமைத்தனம் அன்று முதல் இன்றுவரை எம்அரசியல்வாதிகளிடம் காணக் கூடியதாயிருக்கும் ஒரு சாபக்கேடு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதற் தற்கொலைப் போராளி சிவகுமாரனின் மரணத்தின் போதும் அவரது உடல் மேல் தமது கட்சிக் கொடியைப் போர்த்தி அம் மரணத்தினின்றும் ஆதாயம் தேட முற்பட்ட அன்றைய அரசியல்வாதிகள் போல், இப்போது குமார் பொன்னம்பலத்தின் மரணத் தையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தங்கள் தலைகளை உயர்த்திக் கொள்ள சிற சில சக்திகள் முற்படத்தான் செய்கின்றன.

இப்படியான 'செல்வாக்குத் திருடர்களின்' கயமைத்தனம் எதுவென்றால் இறந்தவரின் கொள்கைகளையும் வழிமுறைகளையும் அவர்கள் மனதார ஏற்பதில்லை. ஆனால் அவருக்கு அம் மரணம் ஈட்டித்தந்த புகழை மட்டும் தம்தாக்கிக் கொள்ள விளைவார்கள்.

குமார் பொன்னம்பலத்தின் மரணமானது ஒரு கோழைத் தனமான படுகொலையால் நடந்தது. கொலையாளிகள் இப் படுகொலை மூலம் அவரது செயற்பாட்டை நிறுத்தவே விளைந்தனர். ஆனால் இப் படுகொலை அவரது செயல்பாட்டை நிறுத்தினாலும் அவரது செல்வாக்கை மிக உயரத்திற்கு உயர்த்திவிட்டது.

இப்போது, அவருக்கு மரணத்தைத் தேடித்தந்த அவரது செயற்பாட்டையும் மரணம் தேடித்தந்த செல்வாக்கையும் வேறாக்கி, செயற்பாட்டை விடுத்து செல்வாக்கை மட்டும் சுவீகரித்துக் கொள்ள சில சக்திகள் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

குமார் பொன்னம்பலத்தின் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸூக்குள் புகுந்து குமாரின் பெயரைக் கோஷித்தபடியே அவரின் செல்வாக்கில் தாம் அரசியல் பிரமுகர்களாக உயரலாமென இந்த 'செல்வாக்குத் திருடர்களில்' ஒருசிலர் முயற்சித்தனர். இதன் மூலம் குறுக்கு வழியில் பிரபலமும், பாராளுமன்றப் பிரவேசத்துக்கான வாய்ப்பும் கிட்டலாமென அவர்கள் மனக்கோட்டை கட்டியிருந்தனர்.

ஆனால் இவர்கள் குமார் மீது காட்டிய இந்தப் போலி அனுதாபப் பாசாங்கின் பின்னாலிருந்த உள் நோக்கத்தைப் புரிந்து கொண்ட குமாரின் மனைவியும், ஏனைய அக்கட்சி உயர்மட்ட உறுப்பினர்களும், இவர்களின் ஊடுருவலுக்கு இடமளிக்காது மிக இறுக்கமாக நின்று கொண்டதனால் இவர்களின் இம் முயற்சி பலிக்கவில்லை.

இதனையடுத்து குமாரின் பெயரையும், செல்வாக்கையும் அவரது கட்சியிலிருந்து பிரித்து எடுத்து தமக்கான ஒரு பொதுச் சுலோகமாக மாற்றிக்கொள்ள முற்பட்டார்கள். இதற்காக இவர்கள், குமாருக்கான அஞ்சலிக் கூட்டங்கள், இரங்கல் கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி, குமார் ஒரு பொதுப் பிரஜை, என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம், அவர் மீது அவரது கட்சிக்கிருந்த பிடிமானத்தையும், உரித்தையும் தளர்த்தி, தாமும் குமாரின் பெயரில் அரசியல் செய்ய வழி தேடினார்கள். ஆனால் இவர்களால் இம் முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. காரணம், இவர்கள் யாவரும் ஒரே கொள்கை கோட்பாடுகளைக் கொண்டவர்களுமல்ல; ஒருவரை ஒருவர் நம்புபவர்களோ, விசுவாசிப்பவர்களோ அல்ல. குமாரின் மரணத்தோடு அவருக்கு ஏற்பட்ட செல்வாக்கில் குளிர்காயக் கூடியவர்களே. இதேவேளை இவர்கள் மீது குமாரின் கட்சியினருக்கு பலத்த சந்தேகம் விளைந்துமிருந்தது. இதனால் வெறும் அஞ்சலிக் கூட்டம், இரங்கல் கூட்டம் என்ற பெயரில் அவர்களால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

குமார் பொன்னம்பலமும் பாராளுமன்றம் செல்ல முயற்சித்தவர்தான். ஆனால் அவர் குறுக்கு வழியில் அதை ஈட்டிக்கொள்ள முனையவில்லை. பலதடவை தோல்வியைத் தழுவினாலும், அத் தோல்வியை ஏற்படுத்திய தமிழ் வாக்காளர்களை அவர் பல தடவை 'உணர்ச்சியற்றவர்கள்' எனத் திட்டியிருந்தாலும், மீண்டும் தான் மக்கள் செல்வாக்கினூடாகப் பாராளுமன்றம் செல்லவே முனைந்தார்.

அவர் நினைத்திருந்தால் குறுக்கு வழியால் பாராளுமன்றம் செல்வது அவருக்கு மிகச் சுலபமாக இருந்திருக்கும். அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூட்டுச் சேர்ந்து இயங்கிய சிங்களப் பெரும்பாண்மைக் கட்சிகளோடு இணங்கிப் போயிருந்தால், அவர்களின் போனஸ் ஆசனத்திலொன்றை அவர் பெற்றிருக்கலாம். அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கூடாக ஒரு ஆசனத்தைப் பெற்றிருக்கலாம்.

ஆனால் அவர் இவ்வாறானக் குறுக்கு வழிகளை முற்றாக நிராகரித்திருந்தார். தோல்விமேல் தோல்வி கண்டாலும் தான் தொடர்ந்து அதே மக்கள் முன் சென்று, அவர்கள் வாயிலாக, ஒரு அங்க்காரமுள்ள பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் படவே விரும்பினார்.

குமார், அப்படியானவராயிருக்க, இன்று குமாரின் பெயரில் குளிர்காய முற்படும் பேர்வழிகளோ, தம் பெயரைக் கெடுத்தும் பதவிகளைப் பற்றிக் கொள்ளப் பறக்கிறார்கள்.

இத்தகையோரில் ஒருவர் ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் விலத்தப்பட்டனரல்லவா? அவர் களின் இடத்தைத் தனக்குத் தந்தருளுமாறு அவர் பையவே சென்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பௌவியமாகக் கையேந்தினார். இதற்காக அவர், விலத்தப்பட்டவர்களுடனும் பேசி அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் பெற்றுவிட்டதாகக் கூறி மன்றாடியுள்ளார். ஆனாலும், பாவம், அவரது அந்த முயற்சி பலிக்கவில்லை.

இப்படிப்பட்டவர்கள்தான் மிக வீறாப்புடன் இன்று பேசுகிறார்கள், எழுதுகிறார்கள், சில ஸ்டண்ட்டுகளையும் செய்கிறார்கள். திருக்கேதீஸ்வரத்துக்கு பக்தர்கள் போக விட வேண்டுமென்று (அதற்கான அனுமதியைப் பெற்று விட்ட பின்பும்) உண்ணாவிரதம் இருந்தார்கள்.

ஈ.பி.டி.பி. யின் கொள்கைகளிலோ, வழிமுறைகளிலோ நம்பிக்கையில்லை- ஆனால் அதன் எம்.பி. பதவி வேண்டும். குமார் பொன்னம்பலத்தின் செயற்பாட்டையோ, கடப்பாட்டையோ, கடைப்பிடிக்கப் போவதில்லை, ஆனால் அவரது புகழில் பங்கு வேண்டும். தமிழர்களின் உரிமை பற்றியும், பெருமை பற்றியும் தமிழர்கள் தொடர்ந்து ஞாபகப் படுத்தி எழுதிவர வேண்டும். ஆனால் அந்த ஞாபகங்கள் தனக்குத் தேவையில்லை. அரசாங்கத்தினது சூழ்ச்சிகள், கபட நாடகங்களால் மக்கள் ஏமாற்றப்படக்கூடாது, ஆனால் தம்மால் ஏமாற்றப் படலாம்.

இத்தகைய புதிய பிரமுகர்கள் இன்று அரசியல் சகதிக்குள்ளிருந்து தலை நிமிர்த்துகின்றனர். இவர்களிடம் விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம். நாம் குமாரை ஒருமுறை இழந்துவிட்டது உண்மைதான். ஆனால் குமாரை மறுபடி இவர்களிடம் நாம் இழந்துவிடக் கூடாது.

குமாரின் பெயரைக் கொண்டு குறுக்கு வழியில் ஆதாயம்கான இவர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் மாற்று வழிகளைத் தேடும் முனைப்பில் இப்போது இவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

குமார் பொன்னம்பலம் கூட கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு பொதுவேட்பாளராக நிற்க விருப்பப்பட்டிருந்தார். அவர் அதற்கு புலிகளின் அனுமதி கிடைக்குமென எதிர்பார்த்திருந்தார். ஆனால் புலிகளின் எண்ணம் வேறாக இருந்தது. இதை அறிந்ததும் அவர் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். அத்தோடு பொதுவேட் பாளர் என்ற முயற்சியையும் புலிகளின நிலையில் நின்று தானும் எதிர்த்தார்.

இந்த விடயத்தில் புலிகளை மனம்மாற்ற முடியாது போன குமார் பொன்னம்பலத்தையும் மிஞ்சி, தம்மால் புலிகளின் தயவைப் பெற்று அரசியல் நடத்த முடியும் என்ற நப்பாசை இப்போது இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

புலிகள் ஆயுதப் போராட்டத்தை விட்டு நேரடி அரசியலில் இறங்க முன்வர மாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கான அரசியலை தாம் நடத்த அவர்கள் தம்மை அனுமதிப்பார்கள் என இவர்கள் கனவு காணுகின்றனர். சுருங்கச் சொன்னால் புலிகள் போராட அதன் அரசியல் ஆதாயங்களைத் தாம் சுருட்டிக் கொள்ளலாம்.

என இவர்கள் முனைகிறார்கள். இது குமாரின் பெயரைச் சுவீகரிக்க முனைந்ததைவிட கபடத்தனமான முயற்சி.

இதற்கு புலிகளை மயக்கவைக்கும் பல முனைப்புகளில் இவர்கள் இப்போது இறங்கியிருக்கிறார்கள். மனித உரிமை, மக்கள் உரிமை என்ற பெயர்களில் போராட்டங்கள், கருத்தரங்குகளை நடத்தி புலிகளின் நலனில் தாம் அக்கறை கொண்டவர்கள் என்ற ஒரு செய்தியை அவர்களுக்கு உணர்த்தப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறார்கள். புலிகள் இவற்றைக் கண்டுகொண்டால் அடுத்த கட்டமாக தாங்கள் அவர்களுக்கான அரசியல் பிரமுகர்களாகத் தொழிற்பட அவர்களின் கணிப்பு.

இத்தகைய ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதன் மூலம் இன்னும் பலரை இவர்கள் வெவ்வேறு இடங்களில் தமக்காக ஓடியாடிச் செயற்படவைக்க முனைந்து வருகிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகள் அத்துணை முட்டாள்களில்லை. அவர்களால் 'மாமனிதன்' பட்டமளிக்கப்பட்ட குமார் பொன்னம்பலத்தைக்கூட அவர்கள் அவ்வாறு செயற்பட அனுமதிக்கவில்லை.



இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்திலும் புலிகளுக்கான அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதாகக் கூறிக்கொண்டு அதன் கூட்டுக் கட்சியாக இருந்த ஈரோஸ் தேர்தலில் குதித்தது. ஆனால் அதன் பாராளுமன்றப் பிரதிநிதிகளால் புலிகளின் அரசியலை முன்னெடுக்க முடியவில்லை. அதைப் புலிகள் அனுமதிக்கவும் இல்லை. ஆக, அவர்களால் முடிந்த ஒரே காரியம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது ஒன்றைத்தவிர வேறு எதுவுமில்லை. அவர்களால் எந்தவொரு துரும்பையும் அங்கு அசைக்க முடியவில்லை. இதைக்கூட புலிகள் நீடிக்க விடவில்லை. மிக விரைவிலேயே பாராளுமன்றத்திலிருந்து ராஜினாமாச் செய்து கொண்டு ஈரோஸ் திரும்பியது. அது மட்டுமன்றி தமது அமைப்பையே கலைத்துவிட்டு புலிகளுடன் சங்கமமாக நேர்ந்தது.

புலிகள் தமக்காக தாமேதான், பிரதிநிதம் செய்வார்களேயன்றி, தமது பிரதிநிதத்தை மற்றவர்களுக்கு பிரித்து வழங்க மாட்டார்கள் என்பதை பல தடவை நிரூபித்துள்ளார்கள். அவசியமானால் மற்றையோரைத் தமது செயற்பாட்டுக்கு உதவியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் பிரதிநிதிகளாக அல்ல. தமக்குச் சார்பாக யாராவது போராட்டம் நடத்தினால், அறிக்கை விட்டால், கட்டுரை எழுதினால், அவர்கள் தடுக்கப் போவதிலல்ல. வரவேற்கவும் கூடும். ஆனால் தமக்காக வேறு எவரும் செயற்படுவதை, அங்கீகரிக்க மாட்டார்கள்.

சார்பாகச் செயற்படுவது என்பதும் அவர்களுக்காகச் செயற்படுவது என்பதும் பாரிய வேறுபாடுடைய இரு வேறு விடயங்கள். அதனை புலிகளின் முதுகிலும் 'குதிரை' ஓடலாம் எனக் கற்பனை கட்டும் இந்தக் கனவான்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். சார்பாக ஓடுபவர்கள் ஓடலாம். அங்கு இவர்களின் ஓட்டத்தால் புலிகளுக்கே நன்மை. ஆனால் அவர்களுக்காக ஓட முனையும் போது புலிகளின் பெயரில் இவர்கள் நன்மை பெற முனைவதாகிறது. இதைப் புலிகள் அறிவார்கள்.

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புலிகள் ரணிலை ஆதரிக்கும்வகையில் எடுத்த நிலைப்பாடும் யாழ்க் குடாநாடு தவிர்ந்த ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் அதற்கு கிடைத்த வெற்றியும் இந்தப் புதிய அணியினருக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது ரணிலையே ஆதரிக்க கோரியவர்கள் ஏன் தாம் புலிகள் சார்பாக இயங்குவதாகக் காண்பித்து தேர்தலில் நின்றால் தம்மை ஆதரிக்கும்படி தமிழ் மக்களைக் கோர மாட்டார்கள் என எண்ணமிடுகிறார்கள். அத்தோடு, மற்றைய தமிழ்க் கட்சிகளிடம் இந்தப் பிரதிநிதுகள் சிக்கு வதைவிட தம்மை நல்லதொரு மாற்றீடாக அவர்கள் கருதக் கூடுமெனவும் இவர்கள் கற்பனை காட்டுகிறார்கள்.

அத்தோடு இந்தப் புதிய, அரசியல் நப்பாசைக்காரருக்கு நம்பிக்கை தருவதாக இருக்கும் மற்றொரு விடயம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஜோசெப் பரராசசிங்கத்தின் செயற்பாடுகள். ஜோசெப் பரராசசிங்கம் கூட்டணியில் இருந்து கொண்டே புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட முடிகிறது. புலிகள் கூட்டணி உறுப்பினர்களை துரோகிகள் என்ற கருத்தில் சுட்டுக் கொல்லம் போதே-மூதூர் எம்.பி.தங்கதுரை யாழ் மேயர்கள், திருமதி.சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் போன்றோர் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட போதும், அதைக் கண்டிக்காமலே, மாறாக அப்படியான கண்டனம் எதையும் தான் தெரிவிக்கவில்லையென மறுப்பறிக்கைவிட்டுக் கொண்டே, அவரால் பாதுகாப்பாக கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட முடிகிறது. இதற்கமைய அவர் புலிகளோடு பேணிவந்த உறவைக்கண்டு இந்த அரசியல் நப்பாசைக் காரருக்கும் நாவில் ஜலம் ஊறுகிறது.

சிலகாலத்திற்கு முன் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை ராஜினாமாச் செய்யும்படியான அறிவித்தலொன்றை புலிகள் விடுக்கவிருந்த போதும் அவர்களுடன் பேசி அவ்வறிவிப்பை தடுத்து நிறுத்த ஜோசெப் பரராசசிங்கத்தால் முடிந்தது.

இவ்வாறு தம்மாலும் புலிகள் மீது செல்வாக்குச் செலுத்தி காலாகாலத்தில் எழக்கூடிய நெருக்குதல்களைச் சமாளிக்க முடியுமென இவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இந்த அ.ந.காரரின் எண்ண மெல்லாம் எங்கு தவிடுபொடியாகிறதென்றால், அவர்களால் ஒரு ஜோசெப் பரராசசிங்கம் ஆக முடியாதென்பதில்தான் ஏனெனில் ஜோசெப் பரராசசிங்கம்புலிகளால் பாராளு மன்ற உறுப்பினரானவரல்ல. கூட்டணியின் உறுப்பினராகப் பாராளுமன்றம் சென்றவர். கூட்டணி உறுப்பினராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துகொண்டு புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுபவர். அதுவும்சில சமயங்களில் கூட்டணியின் கருத்துக்கு மாறாகவே புலிகள் சார்பாக இயங்கியவர்.

அவரது செயற்பாடு 'ஆதரவு' என்ற வகையில் அமைந்திருக்கிறது. இங்கே ஜோசெப்பால்தான் புலிகளுக்கு நன்மை. ஆனால் இந்த அ.ந.காரர் புலிகளால் தமக்கு நன்மை பெறும் எண்ணத்தில் உள்ளனர்.

அவர்கள் புலிகளுக்காக அரசியற்கட்சி நடத்தலாமென முனைகின்றனர். புலிகளுக்கான அரசியல் கட்சியை அவர்கள் வேறுயாரையும் நடத்த விடமாட்டார்கள்.

கூட்டணியின் நிலைமை வேறு, அது தனியொரு கட்சி. புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட கட்சி. புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கூறினாலும் போட்டியிடக்கூடிய கட்சி. (யாழ் உள்ளூராட்சி தேர்தல்களிலும் அவ்வாறே புலிகளின் கருத்துக்கு முரணாகவே அது போட்டியிட்டது.) அது போல் குமாரின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் தனியொரு கட்சி. அவற்றிலிருந்துகொண்டு ஜோசெப்பும், குமாரும் புலிகளை ஆதரித்தால் புலிகளின் கணக்குப் புத்தகத்தில் வரவுதான்.

ஆனால் அ.ந.காரின் விடயம் வேறு. அவர்கள் புலிகளுக்காகப் பேசுகின்ற கட்சியாகவே தங்களுக்கு ஒரு அங்கீகாரத் தைச் சுவீகரித்துக் கொண்டு புலிகளின் பிரதிநிதிகள் போல் அரசியல் செய்ய விளைகின்றனர்.

இதற்கு புலிகள் இணங்கப் போவதில்லை. புலிகளுக்காகப் பேசுகின்ற அரசியற்பட்சி தேவையென்றால் அதைப் புலிகளே அமைத்துக் கொள்வார்கள். ஏற்கெனவே புலிகள் தமது அரசியற் கட்சியை மாத்தையாவைச் செயலாளராகக் கொண்டு அமைத்திருந்தார்கள். அந்த மாத்தையாகூட புலிகளின் தலைமையின் நம்பிக்கைக்குரியவராக இருக்கவில்லையெனில் எங்கோ, மழைக்கு முளைத்த காளான்கள் போல், முன்னர் இருந்த இடம் தெரியாதிருந்து விட்டு திடீர் திடீரெனத் தோன்றி 'ஆதரவு' அட்டை பிடிக்கும் இவர்களை புலிகள் நம்பிவிடப் போவதில்லை.

சந்தர்ப்பம் கிடைத்தால் அற்ப நலன்களுக்காக இவர்கள் எந்தக் கரணமும் போடக் கூடியவர்கள் என்பதை இவர்களில் ஒருவர் இரகசியமாக எம்.பி. பதவிக்கு டக்ளஸிடம் யாசித்ததிலிருந்து காணலாம். அதே நபர் வெளியே வீறாப்புக் கட்டுரைகளை எழுதுவதிலும் பின்னிற்பதில்லை. எனவே, இவர்களை எல்லை தாண்டி ஓட விட்டால் எங்குபோய் முடியுமென்பது புலிகளுக்கும் தெரியும்.

அத்தோடு புலிகளுக்காக இவர்கள் தேர்தலில் இறங்கி தோல்வியைத் தழுவினால் புலிகளின் செல்வாக்குப் பற்றிய கணிப்புக்குத்தான் இழுக்கேற்படும்.

ஆகவே, இந்த அ.ந.காரருக்கு எதிர்வரக்கூடிய பொதுத்தேர்தலில் குறியிருந்தாலும், புலிகளின் முதுகில் சவாரிவிடும் யோசனையை கைவிடவே நேரிடும். அப்படியானால் தனித்த சுயமான ஒரு கட்சியாக அவர்கள் தம்மை முன்னிலைப்படுத்த வேண்டியிருக்கும்.

அதற்கு, புலிகளின் ஆதரவில்லாவிட்டாலும், எதிர்ப்பு இல்லாது பார்த்துக் கொள்வதே பிரதானமான காரியமாகிவிடும்.

இதேவேளை இந்த அ.ந.காரருக்குள் இருக்கும் ஒவ்வொருவரது நப்பாசைகளும் வேறுபட்டிருக்க, இவர்கள் ஒருவரை மேவி ஒருவர் ஓடாமல் ஒன்றுபட்டு இயங்கவும் வேண்டும்.

யாவற்கும் மேலாக, இத்தகைய ஒரு நிலையில் அவர்கள் மக்கள் செல்வாக்கைச் சம்பாதித்துக் கொள்ளவும் வேண்டும்.

யாவற்றையும் பார்க்கையில், குமாரின் மரணத்தோடு தோன்றிய இந்தக் கோஷ்டியின் கனவு, மிக நீண்ட காலம் நீடிக்காது கலைந்து போய்விடக் கூடுமென்றே தோன்றுகிறது. ஏனெனில்

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்.
பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்.
எல்லோரையும் எல்லாக்காலமும்
ஏமாற்ற முடியாதல்லவா!?

-நரன்-

## செய்திச் சிதறல்

★ யாழ் நகரிலும் பொதுவாகக் குடாநாட்டிலும் இம்முறை சித்திரைப் புத்தாண்டு சோபிக்கவில்லை. வழமையான கேளிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. தென்மராட்சியிலும் ஏனைய பகுதிகளிலும் யுத்தம் தொடர்வதாலும் போர் நடைபெறும் பிரதேசங்களிலிருந்து அப்பாவிப் பொது மக்கள் வெளியேற முடியாமல் திண்டாடுவதனை எதிர்த்து கடையடைப்புமறியல் போராட்டங்கள் நடைபெற்றுவருவதனாலும், மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட முடியாத நிலையிலுள்ளனர். இருப்பினும் ஆலயங்களுக்கு மக்கள் திரண்டு சென்று பிரார்த்தித்து வருவதைக் காணக் கூடியதாகவிருந்தது.

★ ஆனையிறவு முகாமைத் தாக்கித் தம்வசமாக்கிக் கொண்டு யாழ்குடாநாட்டின் ஆதிக்கத்தைத் தமது அதிகாரத்துள் கொண்டு வந்து விடும் நோக்கத்துடன் புலிகள் இயக்கப் போராளிகள் தொடங்கிய "ஓயாத அலைகள்" மூன்றாம் கட்டப் போர் தொடர்கிறது. சித்திரைப் புத்தாண்டுக்குக் கூட யுத்தம் தணியவில்லை. தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணமே இருக்கின்றன. சங்குப்பிட்டி, கோவிலாக்கண்டி, வெட்டுக்காடு கிழக்கு, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் புலிகளின் மறைவிடங்களைத் தேடி அழிப்பதில் ஈடுபட்ட படையினர் மொத்தம் 14 புலிகளைக் கொன்றதாகவும் இராணுவப் பிரிவினர் தெரிவித்தனர்.

★ சக்தி தொலைக்காட்சியும் சக்தி வானொலியும் இணைந்து திருகோணமலை விளையாட்டரங்கில் கடந்த 12ம் திகதி புதன்கிழமை ஏற்பாடு செய்திருந்த இசைநிகழ்ச்சியின் போது குண்டொன்று வெடித்தமையினால் 8 பேர் உயிரிழந்தனர். 60க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

★ யுத்தம் நடைபெறுகின்ற பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்குச் செல்ல இராணுவத்தின் அனுமதி கிடைக்காமல் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். யாழ் அரசாங்க அதிபர், அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், மற்றும் யாழ் ஆயர், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் எவ்வளவோ முயன்றும் அம்மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை. ஆனால் அவ்வப்போது சிறு சிறு குழுக்களாக இவர்கள் வெறியேற இராணுவம் அனுமதி அளித்தது.

★ போர் நடைபெறும் வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறி பருத்தித்துறை மற்றும் அம்பன் பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு கடந்த 15ம் திகதி வரை உரிய நேரத்தில் நிவாரணம் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. இப் பகுதியிலுள்ள சமூகசேவை மன்றங்கள் பொது அமைப்புகள் சில நாட்கள் உணவு வழங்கினர். இருப்பினும் இத்தனையும் தொடர வசதிகள் போதவில்லை.

★ செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள அரந்தலாவை பொலிஸ் நிலையத்தை 14ம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் புலிகள் தாக்கினர். ஊர்காவல் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார். பொலிஸ்நிலையத்திலிருந்த 3 துப்பாக்கிகளையும் புலிகள் எடுத்துச் சென்றனர். அப்பகுதியில் தேடுதல் நடத்திவிட்டு இராணுவத்தினர் திரும்பும் போது, புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்குட்பட்டனர். இதில் படையினர் நால்வர் கொல்லப்பட்டனர்; 15 பேர் காயமடைந்தனர்.

★ கல்முனையை அடுத்த கிட்டங்கியில் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிச் சேதமடைந்தது. பயணம் செய்த வெல்லாவெளி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயநாத் என்பவரும் மற்றும் 6 பொலிஸாரும் காயமடைந்தனர், 14ம் திகதி வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

புலிகளிடமும்
பிரேமதாஸாவிடமும்
ஒரேவிதமான
குணமொன்று
இருந்தது.

அவர்கள்,
நண்பனென யாரையும்
கருதிவிட்டால்
அவனுக்காகச்
சொர்க்கத்தையும்
படைத்துக் கொடுப்பார்கள்.
எதிரியாகக் கருதினாலோ
நரகத்தின் கீழேதான்
வைத்திருப்பார்கள்.
ஆனால்
நண்பனாக இருந்து
எதிரியாக மாறியவனை-
அதாவது துரோகியை
மன்னிக்கவே மட்டார்கள்!

புலிகள்- பிரேமதாஸா
உறவில்
முறிவு கண்டதும்
முந்திக் கொண்டவர்கள்
புலிகள்.
அதனால் இம்முறை
பிரேமதாஸாவின் பாச்சா
புலிகளிடம் பலிக்கவில்லை.

பிரேமதாஸாவிடம்
ஒரு காட்டு விலங்குக்குரிய
தற்காப்பு உணர்வு
நிறைந்திருந்தது.
தன்னை எதிரி
அண்மிக்கு முன்னர்
அவனைத்
தூரத்தில் வைத்தே
அழித்து விடுவது
அவரது பாணி.

பிரேமதாஸாவுக்குச்
சவாலாகக் கிளம்பிய
பல்வேறு பிரமுகர்கள்
பாதியிலேயே மறைந்தனர்.

அவர்கள்
சின்னஞ் சிறிய
நபர்களாயிருந்தாலும்சரி,
பெரிய அரசியல் மற்றும்
சமூகச் செல்வாக்கு
மிக்கவர்களாயிருந்தாலும் சரி,
எதிராகச் செயற்பட்டால்
அதோகதிதான்.

பிரேமதாஸாவின்
மனைவியானஹேமா பிரேமதாஸா
'நெட்போல்' விளையாடும்போது
ஆடை விலகியதைப்
படமெடுத்ததாகக்
கருதப்படும்
படப்பிடிப்பாளர் ஒருவரை-
அப்படம் பத்திரிகை ஒன்றில்
வெளியான பின்
காணவில்லை.

பிரேமதாஸாவுக்குச்
சவாலாக வரக்கூடிய
ஜனாதிபதி வேட்பாளராக
வளர்ந்து வந்த
விஜய குமாரணதுங்கா
சுட்டுக் கொல்லப்பட்டார்.
அதற்கான பொறுப்பு
ஜே.வி.பி. மீது
சுமத்தப் பட்டாலும்
பிரேமதாஸாவின் மீதான
சந்தேகம்
பலமாக எழும்பியது.

இதே போலத்தான்
மேஜர் ஜெனரல்
கொப்பேகடுவ
படுகொலை செய்யப்பட்ட
சம்பவம் தொடர்பாகவும்
சந்தேகம் எழுந்தது.

பிரேமதாஸாவை
இனியில்லை என்ற அளவு
சோதனைக் குள்ளாக்கிய
லலித் அத்துலத் முதலியின்
படுகொலைக்கும்



பிரேமதாஸாவே
மூல காரணமெனக்
குற்றச்சாட்டு எழுந்தது.

ஜே.வி.பி. தலைவர்
ரோகண விஜயவீரா கூட
பிரேமதாஸா ஆட்சியில்
கைதான பின்னரும்
சிறையிலே கொல்லப்பட்டார்.

ஜே.ஆரின் ஆட்சியில்
பிரேமதாஸாவுக்குச் சவாலாக
முளைத்து வந்து-
நிதிஅமைச்சராக
நியமிக்கப் படக்கூடுமென
எதிர்பார்க்கப்பட்ட-
உப்பாலி விஜயவர்தனா
எனும் அதிபெரும் தனவந்தர்
தன் சொந்த விமானத்தில்
பயணம் செய்தபோதே
குண்டு வெடித்துக்
கொல்லப்பட்டதற்கும்
பிரேமதாஸாவே காரணமென
வதந்திகள் பரவின.

எதிரிகளை
விட்டுவைக்காத
சுபாவம் படைத்த
பிரேமதாஸாவுக்கு
பிரதானமான
பலஹீனமொன்றிருந்தது.

அதுதான் அவரது
தாழ்வு மனப்பான்மை.
தனக்கு முந்திய
ஐ.தே.க. தலைமைகள்
உயர் சமூகத்திலிருந்து வந்த
பிரதிநிதிகளாக இருக்க
தான் ஒரு
தாழ்ந்த சமூகத்தவன்
என்ற ஒரு
தாழ்வு மனப்பான்மை
அவரிடம் இருந்தது.

தாழ்வு மனப்பான்மைகள்
உள்ளவர்கள் தங்கள்
குறைபாடுகளை மறைக்கவெண்ணி
அதீதமாகச் செயற்படுவதுண்டு.
ஒற்றைக்கால் குள்ளமானவன்
மற்றைய பக்கம்
அதிகமாகச் சரிந்தபடி
நடப்பதைப் போல.

பிரேமதாஸாவிடம்
ஊன்றியிருந்த இப்பலஹீனமே
தன் மீதான 'இமேஜ்' பற்றி
அதிகூடிய கரிசனையை
அவருக்கு ஏற்படுத்தியது.

சாதாரண
சிங்கள மக்களின்
நம்பிக்கைக்குப் பாத்திரமான
தலைவராகத்
தன்னைக் காண்பிப்பதில்
அதிக அக்கறைகாட்டியபடி
தன்னால் ஈடுகொடுக்க முடியாத
வேறு தகுதி கொண்ட
உட்கட்சிப் பிரமுகர்களை
ஓரம் கட்டி
ஒதுக்கி வைத்தார்.

ஏனைய எதிர்க் கட்சிகள்
தலையெடுக்க இயலாத அளவு
சகல வழிகளையும்
அடைத்து வைத்திருந்தார்.

செய்தித் தொடர்பு
சாதனங்கள் யாவற்றையும்
தனது கையிலேயே
முடக்கி வைத்திருந்து
தன்னையே எப்போதும்
பிரபலப்படுத்தி வந்தார்.

தன்னைப் பற்றிய
இமேஜின் மீது
சிறிதளவேனும்



மாசுபடுவதைத்
தாங்கமாட்டாதவர்
பிரேமதாஸா.

ஜே. ஆர்.ஜெயவர்தனா
இந்திய-இலங்கை
ஒப்பந்தம் மேற்கொண்டபோது
தலைமையின் முடிவுக்கு மாறாக
கலந்துகொள்ளாமல்
விலகியிருந்ததும்
தன்மீதான இமேஜைக்
காப்பாற்றிக் கொள்ளத்தான்.

இத்தகைய
கௌரவப் பித்து
தலைநிறைந்திருந்த பிரேமதாஸா
புலிகளையும் தனது
எண்ணப்படியே
கையாள முடியுமென்றே
கணக்குப் போட்டார்.

தன்னுடைய
இமேஜுக்குக் குந்தகமாகச்
செயற்படவோ
பேசவோ முற்படும்
எவரையும் அழித்தொழிக்கத்
தனக்காக ஒரு
பாதாள உலகத்தை
நடத்தியவர் அவர்.

அவரை நையாண்டிசெய்து
நாடகம் எழுதிய
ரிச்சேட் டி சொய்சாவுக்கு
நடந்த கதி
யாவருக்கும் தெரியும்.

பணத்தையும் ஆயுதத்தையும்
தாராளமாய் வழங்கித்
தம்பிஷ்டப்படி
செயற்பட அனுமதித்தால்
விசுவாசமாய்த் தலைவணங்கும்
பாதாள உலகம் போல
புலிகளையும் அவர்
எடைபோட்டு விட்டார்.

ஆனால் புலிகளோ
பிரேமதாஸாவின்
பலஹீனங்களையெல்லாம்
துல்லியமாக
எடைபோட்டிருந்தனர்.

அவரது பலஹீனத்தால்
ஈட்டக்கூடிய
அனுகூலங்களை
ஈட்டிக் கொண்டு,
அவரது பலஹீனத்தைக் கொண்டே
அவரை விழுத்தத்
திட்டமிட்டனர்.

அவரைக் கொண்டு
சாதிக்கக் கூடியவற்றைச்
சாதித்துக் கொண்டே,
தம்மை அவரது
இக்கட்டான காலத்தில்
கைகொடுத்த நண்பனாகக்
காட்டிக் கொண்டே,
அவரது பிடிக்குள்
விழுந்து விடாமல்
போக்குக் காட்டிக்கொண்டு,
சென்று,
அவரையே வீழ்த்திய
அரசியல் சாணக்கியம்
புலிகளின் திறமைக்கு
நல்லதோர் எடுத்துக்காட்டு.

'பொடிப் பயல்கள்' என்று
புலிகளை மட்டம் தட்டிய
முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர்
தீக்ஷித்
இப்போது அவர்களின்
அரசியல் விவேகத்தையும்
போராட்ட உறுதியையும்
பாராட்டும் வகையில்
கருத்துக் கூறியிருப்பதும்
இதையே காட்டுகிறது.

பிரேமதாஸாவைக் கையாண்ட
புலிகளின் திறமையை
அடுத்த இதழ்களில்
ஆராய்வோம்.

(இன்னும் நகரும்)

---

அண்டை மண்டலத்தில்....

தமிழ் நாட்டில் தீராத தண்ணீர்ப் பிரச்சனை?

# முல்லைப்பெரியார் நீர்த்தேக்க விவகாரம் மோதிக்கொள்ளும் மாநில அரசுகள்

தண்ணீர்ப் பிரச்சனை தமிழகத்திற்கு தீராத தலைவலியாகிக் கொண்டிருக்கிறது. காவிரி ஆனால் என்ன. கிருஷ்ணாவானால் என்ன, அல்லது முல்லைப் பெரியாரானால் என்ன? எந்தப் பக்கம் திரும்பினாலும் தமிழகத்தின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. கடைமடைப் பகுதியில் அமைந்திருப்பதால் அது மற்ற மாநிலங்களின் தயவையே நம்பியிருக்க வேண்டிய சூழல். அந்தந்த மாநிலங்களும் தங்கள் நலன்தான் முக்கியம் என்று வாதாட, தமிழகம் தவித்துப்போகிறது.

கடந்த வாரம் திருவனந்தபுரத்தில் தமிழகம் மற்றும் கேரள மாநில முதல்வர்களுக்கிடையே முல்லைப் பெரியார் நீர்த்தேக்கம் குறித்து நடந்த பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது. தென்பகுதி விவசாயிகள் தொடர்ந்து வாடப் போகிறார்கள். இப்போது உச்சநீதிமன்றத்திற்கு செல்லப் போவதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

தமிழக கேரள எல்லையில், தமிழகப் பகுதியில் அமைந்துள்ளது முல்லைப் பெரியார் அணை. இந்த அணையில் எந்த அளவு நீரைத் தேக்கலாம் என்பது பற்றித்தான் தற்போதைய சர்ச்சை. அணை என்னவோ தமிழகத்தில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் கேரளாவிலிருந்துதான் வரவேண்டும்.

மதுரை, ராமநாதபுரம் பகுதிகளில் நிலவிய (ஏன் இன்றும் அப்படித்தானே நிலைமையிருக்கிறது) வறட்சியைப் போக்க 1895ம் ஆண்டு பெரியாற்றின் குறுக்கே ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டதுதான் இந்த அணை. மேற்குத் தொடர்ச்சி மலையினைக் குடைந்து உருவாக்கப்பட்ட சுரங்கம் வழியாக, அணையிலிருந்து திறந்து விடப்படும் நீர் மதுரைக்கு அருகே கட்டப்பட்டுள்ள வைகை அணையை அடைந்து, பின்னர் தென்மாவட்டங்களில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஏக்கர் நிலம் பாசனத்திற்கு வழிசெய்கிறது. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு திரைப்படத்தில் இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் பாலும் தேனும் ஆறாக ஓடுவதாக ஒரு கனவுக்காட்சியைக் காண்பிப்பார். அதில் வறண்டுபோன தென்மாவட்டங்கள் பெரியார் நீர்த்தேக்கத்தின் விளைவாக செழித்திருப்பதாக ஒரு காட்சி வரும். அந்த அளவிற்கொன்றும் தென் மாவட்டங்கள் செழிக்கவில்லையாமினும், ஓரளவாவது நல்ல முறையில் விவசாயம் நடந்து வந்தது-1979 வரை.

அந்த ஆண்டு அணையில் சில பகுதிகளில் விரிசல்கள் காணப்பட, அணையே உடைந்துவிடக்கூடும் என்ற ஆபத்து உருவாக, உடனடியாக நீர்மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டது. இதனால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதியிழந்தன.

கடந்த வாரம் நடந்த பேச்சு வார்த்தைகளின்போது, தமிழக முதல்வர் கருணாநிதி, 20 வருடங்களில் பெரியாறு ஆயக்கட்டைச் சேர்ந்த தமிழக விவசாயிகளுக்கு விளை பொருள்கள் உற்பத்தி வகையில் 150 கோடி ரூபாயும், மற்றும் மின் உற்பத்தி வகையில் 90 கோடி ரூபாயும் இழப்பு ஏற்பட்டதாகக் கூறினார்.

பலப்படுத்தும் பணியில் முதல் இரண்டு கட்டங்கள் முடிந்துவிட்டதால் நீர் மட்டத்தை குறைந்த பட்சம் 145 அடியாக உயர்த்த வேண்டும் என்றும் அவர் கோரினார். இறுதிக் கட்டம் முடிந்த பிறகு வேண்டுமானால் 152 அடியாக உயர்த்துவது பற்றி பரிசீலித்துக்கொள்ளலாம் என்றார். ஊஹூம், அசைந்தால்தானே கேரளம்.

அம்மாநில முதல்வர் ஈ.கே.நாயனார், முடியவே முடியாதென்று மறுத்துவிட்டார். "ஒன்பது அடி உயர்த்தச் சொல்கிறீர்கள், அதனால் உங்களுக்கு ஐந்து சதவீத தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கும் அவ்வளவுதான்.

ஆனால் யோசித்துப் பாருங்கள் ஏதாவது ஆபத்து நேர்ந்தால், பெரியாறு அணையின் கீழ்ப்பகுதியில், எங்கள் மாநிலத்தில் மூன்று மாவட்டங்கள் இருக்கின்றன, இடுக்கி நீர் மின்திட்டமும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் பேரழிவு ஏற்படும். எதற்கு இந்த விஷப்பரீட்சை" என்றார் நாயனார்.

"பேசாமல் இரு மாநிலங்களும் சேர்ந்து கூட்டு தொழில் நுட்பநிபுணர் குழு ஒன்றை அமைப்போம், அக்குழுவின் அறிக்கையின் பேரில் மேல் நடவடிக்கை எடுப்போம்" என்றும் ஆலோசனை கூறினார்.

இது போகாத ஊருக்கு வழி என்று மறுத்துவிட்டார் கருணாநிதி. வேடிக்கை அத்தோடு முடியவில்லை. அணையில் வலு போதாதென்று கூறும் கேரளம், மேலும் வலுப்படுத்த தமிழகம் கூறிய சில யோசனைகளையும் ஏற்க மறுத்துவிட்டது. என்ன செய்யலாம்? "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது, சேட்டுக்கள், பனியாக்கள், பார்ப்பனர்கள் ராஜ்ஜியம்தான் நடக்கிறது. ஆரியர்கள் திராவிடர்களை நசுக்குகிறார்கள். தனியான, சுதந்திரமான திராவிட நாடு கிடைத்தால் தான் திராவிடர்களெல்லாம் நிம்மதியாக வாழ முடியும், தமிழ் குடும்பத்தைச் சார்ந்தவையே மற்ற அனைத்து தென் மாநில மொழிகளெல்லாம்" என்று தொடக்க காலங்களில் திரா விட இயக்கத் தலைவர்கள் முழங்கியிருக் கிறார்கள். பெரியார் காலத்திலேயே அவை யெல்லாம் வெற்றுக் கூச்சல் என்று தெளி வாகியது. தமிழர் தலைமையிலான ஒரு திராவிட நாட்டை ஏற்க வேறு எந்த தென் பகுதி மக்களும் தயாராக இல்லை. அத னால்தானே தனித் திராவிட நாடென்பது தனித் தமிழ்நாடாக குறுகியது. இந்தி எதிர்ப்பில்கூட தமிழ்நாடு தனித்துப் போனது.

ஆயின் என்ன? தொடர்ந்து தமிழர் வீரம் பற்றி மேடைக்கு மேடை முழங்கினார்கள். விளைவு அண்டை மாநிலங்கள் அனைத்தோடும் ஏதோ ஒரு விதத்தில் தகராறு. பெரியாரணையைவிட காவிரி

கானகன்

நீர் பிரச்சனை தமிழக விவசாயிகளின் உயிர்நாடியையே நெரிக்கிறது. எள் முனையளவும் கர்நாடகம் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. ஒவ்வொரு குறுவை சாகுபடியின்போதும் கெஞ்சிக் கூத்தாடி, சண்டை போட்டு, உச்சநீதி மன்றத்திற்குப் போய்த்தான் சிறிதளவாவது தண்ணீர் பெறமுடிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால், காவிரிப் பிரச்சனை உக்கிரமான நேரம், தஞ்சைப் பகுதி விவசாயிகளைப் பேட்டி கண்டபோது, ஒரு காங்கிரஸ் தலைவர் கூறினார்; "நசித்துப் போகிறதய்யா, தஞ்சைத் தரணி. இப்போது குடியரசுத் தலைவராயிருக்கும் வெங்கட்ராமன் பத்து ஆண்டுகளுக்கு முன்பே கூறினார், "காவிரியை நம்பி இனி விவசாயம் செய்யாதீர்கள். பேசாமல் நிலங்களை விற்றுவிட்டு நகரங்களுக்கு குடிபெயருங்கள்!" என்று...

உலகப் பொதுமறை கண்ட திருவள்ளுவருக்கு கர்நாடகத் தலைநகரம் பெங்களூரில் ஒரு சிலைகூட வைக்க முடியவில்லை. ஆனால் அங்கே இருக்கும் ஒரு சில ஆயிரம் தமிழர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா, "பெங்களூர் எங்களூர்!" என்று கோஷமெழுப்புகிறார்கள். கன்னடக்காரர்கள் கொதிப்படைகிறார்கள், பிரச்சனை மேலும் சிக்கலாகிறது. ஒருவர் விட்டுக் கொடுக்க மறுத்து முண்டா தட்டினால், அடுத்தவர் மீசையை முறுக்க எவ்வளவு நேரம் ஆகும். இதைத் தமிழர்கள் யோசிப்பதே இல்லை.

பிரிட்டிஷ் அரசின் நேரடி கண்காணிப்பில் இருந்த மெட்ராஸ் ப்ரெசிடென்சி- சென்னை மாகாணம், அந்தக் காலகட்டத்தில் பல்வேறு சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றது, எனவே தம் மீது மற்றவருக்கு பொறாமை, இப்போது ஈடு செய்யுங்கள் என்று அவர்கள் கோருவதில் நியாயமிருக்கிறது என்று தமிழர் எவரும் ஏற்றுக்கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக காவிரியைப் பொறுத்தவரை 1901ல் தமிழ்நாடு 1.11 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்துவந்தது. தமிழ்நாடு 13.45 இலட்சம் ஏக்கரில். 70 ஆண்டுகளுக்குப் பிறகும் 4.42 இலட்சம் ஏக்கர். தமிழ்நாட்டில் 25.30 இலட்சம் ஏக்கர். வேகமாக தனது விவசாயத்தை கர்நாடகம் பெருக்க. தமிழ் நாட்டிற்கு நீர் மறுக்கப்பட, பிரச்சனை முற்றி, கலவரத்தில் வந்து முடிந்திருக்கிறது.

அலசுவது - இராஜதந்திரி

# அரசியல் உரிமைகளுக்காக மட்டுமல்ல; உயிர் வாழும் உரிமைக்காகவும் போராடும் தமிழ் மக்கள்

ஆனையிறவுக்கு வடக்கே இடம்பெற்ற மோதல், இராணுவ ரீதியாக குறிப்பிடத்தக்களவு இழப்புக்களை ஏற்படுத்தி விட்டுள்ள அதேசமயம், அரசியல் நடவடிக்கைகளிலும் ஒரு வெறுமையான சூழ்நிலையை உருவாக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆனையிறவுக்கு வடக்கே நிகழ்ந்த மோதலில் அப்பாவிப் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகியிருப்பதும் ஒரு முக்கிய பிரச்சனையாக உருவாகியிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை யுத்தம் என்பது புதிதான தொன்றல்ல. கடந்த சுமார் இருபது வருட காலமாகவே வடக்கு-கிழக்கு மக்கள் யுத்த அநர்த்தங்களினால் வெகுவாகவே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளியேறியும், உறவுகளைப் பறிகொடுத்தும், சொத்துக்கள், உடமைகளை இழந்தும் பாரியளவிலான மனிதாபிமானப் பிரச்சனைகளுக்கு வடக்கு-கிழக்கு மக்கள் முகங்கொடுத்தவர்களாக இருக்கின்றனர்.



வவனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தின் தாழ்வாரப் பகுதியில் கூரை விரிப்பக்களை பயன்படுத்தி அதிலும் மக்கள் தங்கியிருக்கும் காட்சி.

ஆனையிறவுக்கு வடக்கே நிகழ்ந்த மோதல் எவருமே எதிர்பார்த்திராத வகையில் இடம் பெற்றிருந்தது.

இராணுவத்தினரின் முக்கிய படைத்தளமாக இருந்து வரும் ஆனையிறவு இராணுவ மையத்தையும் கடல் மார்க்கமாகத் தாண்டிச் சென்றே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கைவரிசையைக் காண்பித்திருந்தனர்.

ஆனையிறவுக்கு வடக்கே நிலை கொண்டிருந்த படையினர் இத்தகையதொரு அதிரடித் தாக்குதலை எவ்விதத்திலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதேசமயம் ஆனையிறவுக்கு வடக்கே வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சியிப் பகுதிகளில் இருந்த மக்களும் மிகவும் அக்கிரமமாக நிகழ்ந்த மோதலினால் பெரும் நிர்க்கதிக்குமுள்ளாகியிருந்தனர்.

கனரக ஆட்டிலறிப் பிரயோகங்கள், மோட்டார் ஷெல் தாக்குதல்கள், மற்றும் விமானக் குண்டு வீச்சு என்பவற்றால் பெரும் திக்குமுக்காட்டத்துக்கு ஆனையிறவின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் உள்ளாகியிருந்தனர்.

குடிமனைப் பகுதிகள் தாக்குதல்கள் காரணமாக வெடித்துச் சிதறின. அத்துடன் பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டுமிருந்தனர்.

ஆனையிறவு இராணுவத்தளத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெருநிலப்பரப்புடன் முற்றிலுமாகத் துண்டிப்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கமாக இருந்ததை அறியமுடிந்தது.

இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவுக்குச் செல்லுகின்ற ஏ-9 எனக் குறிப்பிடப்படும் பளைப் பகுதியூடாகச் செல்லும் யாழ்-கண்டி வீதியின் ஒரு சில கிலோ மீட்டர்கள் தூரத்தையும் புலிகள் தம் வசப்படுத்தியிருந்தனர்.

எனவே பிரதான விநியோகப் பாதையாக விளங்கிய ஏ-9 நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டதையடுத்து, இராணுவம் சிக்கலான நிலையை எதிர்நோக்கிய அதேசமயம், போர்ப் பிரதேசத்தில் இருந்த மக்களும் முழு அளவிலான கெடுபிடிக்குள்ளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பகுதியிலிருந்து இலட்சக் கணக்கான பொதுமக்கள் அச்சத்தின் காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்துக்கு இடம் பெயர்ந்தனர்.

இதனால் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை உக்கிரமடைந்திருந்த வேளை, பொது மக்கள் பெருமளவில் உயிர்ச் சேதங்களை எதிர் நோக்கும் அபாயம் குறைந்திருந்தது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை பற்றி யாழ்குடாநாட்டு மக்கள் ஏற்கனவே அறிந்துமிருந்தனர். ஆனால் இத்தடவை ஆனையிறவுக்கு வடக்கே வெடித்தமோதல் ஒரு திடீர் நிகழ்வாக இருந்தமையால், யுத்தப் பிரதேசத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அத்துடன் படைத்தரப்பிலும் மோதல் இடம் பெற்ற பகுதிகளில். உள்ள மக்களை வெளியேற அனுமதிப்பது தொடர்பாகக் கெடுபிடி நிலையும் உருவாகியிருந்தது.

இக் கெடுபிடிநிலை ஆனையிறவுக்கு வடக்கே மோதல் இடம்பெற்ற பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் 'மனிதக் கேடயங்களாக' மாறும் நிலையைத் தோற்றுவித்திருந்தது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை எடுத்து நோக்கினால் அப்பாவிப் பொது மக்கள் யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் பல்வேறு அழிவுகள், அவலங்களுக்குமுள்ளாகி வருவதையே காணமுடிகின்றது.

தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு நிலைமை மோசமடையும் போது அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பென்பது எப்போதுமே கேள்விக்குறியாகவே இருந்து வந்துள்ளது.

தொலை தூரங்களில் இருந்து ஏவப்படுகின்ற ஷெல் ஏவுகணைகள், மற்றும் ஆகாயத்திலிருந்து போடப்படுகின்ற குண்டுகள் என்பவை பெரும்பாலும் இலக்குத் தவறியவையாகவே இருந்துள்ளன.

இந்நிலையில் ஆனையிறவுக்கு வடக்கே கடந்த வாரங்களில் நடந்த மோதல்களில் இராணுவத்தினரும், புலிகளும் தரையில் மோதிக் கொண்ட நிலையில் பொது மக்கள்கூட யுத்தக் கெடுபிடியினால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தனர்.

இச்சுற்றிவளைப்பிலிருந்தும் யுத்தப்பிரதேச மக்களைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டதனாலேயே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியிருந்தனர்.

யாழ் அரசாங்க அதிபரது காரியாலயம் பல்கலைக் கழக மாணவர்களினால் முற்றுகையிடப்பட்டு, ஆனையிறவுக்கு வடக்கே சிக்குண்ட மக்களைக் காப்பாற்றுமாறு கோஷங்களும் எழுப்பப்பட்டிருந்தன.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர்கூட யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் செயலகம் முன்பாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி ஹர்த்தால் ஒன்றும் நடத்தப்பட்டிருந்தது.

ஆனால் இத்தடவை யுத்தக் கெடுபிடிக்குள்ளாகிய மக்களைக் காப்பாற்றுமாறு கோரி யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

எனவே 40 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் செயலகம் முன்பாக நடத்தப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தில் தமிழ் மக்களது அரசியல் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பப்பட்டது.

ஆனால் தற்போது 40 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாண அரச அதிபரது காரியாலயம் முன்பாக நிகழ்ந்த ஆர்ப்பாட்டத்தில் யுத்தக் கெடுபிடிக்குள்ளான தமிழ் மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இந்த இருவேறுபட்ட காலப்பகுதியிலும் யாழ் அரச அதிபர் அலுவலகம் முன்பாக நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களை எடுத்து நோக்கும் பட்சத்தில் அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த நிலைமாறி உயிர் வாழும் உரிமைக்காக தமிழ் மக்கள் குரல் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே இலங்கையின் இன்றைய சந்ததித் தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளுக்காக மட்டுமல்ல பாதுகாப்புடன் கௌரவமாக உயிர் வாழுவதற்கும் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே 21ம் நூற்றாண்டில் முழு அளவில் தோற்றம் பெற்றுள்ளது.

ஆனையிறவுக்கு வடக்கே மோதல் வெடிப்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாபெரும் சமாதானப் பேரணி ஒன்று கூட நடத்தப்பட்டிருந்தது.

அச்சமாதானப் பேரணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்வேறு வெகுஜன அமைப்புக்களும் கலந்து கொண்டு ஏகோபித்த குரலில் யுத்தத்தை நிறுத்துமாறும், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுமாறும் வலியுறுத்தியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கிழக்கிலங்கையிலும் சமாதானத்தை வலியுறுத்திப் பேரணி நடத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மக்கள் யுத்தத்தின் அகோரத்திலிருந்தும் விடுபட்டு அமைதியாக கௌரவத்துடன் வாழ்வதற்கு தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இத் தருணத்திலேயே தென்னிலங்கையில் யுத்தத்துக்காகக் கோஷமிடப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இன்று நேற்றல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த போதெல்லாம், பேரினவாத சக்திகள் முரண்டு பிடித்து தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கி ஆளப்பட வேண்டுமென்பதிலேயே முனைப்பாக இருக்கின்றன.

எனவே இலங்கையில் தொடர்ந்து செல்லும் யுத்தத்துக்கு அனுசரணையாக இருக்கின்ற சக்திகள் தென்னிலங்கையிலேயே மிக விழிப்புடனிருந்துவருவதைக் காணமுடிகிறது.

இந்நிலையில் யுத்த அழிவுகள் தொடர்ந்து பெருகுவதைத் தடுப்பதற்கு, ஆட்சியாளர்கள் யுத்த கோஷம் போடும் பேரினவாதிகளைக் கூட்டில் போட்டுக் கையாள வேண்டியதே அவசியமானதாகின்றது.

இதன்மூலமே ஆரோக்கியமான முறையில் இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றைக் காணக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும்.

யுத்த அநர்த்தத்தினால் பெரும்பாதிப்புக்களை அனுபவித்துவரும் வடக்கு-கிழக்கு மக்களின் துன்ப துயரங்களைத் துச்சமென மதித்து சிங்கள-பௌத்த பேரின வாதிகள் நடந்து கொள்கின்றனர்.


வடக்கு-கிழக்கில் இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்கள் மட்டுமல்ல, யுத்த களத்தில் எதிரும் புதிருமாக நின்று போரிடும் தமிழ், சிங்கள இளைஞர்கள்கூட அநியாயமாக உயிரிழக்க நேரிடுகின்றது.

இராணுவத்தளபதி ஸ்ரீலால் வீரசூரிய, "யுத்தம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமானால் மேலும் நவீனரக ஆயுதங்களும், ஆயிரக்கணக்கில் ஆட்பலமும் தேவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அழிவையும் அதிகரித்து நாட்டையும் குட்டிச்சுவராக்கும் யுத்தத்தை நிறுத்துவதா? அல்லது தொடர்ந்து நடத்துவதா? என்பதை ஆட்சியாளர்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாகின்றனர்.

சர்வதேச சமூகமும், நாட்டின் பெரும்பாலான மக்களும் சமாதானத்துக்காகவும், இனப்பிரச்சனைத் தீர்வுக்காகவும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தென்னிலங்கையில் வெளிப்படையாகவே யுத்தகோஷம் போடுவோரை அடக்கும்போது, யுத்தமும் தானாகவே அடங்கி விடுமென்று கருதலாம்.

## அதிரடி அய்யாத்துரை



**ஆயகலைகளில் ஒன்றாக** பகிடிவதையும் பல்கலைக்கழகங்களில் இடம் பிடிச்சிருக்குது. இதனால கல்வி மான்களை மட்டுமல்ல, காட்டு மிராண்டிகளையும் பல்கலைக் கழகங்கள் உருவாக்குது. இது வொருமனநோய், உரிய சிகிச்சையை தாமதிக்காது கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் படிப்பெல்லாம் பாழாகி அனைத்துமே பகிடியாகிவிடும்.

**தலைநகரில்** தமிழ் விழா எடுக்கிறார்கள். தமிழ் என்று கேட்டாலே ஏதோ பயங்கரம் என்றிருக்கும் பேர்வழிகளுக்கு அது இனிமையானது; இன்பமானது, இன்னல் அகற்றுவது என்று தெளிவு படுத்தும் கம்பர் கழகத்தின் பணி காலமறிந்து செய்வதாகவே இருக்குது.

**திருக்குறளைத் தந்து** வள்ளுவப் பெருந்தகை வான் புகழ் கொண்டார். அவருக்கு கன்னியாகுமரியில் வானுயரச் சிலையமைத்து கலைஞர் மு.கருணாநிதி தமிழுலகில் பெரும் புகழீட்டியுள்ளார். எம்மவர்களும் குறளை வீடுதோறும் புகட்ட வழி செய்ய வேண்டும். புத்திசாலியாக, அறிவாளியாக இல்லாவிட்டாலும் கனவானாக வாழ, அதாவது 'ஜென்டில் மென்'னாக இருக்க குறள் நிறையவே வழி சொல்லுது.

**திருமலையில் கப்பலுக்காக** ஆயிரக்கணக்கில் வெய்யிலில் வேகிக் கொண்டிருக்கினம். கோடிக்கணக்கில் காசு கொடுத்து கொண்டு வந்த 'லங்காராணி' கப்பலுக்கு என்ன நடந்ததோ தெரியாது. ஒரு போக்கு வரத்துப் பிரச்சனையைத் தீர்க்க முடியாதவை நாட்டுப் பிரச்சனையை எப்படித்தான் தீர்க்கப்போமினமோ?

**பேராயர்மார்கள்** கவலைப்பட்டுப் போயிருக்கினம். செய்திகளைத்தான் தவறாகக் கொடுக்கினமென்றால், அவர்களின் பெயர்களையும் பிழையாகக் கொடுத்து வம்பு செய்கினமாம். வன்னிக் காட்டுக்குள்ளேயும் அடிக்கடி போய்வருவதாகக் கூறி இந்த மதத்தலைவர்களை சீண்டி விடுகினமாம் செய்திக்காரர்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 105

### கடந்தவாரம்

ஆர்ச் பிஷப் லுவும் அவர்களும் இரு அமைச்சர்களும் படுகொலை செய்யப்பட்ட பின்னர், மோட்டார் விபத்தில் பலியானார்கள் என்று கூறப்பட்ட பொய்யை மூடி மெழுகுவதில் இடி அமீனும் வேறுபல இராணுவ அதிகாரிகளும் எடுத்த முயற்சிகள் உரிய பலனை அளிக்கவில்லை. உண்மையை அறிய பிறநாட்டு செய்தியாளர்கள் மற்றும் மொலைக்காட்சி படப்பிடிப்பாளர்கள் கம்பலாவில் குவிந்தனர். கொலை பற்றி. இடி அமீன் அளித்த பேட்டிகளும் ஏனைய அதிகாரிகளால் கூறப்பட்ட கருத்துக்களும் முன்னுக்குப் பின் முரண் பட்டிருந்தன. இதனால் உலக நாடுகள் அமீனுடைய கருத்துக்களை ஏறக மறுத்தன.

ஆர்ச் பிஷப்பின் சடலத்தை, உரிய முறையில் மதச் சடங்குகளுடன் அடக்கம் செய்ய தம்மிடம் ஒப்படைக்குமாறு உகண்டா திருச்சபை கேட்டது. அதே போல் அமைச்சர்களின் பிரேதங்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு அவர்களின் உறவினர்கள் கேட்டனர். எவரிடமும் பிரேதங்கள் ஒப்படைக்கப்படாமல், அமீனின் நம்பிக் கைக்குப் பாத்திரமான இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இப்பிரேதங்களைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டிருந்த ஒரு வயதான டாக்டரிடம் கூறப்பட்டிருந்தது. ஆனால் அவர் பரிசீலனை செய்யும் முன்னரே திடீரெனக் காலமானார். அவரையும் அமீனே கொலை செய்துவிட்டான் என்று வதந்திபரவியது. ஆனால் அவர் இயற்கையாகவே இறந்தார்.

இனி...

# இடி அமீன்

ஆர்ச் பிஷப் ஜனன் லுவும் கிட்டு கம்பிரதேசத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலிக்கன் கிறிஸ்தவரான அவர் உகண்டா திருச்சபையின் தலைவராகவுமிருந்தார். உகண்டா நாட்டை சுற்றியுள்ள பல்வேறு நாடுகளில் ஆங்கிலிக்கன் மத பீடங்களுக்கும் ஆர்ச் பிஷப் லுவும் அவர் களே பொறுப்பாகவிருந்தார்.

ஆங்கிலேயர்கள் உகண்டா நாட்டைக் கைப்பற்றிய காலத்தில் பிரிட்டிஷாரால், ஆங்கிலேயர்களால் பின்பற்றப்படும் ஆங்கிலிக்கன் கிறிஸ்தவ மதம் உகண்டா வாழ் பெருவாரியான மக்களால் பின்பற்றப்பட்டது. பிரிட்டிஷார் அக்காலத்தில் தம்மால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் தங்களுடைய மொழி, மதம், கலாசாரம் ஆகியவற்றைப் பரப்புவதில் தீவிர கவனம் செலுத்தினர். ஆங்கில மொழியைக் கற்று, அவர்களுடைய ஆங்கிலிக்கன் மதத்தைப் பின்பற்றும் உள்நாட்டுகுடி மக்களுக்கு அரச நிர்வாகத்தில் உத்தியோகங்களும் வேறு பல சலுகைகளும் வழங்கப்பட்டன. அதே முறையில் உகண்டா நாட்டிலும் பெருவாரியான மக்கள் ஆங்கிலிக்கன் கிறிஸ்தவர்களாக மாறி இருந்தனர்.

இதற்கு முன்னர் உகண்டாவில் தன் செல்வாக்கினை நிலைநிறுத்த முற்பட்ட ஃபிரெஞ்சுக்காரார்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தை உகண்டா மக்களிடம் பரப்பியிருந்தனர்.





பிரிட்டிஷார், உகண்டாவை சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தி 1962 ஒக்டோபர் 9ம் திகதி வெளியேறிய போது, புகண்டா இனத்தின் மன்னரான கபாகாவை ஜனாதிபதியாகவும் ஒபேடேயை பிரதம மந்திரியாகவும் நியமித்தனர்.

இக்காலகட்டத்தில் உகண்டாவின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். இவர்களில் ஆங்கிலிக்கன் மதப்பிரிவினர் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களைப் பார்க்கிலும் சற்று அதிகமாகவே இருந்தனர்.

ஆர்ச் பிஷப் லுவும் கொல்லப்பட்ட தகவல் உகண்டா வாழ் ஆங்கிலிக்கன் மக்களை மட்டுமல்ல, அந்தப் பிரேதசத்தில் வாழ்ந்து வந்த ஆங்கிலிக்கன் மதப் பிரிவினர் அனைவரையுமே அதிர்ச்சியடைய வைத்தது. பிரிட்டிஷ் மக்களும் அதிர்ச்சியடைந்தனர். மத போதனை மட்டுமல்லாமல், மனித நேயத்துடன் செயற்பட்ட ஒரு மாமனிதர் என்று போற்றப்பட்ட அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, ஆங்கிலிக்க திருச்சபையைச் சேர்ந்த அனைவரும் ஆலயங்களில் சிறப்புப்பிரார்த்தனைகளை நடத்தினர். எங்கும் துக்கம் கொண்டாடப்பட்டது.

இத்தகைய வெல்வாக்கு மிக்க ஒரு மதகுருவுக்கு நடைபெறும் இறுதிச் சடங்குகளில் கலந்து, அஞ்சலி செலுத்துவதற்காக உலகனைத்துமுள்ள ஆங்கிலிக்கன் திருச்சபைகளிலிருந்து பிரதிநிதிகள் குழுவினரும் ஆயத்தங்களைச் செய்திருந்தனர்.

தருவது
அழகன்

இதற்காகவே ஆர்ச் பிஷப்பின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்கும்படி உகண்டா திருச்சபையினர் கொரிக்கை விடுத்தனர், ஆனால் இக் கோரிக்கைக்கு இடி அமீன் செவிசாய்க்கவே இல்லை. ஒரு வாரத்தின் பின்னர் கிட்டிகம் என்ற இடத்துக்கு அருகிலுள்ள ஆர்ச் பிஷப் லுவும் அவர்களின் பிறந்த இடத்துக்கு இராணுவ வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டார். கம்பலா நகரிலிருந்த ஆர்ச் பிஷப்பின் மனைவி மக்களோ, நெருங்கிய உறவினர்களோ, ஏனைய ஆயர்களோ அழைக்கப்படவில்லை. அவருடைய ஊரிலிருந்த அவருடைய தூரத்து உறவினர்கள் சிலர் மட்டும் பிரேத அடக்கத்தின் போது பங்கு பற்ற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அந்த இறுதி நேரத்திலும் ஆர்ச் பிஷப்பின் சடலத்தை எவரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

இதே போன்று அமைச்சர் ஒரியேமாவின் சடலம் குலு என்ற இடத்திலும், அமைச்சர் ஒபொத் ஒ.ஃபும்பியின் சடலம் டொரோரோ என்ற இடத்திலும் அடக்கம் செய்யப்பட்டன. இம்மூன்று சடலங்களும் அடக்கம் செய்யப்பட்ட இடங்களை மூன்று மாதங்கள் வரை ஆயுதந் தாங்கிய படையினர் இடைவிடாமல் காவல்காத்தனர். எப்போதாவது எவராவது சடலங்களை தோண்டி எடுத்துவிடக் கூடும் என்ற பயம் இருந்தமையால் அமீன் இவ்வாறான ஏற்பாட்டினைச் செய்திருந்தான். இம் மூன்று சடலங்களின் மீது மேற் கொண்டு பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டாலும் கொலைக்கான உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்காமலிருக்க, அவற்றின் மீது இரசாயன அமிலங்கள் தெளிக்கப்பட்டு, உருக்குலைக்கப்பட்டிருந்தன.

இடி அமீனின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாக, அவ்வப்போது பல கதைகள் உலகமெங்கும் பரவின. அவற்றில் பல மிகைப்படுத்தி வெளியாகின என்பதனையும் மறுக்க முடியாது. குறிப்பாக, அமீனைப் பிடிக்காத அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ் போன்ற நாடுகளும், ஆபிரிக்க நாடுகள் சிலவும் இக் கைங்கர்யத்தைச் செய்துள்ளன.

ஆர்ச் பிஷப்பின் கொலையுடன் தொடர்புடையதாக, அக் கால கட்டத்தில் பரப்பப்பட்ட வதந்தியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

ஆர்ச் பிஷப்பின் தலையை அமைச்சர்கள் இருவரின் தலைகளையும் தனியாக வெட்டி எடுத்து இடி அமீன் தனது மாளிகையிலுள்ள குளிர் பதனப் பெட்டியில் வைத்திருந்தான் என்று கூறப்பட்டது. ஆனால் இடி அமீனின் கதையினை எழுதுவதற்காக நாம் தேர்ந்தெடுத்துக் குறிப்பெடுத்த நூல்களில் இதற்கான ஆதாரங்களைக் காண முடியவில்லை. ஆகவே அமீனை வெறுத்தவர்களில் சிலர் அவனை மிக மோசமான இராட்சதனாகக் காட்டிக் கொள்ளவே இத்தகைய கதைகளைப் பரப்பி இருக்கலாம். அமீனுடனேயே - அவனுடைய ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியில் இணைந்திருந்தவரான ஹென்றி சியம்பா என்பவர் எழுதிய The State of Blood- 'குருதியாலான ஓர் அரசு' என்ற நூலில் காணப்பட்ட சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டே இடி அமீனின் கதையைத் தொகுத்தளித்து வந்துள்ளோம். சியம்பாவுடன் அமைச்சர் அவையில் இணைந்திருந்த இரு அமைச்சர்களுக்கும் நடந்த கோர முடிவைத் தொடர்ந்து, மேற்கொண்டும் உகண்டாவில் வாழ முடியாதென்ற முடிவுக்கு வந்தார் சியம்பா. நாட்டை விட்டு-இடி அமீனுக்குத் தெரியாமல்-வெளியேறிவிடத் திட்டமிட்டார்.

இடி அமீனின் அமைச்சர் அவையிலிருந்த அமைச்சர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் ஆகியோருக்குத் தெரிந்திராத பல உண்மைகள் சியம்பாவுக்கு முற்று முழுதாகத் தெரிந்திருந்தன. இடி அமீனால் ஏவப்பட்ட கொலைஞர்கள் யார்; அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை கொலைகளைச் செய்துள்ளனர், எவ்வளவு சொத்துச் சேர்த்துள்ளனர் என்ற 'விபரங்கள் ஹென்றி சியம்பாவுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, உண்மைகளைத் தெரிந்திருந்தவர்கள் கொலை செய்யப்பட்டது போல் தனக்கும் அமீன் முடிவுகட்டிவிடக்கூடும் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. சியம்பாவுடன் நெருக்கமான சிலரும், சியம்பாவின் காலம் நிர்ணயிக்கப்பட்டு விட்டதை அவருக்கு உணர்த்தினர்.

சிலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அமீனின் விசுவாசிகள் போட்ட சில திட்டங்களைப் பற்றியும் சியம்பாவிடம் கூறியிருந்தனர். சிலர் கடிதங்களும் எழுதியிருந்தனர். தன்மீது அமீனின் சந்தேகம் கிளம்பாமலிருக்க, மிகவும் கவனமாக-உரிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார்.

(இடி தொடரும்)

## சல்மானின் புதிய மனைவி



பவுலா ஜோன்ஸ், மோனிகா லெவின்ஸ்கி போன்ற உலகத்தைத் தன் பக்கம் திரும்ப வைத்தவர்கள் வரிசையில் புதிதாக இணைந்திருக்கிறார் ஒரு பெண். இவர் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் வேறு யாருமல்ல இந்தியாவின் தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்மாலட்சுமி.

இவரது பிரபலத்திற்குப் பின்னணியில் இருப்பவர் சல்மான் ருஷ்டி. 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதியதால் ஈரான் அரசால் 'தலைக்கு விலை' வைக்கப்பட்டுள்ள இவரை இலகுவில் மறக்க முடியாது.

53 வயதான சல்மான் ருஷ்டி, அஞ்ஞான வாச வாழ்க்கையை மேற்கொண்டு வந்தாலும் மனுஷர் சரியான ஜொலி பேர்வழி. ஏற்கனவே இருமுறை திருமணம் செய்திருக்கும் ருஷ்டி மூன்றாவது முறையாக பத்மாலட்சுமியை மணந்துள்ளார்.

சுண்டியிழுக்கும் பார்வைக்கும் சொக்க வைக்கும் பேச்சுக்கும் சொந்தக்காரியான பத்மாலட்சுமி 'மொடலிங்' கில் படு பிரபலம். இப்போது ஹொலிவூட் திரையுலகிலும் நுழைந்துள்ளார்.

உடலைச் சூடேற்றும் உணவுவகைகளைத் தயாரிப்பது எப்படி? என்ற புத்தகத்தை இவர் எழுதினார். இதன் வெளியீட்டின் போதுதான் ருஷ்டியின் நட்பு இவருக்குக் கிடைத்தது.

இதன் பின் ஏற்பட்ட சந்திப்புக்கள் இவர்கள் இருவரையும் இணைத்துவிட்டது. இப்போது நியூயோர்க்கில் உள்ள சொகுசு பங்களாவில் வாழ்க்கை நடத்துகின்றனர்.

பார்ட்டிகள், ஷோக்கள் என்று ஜோடியாகக் கலந்து கொள்ளும் இவர்களிடம் வயது வித்தியாசத்தைப் பற்றிக் கேட்டால்....

"வயது வித்தியாசம், வேறு வேறு நாடு, மதம், இதெல்லாம் எங்களுக்குக் கவலையில்லை. எங்கள் காதலுக்கு முன் இவையெல்லாம் அடிபட்டுப் போய்விட்டன!" என்று கூறிவிட்டார் பத்மாலட்சுமி.

## இராணுவ வீரர்கள் செய்த காரியம்

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பெண் ஒருவர் ஒரு நாள் ஏ.கே.47 ரகத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு நின்றிருக்கிறாள். இதைப் பார்த்தவர்கள் பொலிஸில் புகார் கொடுக்க, பொலிஸ் வந்து அந்தப் பெண்ணைக் கைது செய்தது.

அந்தப் பெண் கையில் வைத்திருந்த துப்பாக்கி ரஷ்ய இராணுவத்திற்குச் சொந்தமானது. இது எப்படி அந்தப் பெண்ணிடம் வந்தது என்று கேட்டதற்கு, அந்தப் பெண் சொன்னபதில் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்துவிட்டது.

அந்தப் பெண் அப்படி என்னதான் சொன்னாள்?

அந்தப் பெண் ஒரு விலைமாது. அந்தப் பெண்ணுடன் ஜாலியாக இருந்துவிட்டு கொடுப்பதற்குப் பணமில்லாமல் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்களாம் இராணுவ வீரர்கள்.

## சினிமாவில் கிரிக்கெட் வீரர்



இந்தியக் கிரிக்கெட் அணியில் ஒரு காலத்தில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர்தான் சலீல் அங்கோலா.

நட்சத்திர வீரராக வரமுடியாததால் திரையுலக நட்சத்திரமாகி விட்டார் அங்கோலா.

'கோரா காகஜ்' என்ற இந்தித் தொலைக்காட்சித் தொடரில் அறிமுகமாகி இப்போது பெரிய திரைக்குத் தாவியுள்ளார் இவர்.

'குருஷேத்திரா' என்ற இந்தித் திரைப் படத்தில் நேர்மையான பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் அங்கோலா இந்தப் படத்தில் இவரது மேலதிகாரியாக சஞ்சய் தத் நடிக்கிறார்.

கிரிக்கெட்டில் பிரகாசிக்கத் தவறிய அங்கோலா சினிமாவில் ஜொலிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## வில்லங்கத்தை பார்த்து விலகாதவர்



வில்லங்கத்தைப் பார்த்து விலகி ஓடாத வித்தியாசமான பெண்மணி தான் நந்திதா தாஸ்.

தீபா மேத்தாவின் சர்ச்சைக்குள்ளான 'ஃபயர்' படத்தில் நடித்தார். அதுமட்டுமா பற்றி எரியும் 'வாட்டர்' படத்தில் துணிந்து நடிக்க முன்வந்தார்.

'வாட்டர்' படத்திற்காக மொட்டை போட்டு நடித்து வருகிறரர்.

இந்தப் பிரச்சனையில் இருந்து விடுபடுவதற்குள் இன்னொரு வில்லங்கமான வேடத்தில் நடிக்கப் போகிறார் நந்திதா.

'ஏக் அலக் மௌசம்' என்ற படத்தில் இவர் எய்ட்ஸ் நோயாளியாக நடிக்கப் போகிறார்.

"இந்தப்படம் விடயத்தை உள்ளிருந்து பார்க்கிறது. நாம் வேறு, அவர்கள் வேறு என்கிற மாதிரியான பார்வை இல்லை. அதனால் எனக்குப் பிடித்திருக்கிறது!" என்கிறார் நந்திதா. கே.பி.சசி என்பவர் இப்படத்தை இயக்குகிறார்.

'வாட்டர்' படத்திற்காக இவர் விக் வைத்து நடிக்கிறார்.

## மெய்காப்பாளர் எழுதிய புத்தகம்



டயானா இறந்த கார் விபத்தில் உயிர் தப்பியவர் அவரது மெய்காப்பாளர் ட்ரெவர் ரீஸ் ஜோன்ஸ்.

டயானா விபத்தில் இறந்தது பற்றி இவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்து விட்டார்கள் பலர்.

பொறுமை இழந்து விட்ட ஜோன்ஸ் எல்லா விஷயங்களையும் தொகுத்து ஒரு புத்தகமாகவே எழுதிவிட்டார்.

'த பொடிகார்ட்ஸ் ஸ்டோரி' என்ற பெயரில் எழுதிய அந்தப் புத்தகத்தை அண்மையில் வெளியிட்டும் விட்டார் ஜோன்ஸ்.

"டயானா விபத்தைப் பற்றி ஏதாவது கேட்க வேண்டுமானால் அந்தப் புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று கூறி ஒதுங்கி விட்டார் ஜோன்ஸ்.





## சொக்கலேட் ஆடை

← இந்த மொடல் அழகி அணிந்திருப்பது திருமண ஆடை. மொடல் அழகி ஏன் திருமண ஆடை அணிந்திருக்கிறார்? அவருக்குத் திருமணமோ? இல்லையில்லை.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் அண்மையில் சொக்கலேட் கண்காட்சி நடைபெற்றது. அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

சொக்கலேட் கண்காட்சியின் போது இந்த மொடல் அழகி முற்றிலும் சொக்கலேட்டுக்களால் வடிவமைக்கப்பட்ட திருமண ஆடைகயை அணிந்திருந்தார்.

இந்த சொக்கலேட் ஆடையை ஜப்பான் ஆடை நிபுணர்கள் தயாரித்திருந்தனர்.



## கடல் நடுவே ஒரு தளம்

↑ ஜப்பானின் டோக்கியோ நகரில் அருகில் உள்ள யோகோசுகா என்ற கடலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள விமான ஓடுதளம் தான் இது.

'மெகா ஃப்ளோட்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமான ஓடு தளம் தான் உலகிலேயே கடலின் நடவே அமைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய விமான ஓடு தளமாகும்.

இது 1000 மீட்டர் நீளமும் 60 மீட்டர் அகலமும் கொண்டது. இதைக் கட்டிமுடிக்க 164.3 மில்லியன் டொலர் (நம்நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 197 கோடி ரூபா)செலவிடப்பட்டுள்ளது.

## தண்ணீரில் உறங்கும் அதிசய மனிதர்

↓ இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள நெல்லைக்கு அருகே உள்ள தாழையூத்து என்ற ஊரைச் சேர்ந்தவர் ஹசாலி.

ஒரு நாள் பல அடி ஆழமுள்ள கிணற்றில் கண்மூடிய நிலையில் இவர் மிதந்தபடி கிடந்திருக்கிறார். இவர் இறந்து விட்டதாக நினைத்து, கிணற்றைச் சுற்றிப் பலர் கவலையுடன் நின்றிருந்தனர்.

ஒரு சில நிமிடங்களில் இவர் தண்ணீரில் இருந்து எழுந்து வர, சுற்றிலும் நின்றவர்கள் பயந்து ஓடியே விட்டனர்.

61 வயது இளைஞரான ஹசாலி தண்ணீரில் பல சாதனைகளைச் செய்யக் கூடியவர். 2 மணிநேரத்திற்குக் குறையாமல் இவரால் தண்ணீரில் உறங்க முடியும். இதற்காக இவர் எவ்வித பயிற்சியும் எடுக்கவில்லையாம். இயல்பாகவே இது வருகிறது. உண்மையில் இவர் ஓர் அதிசயமான மனிதர்தான்.





## வித்தியாச ஓவியர்

← தூரிகைகளால் ஓவியங்களை அழகாக வரையும் ஓவியர்களைப் பார்த்து வியப்படையாமல் இருக்க முடியாது.

ஓவியர்கள் ஓவியங்களை அறைகளிலோ அல்லது தனிமையான சூழல்களிலோ வரைவார்கள்.

சிலர் கைகளை உபயோகிப்பதை விட்டு கால்களினாலும் வாய்களினாலும் தூரிகைகளைப் பிடித்து ஓவியம் வரைவார்கள்.

இவர்கள் மத்தியில் இன்னும் வித்தியாசமானவராகத் திகழ்கிறார் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த அஷாஜி(உள்படம்) என்ற ஓவியர்.

இவர் தலைகீழாக நின்றபடி ஓவியம் வரைகிறார். 7 வயதிலிருந்தே ஓவியங்களை வரைய ஆரம்பித்த அஷாஜி கடந்த 10 ஆண்டுகளாகவே தலைகீழாக நின்று ஓவியம் வரையத் தொடங்கினார்.

பல ஓவியக்கண்காட்சிகளை நடத்திப் பல பரிசுகளைப் பெற்றிருக்கும் இவர், இப்போது ஓவியக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஓவியம் வரையக் கற்றுக் கொடுத்து வருகிறார்.

## குதித்தார்கள் சாதனை படைத்தார்கள்

↓ நோர்வே நாட்டைச் சேர்ந்த 5 வாலிபர்கள் அந்நாட்டின் உயரமான கட்டடம் ஒன்றில் இருந்து சாதனை படைத்துள்ளார்கள். நோர்வே நாட்டில் உள்ள 81 மாடிக் கட்டடத்தில் இருந்து இந்த ஐந்து வாலிபர்களும் குதித்துள்ளனர்.

இந்த ஐவரது பெயர்களும் உலக சாதனைகளாய்ப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகின்றன



## தகவல் பெட்டி



## சின்னஞ் சிறியது

↑ படத்தில் இந்தப் பெண் கண்ணிற்கு அருகே வைத்துப் பிடித்திருப்பது என்னவென்று கேட்டால் அநேகம் பேர் கமெரா என்று தான் கூறுவார்கள்.

இவர் கையில் வைத்திருப்பது ஒரு சின்னஞ்சிறிய கொம்பியூட்டர். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

உள்ளங்கையில் வைத்து இயக்கக் கூடிய அளவில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தக் கொம்பியூட்டரின் எடை ஒரு கிலோவுக்குக் குறையத்தான். வெறும் 900 கிராம்கள் தான்.

ஜெர்மனிய கொம்பியூட்டர் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இந்தச் சின்னஞ்சிறிய கொம்பியூட்டரை ஜெர்மனியப் பெண் நிபுணர் ஒருவர் அறிமுகப்படுத்தும் காட்சி இது.

(பட உதவி : அஸாம் அலி-அஹமட் நியாஸ்)




பிரசாந்த்-லைலா
படம்: பார்த்தேன் ரசித்தேன்

## கார்த்திக் நடிக்கும் 'கண்ணன் வருவான்'

'மின்டர் மெட்ராஸ்', 'உனக்காக எல்லாம் உனக்கா' உட்பட 12 படங்களைத் தயாரித்த லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 13 வது படம் 'கண்ணன் வருவான்'

இந்தப் படத்தில் கதாநாயகனாக கார்த்திக் நடிக்கிறார். இவருக்கு இதில் இரண்டு ஜோடிகள். ஒருவர் மந்த்ரா, மற்றவர் மலையாள நடிகை திவ்யா உன்னி.

இவர்களுடன் கவுண்டமணி, செந்தில், ராதாரவி, ரஞ்சித், மனோரமா, கசன்கான், அனுஜா, மயில்சாமி, பாலு ஆனந்த், தீபிகா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

கார்த்திக் நடித்த 'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி', 'உனக்காக எல்லாம் உனக்காக' ஆகிய வெற்றிப்படங்களை இயக்கிய சுந்தர் சி. இப்படத்தை இயக்குகிறார்.

சிற்பி இசையமைக்க பாடல்களை பழனி பாரதியும், பா.விஜய்யும் எழுதுகிறார்கள்.



சூர்யா-ஜோதிகா
படம்: உயிரிலே கலந்தது

## இங்கிலீஷ் பொண்டாட்டி

'கணவன் இறந்தால் மனைவி தாலியை அறுத்து வளையல்களை உடைத்து வெள்ளைச் சேலை அணியக்கூடாது' என்று புரட்சி முழக்கமிடும் பெண்ணாக ரம்யா கிருஷ்ணன் நடித்த தெலுங்குப் படம் ஒன்று தமிழில் 'இங்கிலீஷ் பொண்டாட்டி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

இப்படத்தில் வெளிநாட்டில் படித்த பெண் வேடத்தில் ரம்யா கிருஷ்ணன் நடித்துள்ளார். மேலும் ஸ்ரீகாந்த், ஜெயசுதா, முரளி மோகன், சிவா ஆகியோரும் நடித்துள்ளனர். மணி சர்மா இசையமைத்துள்ள இப்படத்தை கிரேஷ்வர்மா என்பவர் இயக்கியுள்ளார்.

தெலுங்கில் 'இங்கிலீஷ் பெல்லாம் சண்ட் கோதாவரி மொகுடு' என்ற பெயரில் ஆந்திரா மாநிலத்தில் இப்படம் 100 நாட்களுக்கு மேல் ஓடியுள்ளது.



## திரையுலக மறுபக்கம் 144 கட்டிப் புரண்டு சண்டைபோட்ட கவர்ச்சி நடிகைகள்

தமிழ்நாட்டிலிருந்து மான்

மின்னலின் மனைவியின் இரண்டெழுத்துப் பெயரை உடையவர் இந்தக் கவர்ச்சி நடிகை. படங்களில் கதாநாயகிகளோடு சேர்ந்து நடனமாடும் நடனக் குழுவில் இருந்த இந்த நடிகையை கதாநாயகியாக்கியவர் கிராமப்படங்களில் நடிக்கும் ராஜன் என முடிவடையும் பெயருடைய நடிகர்.

கிராமத்துக் கலை ஒன்றைச் சொல்லும் ஒருவனின் பெயருடைய அந்தப் படத்தில் நாயகியாக நடிப்பதற்காக நடிகரிடம் அந்த நடிகை பட்டபாடு இருக்கிறதே, சொல்லி மாளாது.

படம் முடியும் வரை அந்த நடிகர், அந்த நடிகையைச் சக்கையாகப் பிழிந்து விட்டார். படம் வெளி வந்து படுதோல்வியடைந்தது. இதனால் நடிகை ராசியில்லாதவர் என்று முத்திரை குத்தப்பட்டதால் இவரை யாரும் கதாநாயகியாக்க முன்வரவில்லை. கதாநாயகியாக நடித்து விட்டு மறுபடி நடனக் குழுவில் இணைந்து நடனமாடவும் முடியாத நிலை நடிகைக்கு.

இந்நேரத்தில் தனியாக படங்களில் கவர்ச்சி நடனமாட தயாரிப்பாளர் ஒருவர் கவர்ச்சி நடிகை ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். இதைக் கேள்விப்பட்ட நடிகை அவரிடம் வாய்ப்புக் கேட்டார்.

நடிகை எதையும் அனுசரித்துப் போகக் கூடியவர் என்பதை அறிந்து கொண்ட தயாரிப்பாளர் நடிகையிடம் பெறுவதைப் பெற்றுக் கொண்டு அந்த வாய்ப்பை வழங்கினார்.

இதன் பின் தனியாகக் கவர்ச்சி நடனமாடிப் புகழ் பெற்றார் நடிகை. நடிகை என்ற போர்வையில் வேறு வழிகளிலும் பணம் பண்ணத் தொடங்கினார்.

இந்நேரத்தில் இவர் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னும் பழைய வழியிலேயே செல்லத் தொடங்கினார். இவரது நடவடிக்கைகள் கண... பிடிக்கவில்லை. எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் நடிகை திருந்தியபாடு இல்லை... வீட்டைப் பிரிந்து சென்று விட்டார்.

படப்பிடிப்புத் தளங்களில் இவருடன் சேர்ந்து நடனமாடும் கவர்ச்சி நடி... ஒருவருடன் பழகும் சந்தர்ப்பம் நடிகைக்குக் கிடைத்தது.பேச்சளவில் ஏற்பட்ட... திருமணம் வரை வந்து விட்டது. கவர்ச்சி நடிகையின் தம்பி இந்த நடிகை... நடத்தாமல் வாழ்க்கை நடத்தினார். இதைக் கேள்விப்பட்ட கவர்ச்சி நடி... மீட்பதற்காக நேராக நடிகையின் வீட்டிற்குச் சென்றார்.

"உன்னுடைய ஆட்டத்திற்கு என் தம்பிதான் கிடைத்தானா? மரி... விட்டு விடு" என்று சண்டை போட்டார்.

"அவரே விருப்பப்படும் போது உன்னால் என்ன செய்ய முடி... வந்த வழியே போய்விடு" என நடிகையும் பதிலுக்குத் தாக்க...

"என்னால் என்ன செய்ய முடியும் என்றா கேட்டாய்?" என... நடிகையைப் பிடித்து அடித்தார் கவர்ச்சி நடிகை. நடிகை... பதிலுக்குத் தாக்கினார்.

கட்டிப்புரண்டு இவர்கள் சண்டைபோட... பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தலையிட்டு இருவரையும் விலக்கி விட்டார்கள்.

## பாரதிராஜாவின் 'கடல் பூக்கள்'

'காதல் கோட்டை' உட்பட பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் சிவசக்தி பாண்டியன். இவர் இப்போது முரளி-பார்த்திபன் இணைந்து நடிக்கும் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தைத் தயாரித்து வருகிறார்.

இதையடுத்து இவர் தயாரிக்கும் படத்திலும் முரளி நடிக்கிறார். இதில் முரளியுடன் 'நாம் ... மனோஜ் இணைந்து நடிக்கவுள்ளார்.

இப்படத்தை இயக்குநர் இமயம் பாரதிராஜா இயக்கவுள்ளார். இதற்கு 'கடல் பூக்கள்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பாரதிராஜா இயக்கத்தில் முரளி நடிப்பது இதுவே முதல் முறை.

கதாநாயகிகள் மற்றும் ஏனைய கலைஞர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது.

படத்திற்கு இசை தேவா. கதை-வசனம் ரத்னகுமார், ஒளிப்பதிவு பி.கண்ணன். இது ஒரு குறுகிய காலத் தயாரிப்பாகும்.

## விஜயின் திடீர் ஏமாற்றம்

தமிழில் 'வானத்தைப்போல'வும், மலையாளத்தில் 'தி வாரண்ட்'டும் சரிந்து போன தனது மார்க்கெட்டைத் தூக்கி நிறுத்தும் என்று பெரிதும் எதிர்பார்த்தார் விஜிதா.

'வானத்தைப் போல' நன்றாக ஓடியும் தமிழில் இவருக்குப் புது வாய்ப்புகள் வரவில்லை. மலையாளத்திலோ 'தி வாரண்ட்' படுதோல்வி. இதனால் அங்கும் அவருக்குப் புதுப்படங்கள் ஒப்பந்தமாகவில்லை.

## கமலின் பட மாற்றங்கள்

இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் தயாரிப்பு இயக்கத்தில் கமல் நடிக்கும் 'தெனாலி' முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கி வருகிறது.

இப்படத்திற்கு முதலில் தேர்வு செய்யப்பட்டவர்களில் பலர் மாற்றப்பட்டு விட்டனர்.

முதலில் இப்படத்திற்கு கார்த்திக் ராஜா இசையமைப்பதாக இருந்தது. இப்போது ஏ.ஆர்.ரகுமான் என்கிறார்கள்.

கமலுக்கு ஜோடியாக சிம்ரன் என்றார்கள் இப்போது ஜோதிகாவாம்.

கமலுடன் இணைந்து மலையாள நடிகர் மோகன்லால் நடிப்பதாக இருந்தது. இப்போது அவருக்குப் பதிலாக ஜெயராம் நடிக்கவிருக்கிறார்.

ஏற்கனவே கமலும் ஜெயராமும் 'சாணக்கியன்' என்ற மலையாளப்படத்தில் இணைந்து நடித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்னொரு 'நிலவுப்பாட்டு'

விஜய், ஷாலினி நடித்த 'கண்ணுக்குள் நிலவு' படத்திற்கு முதலில் வைத்த பெயர் 'நிலவுப்பாட்டு', பின் இந்தப் பெயர் மாற்றப்பட்டு விட்டது.

இப்போது 'நிலவுப்பாட்டு' என்ற பெயரில் புதிய படமொன்று தயாராகவுள்ளது.

அருண்குமார் கதாநாயகனாக நடிக்க இப் படத்தை வளையாபதி என்பவர் இயக்க உள்ளார்.

## விஜய் நடிக்கும் 'சாஜஹான்'

சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தின் பெயர் 'சாஜஹான்'. இதில் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். பிரபல தெலுங்கு, இந்திப்பட இயக்குநரான ராம் கோபால்வர்மாவிடம் உதவியாளராகப் பணிபுரிந்த ரவி என்பவர் இப்படத்தை இயக்கவுள்ளார்.

## அப்செட்டான நடிகை

'பத்தா' படத்தில் நாயகியாக அறிமுகமானார் டயானா. ஆனால் அந்தப் படம் இன்னமும் வெளிவரவில்லை. கதாநாயகியாகத் தான் நடிப்பேன் என்று அடம்பிடிக்காமல் இரண்டாவது நாயகி, நாயகியின் தங்கை வேடம் என சிறு சிறு வேடங்களில் நடித்து வருகிறார் டயானா.

அண்மையில் இவர் தலைகாட்டிய 'குட்லக்' வெளியாகியது. இந்த நிலையில் சில வருடங்களுக்கு முன் இவர் மலையாளத்தில் நடித்த 'பலனா' படம் அண்மையில் தமிழகத்தில் வெளியாகியுள்ளது.

செய்தி அறிந்த டயானா அப்செட்டாகி விட்டார்.



## மலையாளத்தில் பிரபு

பக்கத்தில் மலையாளத்திரையுலகில் இருந்து தமிழுக்கு நடிக்க வந்து
டிருக்கும் போது, தமிழில் இருந்து மலையாளத்திற்குப் போகிறாப் பிரபு.
பு முக்கிய வேடத்தில் நடித்த மலையாளப்படமான 'காலாபாணி'
சாலையால் பிரபுக்கு மலையாளத்தில் நல்ல வரவேற்பு. அதற்குப்
ஒரு மலையாளப்படத்தில் நடிப்பதாக இருந்தது. ஏனோ
அதில் நடிக்கவில்லை.
போது பிரபல மலையாளப் பட இயக்குநரான வினயன்
தில் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

## நட்பில் விரிசல்

ர.சி இயககததில சரத்குமார் நடிக்கும்
ஜெயம்' படத்தில் மீனா-ரம்பா என
நாயகிகள் நடிப்பதாக இருந்தது.
இதில ரம்பாவுக்குப் பதிலாக
நடிக்கிறார்.
னால் இதுநாள் வரை
தோழிகளாக இருந்து
பாவுக்கும் சங்கவிக்
ட்டமியான
விரிசல்
டுள்



## நகைச்சுவை வேடத்தில் கரண்

இதுவரை வில்லன் மற்றும் குணச்சித்திர வேடங்களில் அசத்தி வந்த கரண் முதன் முதலாக நகைச்சுவை வேடத்தில் நடிக்க வுள்ளார்.

'கண்ணாத்தாள்', 'திருநெல்வேலி' போன்ற படங்களை இயக்கிய பாரதிமோகன் இயக்கும் புதிய படம் 'ஆசையே அலைபோலே'. இதில் லிவிங்ஸ்டன், தேவயானி ஜோடியாக நடிக்கிறார்கள்.

'கண்ணாத்தாள்' படத்தில் வில்லனாகவும், 'திருநெல்வேலி' படத்தில் குணச்சித்திர நடிகராகவும் கரணை நடிக்க வைத்த பாரதிமோகன் 'ஆசையே அலை போலே' படத்தில் நகைச்சுவை நடிகராக அறிமுகப்படுத்துகிறார்.

இதில் வடிவேலு, செந்தில், கோவை சரளா, பொன்னம்பலம், வினுசக்கரவர்த்தி, என்.எஸ்.சந்திரன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைக்கும் இப்படத்திற்கு பாவல் என்பவர் வசனம் எழுதுகிறார். கதை திரைக்கதை அமைத்து படத்தை இயக்குகிறார் பாரதிகண்ணன்.

## முடிவு மாறிய 'முகவரி'

சினிமா இசையமைப்பாளன் ஆக வேண்டும் என்ற தனது இலட்சியத்தை தூர எறிந்து விட்டு குடும்பத்தைக் காப்பாற்ற அஜித் போவது போன்ற முடிவுதான் 'முகவரி' படத்தில் முதலில் இருந்தது.

இப்போது படத்தின் தயாரிப்பாளர் வருவாயைக் கருத்திற்கொண்டு அஜித் இசையமைப்பாளராகி விடுவது போன்று 'முகவரி' படத்தின் முடிவை மாற்றிவிட்டார்.

## முகப்பில்.

அஜித்குமார் மகேஸ்வரி

## 'அஜித் மீது எனக்குப் பொறாமை'

-கமல்-

* அண்மையில் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தின் பாடல் கசட் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட கமல் அஜித்குமாரை மனந்திறந்து பாராட்டியுள்ளார்.

"ஒரு நடிகரை பார்த்து மற்றவர்கள் பொறாமைப்பட்டால், அவர் வளர்ந்து வருவதாக அர்த்தம். அஜித்குமார் மேல் எனக்குப் பொறாமை. அஜித்குமார் வளர்ந்து கொண்டு வருகிறார்" என்று அஜித்தைப் பாராட்டினார் கமல்.



விசித்ரா

## காதோரு சொல்லுகிறோம்

'வேதாள இயக்குநரால் மட்டும் எப்படித் தொடர்ந்து வெற்றிப் படங்களைக் கொடுக்க முடிகிறது?' என்று காதலுக்குக் கோட்டை கட்டிய இயக்குநரிடம் ஒருவர் கேட்டாராம். 'அந்த ஆள் ரூமுக்குள்ளே இருந்து பழைய காசெட்டுக்களைப் போட்டு அதிலிருந்து உருவிப்படமெடுப்பது தான் காரணம்' என்றாராம் அவர்.

சூப்பர் நடிகருக்கு சவால் விடும் வேடத்தில் நடித்த இரண்டெழுத்து மதுவின் பெயரில் தொடங்கும் பெயருடைய நடிகையை வெளிநாட்டு கலைநிகழ்ச்சிக்கு அனுகினார் ஜின்ன நடிகரின் அப்பா. சம்பளமாக 10 லகரம் கேட்க நடிகரின் அப்பா துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்கிற ரீதியில் ஓடியே வந்துவிட்டாராம்.

ஏதைக் காட்டி இரசிகர்கள் மத்தியில் பிரபலமானாரோ 'அது' அளவுக்கு மீறிப்பருத்து விட்டதால் வெளிநாடு சென்று 'ஸ்பெஷல்' அறுவைச் சிகிச்சை செய்து அழகுபடுத்தியுள்ளாராம் இந்திரன் சபையில் நடனமாடும் பெயர் கொண்ட நடிகை. 'அது' குறைந்து விட்டதால் இரசிகர்கள் இனி நடிகையை விரும்பமாட்டார்கள் என எண்ணிய தயாரிப்பாளர்கள் இப்போது அந்த நடிகையின் பக்கமே செல்வதில்லையாம்.

சுவாச நடிகை இப்போது ஃபிரான்ஸ் நாட்டுக் குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர் ஒருவருடன் வாழ்க்கை நடத்தி வருகிறாராம். அவரது பணத்தில் படம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் நடிகை தானே நாயகியாக நடிக்கவும் போகிறாராம். இதற்காக இளம் நாயகன் ஒருவருக்கு வலையும் வீசி வருகிறாராம்.

விவேகமான நகைச்சுவை நடிகர் நகைச்சுவைப் பகுதியை எழுதி நடிக்கும் ஒரு படத்தில் வைகைப்புயல் நடிகரையும் நடிக்க வைத்தார்களாம். 'இவன் எழுதும் நகைச்சுவைப் பகுதியில் என்னால் நடிக்க முடியாது. வேணுமானால் எனக்கு நானே எழுதிக்கிறேன்' என்று எகிறி விட்டாராம்.

குப
னவே
ரின் தம்பி
கப் பழக்கம்
ன் திருமணம்
தனது தம்பியை
தயாக அவனை
பேசாமல்
தார்.



பிரகாஷ்ராஜ்-சித்திரெட்டி
படம்: சூர பிரம்மா

## மினி சினி

✣ பிரபு நடித்த 'கந்தா கடம்பா கதிர்வேலா' படத்தை இயக்கிய இராம. நாராயணன் அடுத்து கார்த்திக் நடிக்கும் படத்தை இயக்குகிறார். இப்படத்திற்கு 'குபேரன்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

✣ 'மின்சாரக்கண்ணா' படத்தில் அறிமுகமான மோனிகா, 'கம்ப்' என்ற இந்திப்படத்தில் மனிஷாவுக்குத் தங்கையாக நடித்துள்ளார். அதில் சிம்ரானும் சின்ன வேடத்தில் நடித்துள்ளார்.

✣ தமிழில் வெற்றிபெற்றிருக்கும் 'வானத்தைப்போல' கன்னடத்தில் தயாராகப் போகிறது. தமிழில் விஜயகாந்த் ஏற்றிருந்த இரட்டை வேடங்களை கன்னடத்தில் அம்பரிஷ் ஏற்று நடிக்கிறார்.

✣ ராஜ்கபூர் இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கும் 'என்னோடு கலந்துவிடு' படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக இந்தி நடிகை அமீஷா பட்டேல் நடிக்கிறார். இவர் 'கஹோனா பியார் ஹை' என்ற வெற்றிப்பட நாயகி.

✣ கமல் நடித்த 'நம்மவர்' படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் மகேஷ். இவர் அண்மையில் 'பட்டர் ஃபிளை' என்ற பெயரில் பொப் அல்பம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

✣ ரகுமான்-மீனா ஜோடியாக நடிக்க மலையாளத்தில் 'டிரீம்ஸ்' என்ற பெயரில் படமொன்று தயாராகிறது. சாஜு காரியால் என்பவர் இயக்கும் இப்படத்தில் அப்பாஸும் நடிக்கிறார்.

✣ மணிவண்ணன் இயக்கும் 'ஆண்டான் அடிமை' பட்த்தில் செருப்புத் தைக்கும் தொழிலாளியாகவும், மலையாள நம்பூதிரியாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார் சத்யராஜ்.

✣ 'சின்னப்பாப்பா பெரியபாப்பா' உட்பட பல தொலைக்காட்சித் தொடர்களை தயாரித்து வரும் நடிகை ராதிகாவின் ராடான் ரீவி விரைவில் 'மந்திர வாசல்' புகழ் ஜெரால்ட் இயக்கத்தில் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

✣ 'கண்ணுபடப்போகுதய்யா' படத்தில் விஜயகாந்துடன் இணைந்து நடித்துள்ள ராதிகா சௌத்ரி மறுபடி விஜயகாந்துடன் 'சிம்மாசனம்' படத்தில் ஜோடி சேர்ந்து நடிக்கிறார்.

✣ பாண்டியராஜன் இயக்கத்தில் பிரபுதேவா நடிக்கும் 'டபுள்ஸ்' படத்தில் மீனா-மந்திரா என இருநாயகிகள். இப்போது மந்திராவுக்குப் பதிலாக சங்கீதா(ரசிகா) நடித்து வருகிறார்.

## அபிதாவும் அக்காவும்

'சேது' பட நாயகி அபிதா சின்னத்திரையிலும் பிரபலம். இவரைத் தொடர்ந்து இவரது அக்கா ப்ரீத்தியும் நடிக்க வந்துவிட்டார்.

கமலின் 'ஹேராம்' படத்தில் அப்பாஸுடன் வரும் நாதியாக நடித்திருப்பவர் தான் அபிதாவின் அக்கா ப்ரீத்தி.

ப்ரீத்தி தமிழ் மற்றும் மலையாளத்தில் பல சின்னத் திரைகளிலும் விளம்பரப் படங்களிலும் நடித்திருக்கிறார்.

# சதங்கையின் சங்கமம்



கொழும்பு கலாசுரபி நடனப்பள்ளி வழங்கும் 'சதங்கையின் சங்கமம்' என்ற பரத நாட்டிய நிகழ்ச்சி எதிர்வரும் மே மாதம் 13ந் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும், 14ந் திகதி கண்டியில் உள்ள இந்து கலாசார மண்டபத்திலும் நடைபெற உள்ளது.

சென்னை மாநகர் கலாச்சேத்திரா கலைக் கல்லூரியில் பரதநாட்டியத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளிவரும் இலங்கை மாணவிகள் ஐந்துபேர் இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்கின்றார்கள். அத்துடன் கலாச்சேத்திராவைச் சேர்ந்த ஆசிரியர்களான திருமதி.வசுந்திரா தோமஸ் (நட்டுவாங்கம்), திரு.ஹரிபிரசாத் (பாட்டு), திரு.அனில்குமார் (மிருதங்கம்), என்பவர்களும் கலந்துகொள்கின்றார்கள்.

புல்லாங்குழல் மேதை உலகப்புகழ் டாக்டர் ரமணியின் மாணவியும் இலங்கையைச் சேர்ந்தவருமான திருமதி.துளசி மனோகரியும் இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுகின்றார். நிகழ்ச்சிக்குரிய சகல ஏற்பாடுகளையும் கலாசுரபி நடனப் பள்ளியின் ஸ்தாபகரும் கொழும்பு திருமறைக் கலாமன்றச் செயலாளரும் சமாதான நீதவானுமாகிய திரு.அம்புறோஸ் பீற்றர் செய்து வருகின்றார்.

சலங்கையின் சங்கமத்தில் பங்குபற்றும் நடனமணிகள் திரிவேணி நாராயணசாமி, ஜொசிட்டா பீட்டர், அனுசூயா ஜெகதீசன், லலிதாம்பிகை செல்லையா, சைலஜா பரமானந்தம் ஆகியோரின் நடனத்தோற்றமே இது.

## உண்மை

பெண்ணே!
நான்
யாசித்ததும்,
நேசித்ததும்
உன்னைமட்டும்தான்!
உன்னை
மட்டுமே தான்....!
ஆனால்
நீயோ
என்னை
மட்டுமல்ல–உன்
பெற்றோரையும்
நேசித்தாய்....
அதனால் தான்
முடிவில்
உனக்கு
நானும்–உன்
பெற்றோரும்
சொந்தமானோம்.
எனக்கு
நீ மட்டுமே
சொந்தமானாய்!
அப்போதுதான்
புரிந்தது
நீ
எதனை–நிதம்
நினைக்கிறாயோ
அதுவே நடக்கும்...
என
என்றோ ஒரு நாள்
என் தனயன்சொன்னது....!

எம். ரமேஷ், கொழும்பு-15.

## வா அருகில் வா

வாழும் போதுதான் நீ வேண்டும்–வா!
என் இதயச் சோலையில் நீ பவனி
வருகையில்
கோடி நினைவுகள் எனை வியக்குதடி–

கானல் வரி தேடும் சோக
நெஞ்சினில் நான் வரைந்த ஓவியமே
என் வாழ்வின் நிம்மதி என்றும் உன்
சன்னிதியே!

தேசத்து தெருவெல்லாம் பாசத்தைத்
தேடிய போது
மாலையில் பூத்த பாரசீக றோஜாவே
நீ வரவேண்டும் ஏக்கத்தை போக்க–!

உணவிருந்தும் பசியில்லை–
என்இதய றோஜாவே!

என் விழியில் நீ வலம் வருவதால்...
உன் மீது நான் வைத்த
பாசத்தினால் என் அன்பை!
ஏற்றுக்கொள்–இது வெறும் வேஷமல்ல,
சினிமா காதலுமல்ல....

என் இதய தாரகையே வா,
அருகில் வா இருவரும் சேர்ந்து தேடுவோம்
காதல் தேசத்தை!

தேன்மொழி ரஜனிகாந்த், புத்தளம்.

## அவளின் நினைவு

கரல் பிடித்த என் இதயத்தை
சற்று எட்டிப் பார்க்கிறேன்
அதில் அழியாது பதிந்துள்ள
அவளின் நினைவுகளை
மீட்டிப் பார்க்கிறேன்.
***
என் வாழ்வின் வசந்த காலம்
என்றால் என் கண்ணில்
அவளின் அழகிய அந்த
முகம் அறிமுகமானதே எனலாம்.
***
அந்தக் காலத்தில் எனக்குள்
விரைவாக ஒரு மாற்றம்
ஊற்றெடுத்து ஓடியது என்னை
அறியாமலேயே என் மனம்
அவளிடம் சங்கமமானது.
***
அவளும் அவ்வாறே என்
நினைவில் திளைத்திருப்பதாக
கூறினாள் நம்பினேன்
அவளின் நினைவுகள் கூட
என்னுள் சிறையானது.
***
காலங்கள் சென்றது. அவள்
என்னை கனவென மறந்தாள்
ஆனால் அவளின் நினைவுகளை
விட்டு என் மனம் மீளவில்லை.
பசுமரத்தாணியாய் அவளின்
நினைவு பதிந்துள்ளது.

எம்.கனகரட்னம், தெல்தொட்டை.



## சுயமதிப்பு

உன்னை எடை
போட:
உரசிப்பார்!
அசலா நகலா....
அறிந்து கொள்...!
***
வார்த்தைகளுக்கு
வடிவம் கொடு!
எண்ணங்களை
அரங்கேற்று!
மனச்சாட்சியை
மந்திரியாக்கி
உன்னை
தொண்டனாக்கு..!
***
போலியாக வாழ்ந்து
உயர்வதை விட
ஒரே நாள்
ஒரே நிமிடம்
நிஜமாக வாழந்து
செத்துப் போ....
***
துன்பங்களை
தொட்டுப் பழகு!
இன்பங்களை எட்ட
நின்று பார்!
இரண்டையும் சமனாக்கும்
குணம்
உன்னிடம் சரணடையும்!
***
உள்ளும் புறமும்
ஒருவனாய் வாழ்
உடலை மட்டுமல்ல
மனதையும்
தூய்மையாக்கு...
***
சொந்த மாய் உழை
சுயமாய் சிந்தி
உன் காலில் நில்
முடியா விட்டால்
அடுத்த வரை
நாடாமல்,
தடியூன்றி வாழப்பழகு....!

செல்வமலர் சோதிரெட்னம்,
வெள்ளவத்தை.

## தேன் கிண்ணம்

### அன்பே

உன் தோழியிடம்
பேசினால்
ஏன் ஆத்திரப்படுகின்றாய்?
என் உள்ளத்துள்
நுழைந்து விடுவாள்
என்று அச்சமா?
அது எப்படி முடியும்?
என் உள்ளத்தின்
சாவி
உன்னிடம்
இருக்கும் போது?

ஆர். கோணேஸ்,
நுவரெலியா.

## மலையகம் தந்த நிஜங்கள்

மலையக மகளிர்க்கு
எப்போதும் மதிப்பு அதிகம்!
இவர்களே
இங்கேயும் அடிமை;
அங்கேயும் அடிமை;
எங்கேயும் அடிமை!

பச்சை வர்ணத்தோடு
போராடியது போதுமாம்;
புறப்படுகிறார்கள்.....
சமைக்க... துவைக்க.... பெருக்க...
வேறொரு விதமாய்ப் பிழைக்க!

அன்னிய செலாவணியை
வரவழைத்தவர்கள்
நேரடியாய் கொண்டுவரச்
செல்கிறார்கள்!

அனுப்பிவைக்கும் நோட்டுக்கள்
அடுப்பை எரித்தாலும்
அடுத்தவீட்டு அடுப்படியின்
கசிப்பையும்
கணக்குப் பண்ணுகின்றன.

இரண்டில் ஒன்றை
திருமணம் செய்துகொண்டுதான்
திரும்பி வருகிறார்கள்
ஒன்று நோய்
அல்லது பேய்?
ஆம்.. கலாசாரத்தை
கழிசடையாக்கும் பேய்!

சமூகம் இவர்களுக்கு
மூக்குக் கண்ணாடி
போட்டுக்கொண்டுதான்
முக்கியத்துவம் கொடுக்கிறது!

வயிறும், வீடும்
உதட்டுச் சாயமும்
இவர்களை
விரட்டித் திரிகின்றன.

இரண்டு வருடங்களில்
கிடைப்பதாகக் கருதப்படும்
விடுதலை....
புதிய சிறைகளால்
வீணாகிறது!

பிரபா.பதுளை.

## சின்னத் துளிகள்

ஆயிரக்கணக்கான ஆட்களை வெற்றி கொண்டவனை விட, தன் மனதை வெற்றி கொண்டவனே வீரன்.

-யாரோ-

### வாழ்வு

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான்.
"தாயே சாவு என்பது என்ன?"
தாய் சொன்னாள்:
"வாழ்வின் முடிவு!"
மகன் கேட்டான்,
"வாழ்வு என்பது என்ன?"
தாய் சொன்னாள்:
"சாவின் தொடக்கம்"

-கவியரசு கண்ணதாசன்-

### சிட்ஸ் தெரியுமா?

எயிட்ஸ் (AIDS) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 'சிட்ஸ்'(SIDS) பற்றித் தெரியுமா?

படுக்கைக்குச் செல்லும் முன் குழந்தைகளுக்கு அதிக அளவு ஆடை அணிவித்தால் 'சிட்ஸ்' நோய் வரும். திடீரென குழந்தைகளுக்கு ஏற்படும் மரண நோய் என்பது தான் இதன் அர்த்தம்.

## நில்-கவனி-முன்னேறு

நீங்கள் அவமானப்படுத்தப்படுகிறீர்களா? உடனே உணர்ச்சி வசப்படாதீர்கள். ஏன் அவமானப்படுத்தப்பட்டோம் என்று யோசியுங்கள்.

ஒருவர் அவமானப்படுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. மற்றவர்கள் அவரைப்பற்றிக் கொண்டுள்ள தாழ்வான அபிப்பிராயம் காரணமாக இருக்கலாம். சந்தர்ப்பம் சூழ்நிலைகள் காரணமாகி விடலாம். திட்டமிட்டு எதிரிகளால் அவன் அவமானப்படுத்தப்படலாம்.

அவமான உணர்ச்சி இரண்டு வகையானது. எதிர் விளைவு உணர்ச்சிகளை ஏற்படுத்தக் கூடியது. ஒன்று அவமானப்படுத்தியவரைப் பழிவாங்க வேண்டும் என்பது மற்றொன்று அவமானத்திற்கு எது காரணமாக இருந்ததோ அதைக் களைய வேண்டும் என்பது.

இதில் இரண்டாவது வகையே சாதனையை நோக்கி மனிதனை அழைத்துச் செல்கின்ற சக்தி படைத்தது.

அவமான உணர்ச்சியால் கோபத்திற்கு ஆளாகாதீர்கள். பழிவாங்கும் உணர்ச்சிக்கு உங்களை நீங்களே பலியாக்கிக் கொண்டு விடாதீர்கள். அவமானம் ஒரு சம்பவம். அந்த சம்பவம் உணர்த்துகின்ற பாடம் என்ன என்பதைத் தான் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அவமானங்களும் அவதூறுகளும் எந்த நேரத்திலும் நேரலாம். காய்த்த மரம் தான் கல்லடிபடும் என்பார்கள். பெரிய



சாதனைகளைப் படைத்தவர்கள் கூட அவமானங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆகவே நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு அவமானம் ஏற்படுகின்ற போது அதை ஒரு பொருட்டாக நாம் எண்ணவேண்டியதில்லை.

அவமானம் என்பது நம்மை மற்றவர்கள் ஏற்ற அல்லது அங்கீகரிக்க மறுப்பதன் அடையாளமாகும். அவர்கள் மீது கோபப்படுவதில் பயனில்லை.

நமக்கென்று அங்கீகாரம் கிடைக்க மரியாதைக்குரியவராக சமூகம் ஏற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்கின்ற தெளிவு நமக்குத் தோன்றும்.

இந்தத் தெளிவே சாதனைகளின் ஆரம்பம். சாதனை புரிந்த பலரின் வரலாறு இதைத்தான் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

# விக்கிரம வருடம் உங்களுக்கு எப்படி?

## ராசிகளுக்கான பொதுப் பலன்


ஜோதிடர் 'கர்ணா'

தமிழ்ப் புத்தாண்டான விக்கிரம வருடப் பிறப்பையொட்டி இராசிகளுக்குரிய பொதுப்பலன்களை இங்கே தருகிறோம்.



### மேடம் :

'முகத்தின் அழகு அகத்தில் தெரியும்' என்பார்கள். ஆனால் உங்கள் உள்ளத்தில் எரிமலை வெடித்தாலும் முகத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் மலரவிடுவீர்கள். எவர் மனதையும் நோகடிக்க விரும்பாத உங்களுக்கு விக்கிரம வருடம் மிகவும் சாதகமான பலன்களையே தரும். உத்தியோகத்தில் இடமாற்றம், மற்றும் வீடு மாற்றம் நன்மையாகவே முடியும். பிறரிடமும் உடன் பிறந்தோரிடமும் வாக்கு வாதங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். அறிமுகமில்லாத ஆண்களிடமோ பெண்களிடமோ பழக வேண்டாம்.




### இடபம் :

நண்பர்களுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று கருதி உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி வட்டிக்குக் கூட பணம் வாங்கிக் கொடுப்பீர்கள். மற்றவர்களுக்காக வாதாட முன் நிற்பீர்கள். ஆனால் இவ் விடயத்தில் இந்த வருடம் கவனமாக இருக்கவேண்டும். எவரையும் நம்பி ஏமாற வேண்டாம். புதிய முயற்சி எதையும் தொடங்க வேண்டாம். உங்களுக்குரிய வேலையை மட்டும் நீங்கள் கவனித்துக் கொண்டால் போதும். முதியவர்கள் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். குடிப்பழக்கம் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு இடம் கொடுத்தால் உடம்பில் நோய்களைத்தான் வரவேற்க வேண்டிவரும்.



### மிதுனம்:

ஆடம்பரப் பிரியரான நீங்கள் புதிய ஆண்டில் படாடோபத்தை முற்றாக நீக்கிவிடுங்கள். இந்த வருடம் உங்களுக்கு நல்ல பலன்களே காணப்படுகின்றன. நீங்கள் நினைத்தபடியே எல்லாம் நடக்கும். புதிய தொழில் வாய்ப்பு, கல்வியால் மேன்மை எல்லாம் உண்டு. புதிய தொழிலை தொடங்கலாம். உங்களை நம்பி பலரும் முதலீடு செய்ய முன் வருவார்கள். குடும்பத்தில் மனகசப்புக்கு இடம் கொடாதீர்கள். தூர தேச உறவுகள் உங்களை நாடி வருவார்கள். சொத்துக்கள் வாங்க ஏற்ற காலம். ஆனால் சற்று எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை வெற்றியில் பெருமைப் படாமல் நடுநிலையில் நிற்கப் பழகிக் கொள்ளுங்கள்,



### கடகம்:

உங்களுக்குப் பிடிவாத குணம் அதிகம். உங்களால் முன்னுக்கு வந்தவர்கள் உங்களையே தூற்றும் போது அத்தகையோரை பழிவாங்க எண்ணாதீர்கள். இதுகாலவரை பட்ட கஷ்டங்கள் நீங்கும் காலமிது. கடவுளை நம்புங்கள். தடைப்பட்ட எல்லா விடயங்களும் சீரடையும். காலைத் தூக்கத்தை பெரிதும் விரும்பும் நீங்கள் இனிமேல் அதிகாலையில் எழுந்து சுறுசுறுப்பாக பணியாற்றத் தொடங்குங்கள் அலுவலகத்திலும் நல்ல பெயர் கிடைக்கும். குடும்பத்தில் மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக நடந்து கொள்ளுங்கள். சில குறைபாடுகளிலிருந்து மீட்சி பெற தகாத வழிகளைக் கடை பிடிக்க வேண்டாம்.



### சிம்மம்:

பிறரை மதிக்காமல் அலட்சியம் செய்யும் மனோபாவம் உடையவர் நீங்கள். இந்தப் போக்கை உடன் மாற்றிக் கொள்ளுங்கள். எந்தக் காரியத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயற்படுங்கள். உங்களுடைய கால பலன்கள் சற்று ஏறுக்கு மாறாக இருப்பதனால் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். வழக்கு விவகாரங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். உணர்ச்சிவசப்படுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். கோபத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். வீட்டிலும் குடும்பத்தாருடன் அன்பாகப் பழகுங்கள். வாகனங்கள் ஓட்டும் போது எச்சரிக்கை தேவை.



### கன்னி:

எல்லோருடனும் சுமுகமாகப் பழகி சாதுரியமாக நடந்து கொள்ளும் பண்புடையவர் நீங்கள். இருப்பினும் இதுகாலவரை பல சிக்கல்களும் உங்களைத் தாக்கி வந்துள்ளன. புதுவருட பலனின் படி நீங்கள் பட்ட துயரங்கள் விலகப் போகின்றன. உங்களை மனம் நோக வைத்தவர்களை பழி தீர்க்க வேண்டுமென்று எண்ணாமல் பொறுமையைக் கடைப் பிடியுங்கள். எவர் எது சொன்னாலும் நீங்களாகவே சிந்தித்து உங்கள் மனசாட்சிக்கு முக்கியத்துவம் அளியுங்கள். குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக நடந்து கொள்ளுங்கள். இந்த இராசியில் பிறந்த பெண்களுக்கு தீயினால் ஆபத்து நேரலாம். சமையல் கட்டில் கவனம் இருக்கட்டும்.

(மீதி அடுத்தவாரம்)

## ரோஜா ரோஜா
## மருத்துவப் பயன்கள்



- இரவில் ரோஜா இதழ்களை நீரில் ஊறவைத்து அந்த நீரால் கண்களைக் கழுவ கண்கள் குளிர்ச்சியாகும்.
- உலந்த ரோஜா இதழ்களை நீரில் ஊறவைத்து, தேன் விட்டுச் சாப்பிட்டால் வயிற்றுவலி தீரும். உடல் சூடு தணியும்.
- ரோஜா இதழ்களைச் சட்டியில் போட்டு அரை டம்ளர் நீர் விட்டுச் சுண்டக்காய்ச்சி, தண்ணீரை வடித்து, பெருஞ் சீரகத்தில் ஒரு கரண்டியளவு அரைத்து சுத்தமான துணியில் கட்டி, இந்த நீரில் நனைத்து முகர, அடிக்கடி ஏற்படும் தும்மல் நிற்கும்.
- ரோஜா இதழ்களை சட்டியில் ஒரு டம்ளர் நீர் விட்டுக் கொதிக்க வைத்து காலை, மாலை அரைக்கரைவாசி சீனி சேர்த்து சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும்.
- ரோஜா இதழ்களைக் காய்ச்சி பசும் பாலோடு சேர்த்து சீனி இட்டுக் கலந்து பருக, பித்தத்தால் ஏற்படும் மயக்கம், வாய்க்கசப்பு மறையும்.
- ரோஜா இதழ்களை நீரில் போட்டு ஊறவைத்துக் குடிக்க கண்வலி, வயிற்று வலி, நெஞ்சுவலி, உடல் சூடு போன்ற உபாதைகள் தீரும்.
- ரோஜா இதழ்களில் இருந்து சாறு எடுத்து நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி, ஆறிய பின் அடிபட்ட காயங்களின் மேல் தடவினால் காயங்கள் ஆறும்.
- வெற்றிலை பாக்கோடு ரோஜா இதழ்களையும் சேர்த்துப் போட வாய் நாற்றம் நீங்கும்.
- ரோஜாவின் நறுமணம் தலைவலியைப் போக்கும், அத்துடன் போதையையும் குறைக்கும்.

## பட்டுப் புடவைகளைப் பாதுகாக்க
## பத்து யோசனைகள்

- பட்டுப் புடவைகளை பொலித்தீன் பைகளில் போட்டு வைக்கக் கூடாது.
- இரும்பு பீரோக்களில் பட்டுப்புடவைகளை அப்படியே அடுக்கி வைத்தால் சரிகை மங்கி விடும்.
- பட்டுப் புடவைகளை வெள்ளைப் பருத்தித் துணிகளில் சுற்றி வைக்க வேண்டும். அல்லது வெள்ளைத் துணிப்பைகளில் போட்டு மூடி வைக்கலாம்.
- பட்டுப் புடவைகளின் மீது நேரடியாகப் படும்படி பூச்சி உருண்டைகளைப் போட்டு வைக்கக் கூடாது. பட்டுப்புடவைகளின் மீது துணியைப் பரப்பி அவற்றின் மீதுதான் இந்த உருண்டைகளைப் போடலாம்.
- நப்தலின் உருண்டைகளை விட வேப்பிலை, வசம்பு, மஞ்சள் போன்றவற்றைப் போட்டால் பூச்சிகளின் தொல்லை இருக்காது.
- பட்டுப் புடவைகளை உடனேயே தண்ணீரில் போட்டு அலசிவிடக் கூடாது.
- சிறந்த முறையில் உலர் சலவை செய்யப்படும் இடங்களில் ஒருமுறை உலர் சலவை செய்த பின் தண்ணீரில் அலசலாம்.
- எப்போதாவது உடுத்தும் பட்டுப் புடவைகளை வெயிலில் சிறிது நேரம் காய வைத்து எடுக்கலாம்.
- வெயிலில்காயவைக்கும் போது பட்டுப் புடவைகளை வெளிப்புறமாகக் காய வைக்கக் கூடாது. அவற்றின் உட்புறம் வெயிலில் படும்படிதான் காய வைக்க வேண்டும்.

## தூக்கம் வராமல் அவதிப் படுகிறீர்களா?



தொடர்ந்து மூன்று, அல்லது நான்கு நாட்கள் ஒரு மணி நேரம் குறைவாகத் தூங்கினால் அதுவே பின்னர் தூக்கம் வராமல் அவதிப்படுவதற்குக் காரணமாகி விடுகிறது என்று தெரிவித்துள்ளார் தோமஸ் ரோய் என்னும் மருத்துவர்.

உடல் நிலை பாதிக்கப்படுவதோடு மனநிலையும் பாதிக்கப்படும் என்றும் எச்சரிக்கிறார் அவர்.

இதனால் மன உளைச்சல், அஜீரணம், இரத்த அழுத்தம், ஞாபக மறதி உண்டாகும்.

தினம் தினம் ஒரு பிரச்சனை மனதை ஆக்கிரமிக்கும் சமயங்களில் தூக்கம் தடைப்படலாம். எதைப்பற்றியும் சிந்திக்காமல் மனதை அமைதிப்படுத்தி கண்களை மூடினால் தூக்கம் தானாக வந்துவிடும்.

தூக்கம் பாதிக்கப்பட்டால் சிறிது நேரம் அமைதியாக இருக்கலாம். அல்லது நடக்கலாம்.

இரவு நேரங்களில் தேனீர், கோப்பி போன்ற பானங்களைத் தவிர்த்து விட வேண்டும். ஜீரணமாகாத பொருட்களை உண்டாலும் தூக்கம் பாதிக்கப்படும்.

மனதில் எந்தக் கவலையும் இல்லாமல் சிறிது நேரப் பிரார்த்தனையுடன் தூங்கச் செல்லுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.
## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HK

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-04-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா 34

# மோனிக்கா என் மோனிக்கா

## "இவர்தான் என் காதலர்"

ஜனாதிபதி கிளின்ரனின் நெருங்கிய நண்பரும் நம்பிக்கைக்குப் பாத்திரமான உதவியாளருமான வர்த்தகச் செயலர் டொண் பிரவுண், விமான விபத்தில் பலியாகி விட்ட செய்தி கிளின்ரனுக்கு பேரதிர்ச்சியாகவே இருந்தது. பொஸ்னியாவுக்கும் குரோசியாவுக்கும், கிளின்ரனின் ஆணையின்பேரில் சென்றவர் அவர். அவருடன் அமெரிக்க அரசின் வர்த்தகத்துறைப் பிரமுகர்கள் சிலரும் சென்றிருந்தனர். இச் செய்தியால் அமெரிக்க நிர்வாகிகள் பலர் செயலிழந்து காணப்பட்டனர்.

முதல் நாளன்று இரவில்தான் ஒவல் அலுவலகத்துக்கு வந்த அமைச்சர் டொண் பிரவுண் கிளின்ரனுடன் உற்சாகமாக உரையாடிவிட்டுச் சென்றிருந்தார்.

வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறுவதற்கான உத்தரவு கிடைத்ததைத் தொடர்ந்து குழப்பமடைந்திருந்த மோனிக்கா இரு நாட்களாக தனது அறையை விட்டு வெளியே வரவில்லை. மோனிக்காவின் தாயாருக்கும் சித்திக்கும் எப்படியோ தகவல் எட்டிவிட்டது. ஆகவே மோனிக்கா அமைதியாக இருந்து தன்பாட்டுக்கு தனது துயரங்களை மறந்த பின்னர் வெளியே வரட்டும் என்று அவளைக் குழப்பாமல் இருந்தனர். மோனிக்காவுக்கு அவ்வப்போது என்னென்ன தேவைப்படுமோ, அவற்றை, அங்கு பணிபுரிந்த தாதி அவளுடைய அறைக்கே கொண்டு போய்க் கொடுத்து வந்தாள்.

இவ்வாறு இரண்டு நாட்கள் சோகத்தில் கழித்த பின்னர், அன்று மாலையில் மோனிக்காவின் பிரத்தியேக தொலைபேசி அலறியது. அது நிச்சயமாக கிளின்ரனின் அழைப்புத்தான் என்பதை மோனிக்கா அறிந்து கொண்டாள். அவளுடைய எண்ணம் வீண் போகவில்லை. கிளின்ரன்தான் பேசினார்.

டொண் பிரவுண் விமான விபத்தில் கொல்லப்பட்ட செய்தியை மோனிக்கா அறிந்திருந்தாள். இருவருக்குமிடையில் உள்ள நெருக்கமான உறவு பற்றி மோனிக்காவுக்கும் தெரியும். பொதுவாக சுகநல விசாரணைகள் முடிந்ததும், "இந்தப் பேரிழப்பை எப்படித்தாங்கிக் கொள்கிறீர்கள்?" என்று மோனிக்கா கேட்டாள். இக் கேள்வியைத் தொடர்ந்து கிளின்ரனின் மென்மையான விசும்பல் ஒலியை மோனிக்கா தொலைபேசியூடாகக் கேட்டாள். தனக்கு ஏற்பட்டுள்ள கதியை உடனடியாகச் சொல்லி கிளின்ரனை மேலும் துக்க சாகரத்தில் மூழ்கடிக்க விரும்பாத மோனிக்கா, சில நிமிடங்கள் கழித்து, "நான் உடனடியாக உங்களை வந்து பார்க்கலாமா?," என்று கேட்டாள்.

இவ்வாறு கேட்டுவிட்டு தொலைபேசியில் விம்மி விம்மி அழத் தொடங்கினாள் மோனிக்கா. "ஏன் அழுகிறாய்? கிடோ உனக்கு என்ன நடந்தது?" என்று திரும்பத் திரும்பக் கேட்டார். அவளுடைய வாயிலிருந்து விம்மலைத்தவிர வேறு வார்த்தைகளே வரவில்லை. இதனால், "உடனே புறப்பட்டு வா...!" என்றார். வரும்படி கிளின்ரன் கூறியபின்னரும் மோனிக்கா விம்மலினூடே "என்னை வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றி விட்டார்கள்," என்றாள்.

கிளின்ரனுக்கு மோனிக்காவின் கூற்று மின்காந்த அதிர்ச்சியைக் கொடுத்தது. சில நிமிடங்கள் அவரால் எதையும் கூறமுடியவில்லை. பின்னர், "நிச்சயமாக என்னால்தான் உனக்கு இக்கதி நேர்ந்துள்ளது..... எதற்கும் உடன் வா... காத்திருக்கிறேன்!" என்றார்.

அன்று ஏப்ரல் 7ம் திகதி உயிர்த்தெழுந்த ஞாயிறு. பொதுவாக கிறிஸ்தவர்களுக்கு ஒரு பண்டிகை போன்ற நாள். மோனிக்கா ஒவல் அலுவலகத்துள் நுழைந்தபோது, அவளுக்காக கிளின்ரனின் இரு கைகளும் அகன்று விரிந்திருந்தன. இருவரும் ஆரத் தழுவி இறுக்கிக் கொண்டனர்.

கிளின்ரன் "எதற்காக உன்னை என்னிடமிருந்து பிரிக்கிறார்கள்? சரி பொறுமையாக இரு.

இம்முறை மீண்டும் நான் வெற்றி பெறத்தான் போகிறேன். தேர்தல் முடிந்து இரண்டாவது தடவையும் நான் ஜனாதிபதியாகட்டும்! இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவேன். முதலில் உன்னை மீண்டும் இங்கேயே வரவழைத்துக் கொள்வேன். நீ இங்கேயே என்ன வேண்டுமானாலும் செய்யலாம். உனக்கேற்ற பணியை உனக்கு நான் தருவேன்!"

இவ்வாறு கிளின்ரன் உறுதி கூறியதும் மோனிக்கா தனது வழமையான குறும்புத்தனத்தை வெளிப்படுத்தினாள். "நான் விரும்பும் எந்த வேலையையும் எனக்குத் தந்து விடுவீர்களா? அப்படியானால் எனக்கு எக்கவலையும் ஏற்படப் போவதில்லையே!" என்று இரட்டை அர்த்தத்துடன் பேசினாள். இருவரும் மனம் விட்டுச் சிரித்தார்கள். வழமையை விட சற்றுக் கூடுதலான நேரம் இருவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.



அன்று மாலையில் மனைவி கிலாரியுடனும் மகளுடனும் தேவாலயம் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார் கிளின்ரன். மோனிக்காவின் அணைப்பில் அமிழ்ந்திருந்தவருக்கு தேவாலயம் செல்ல வேண்டிய கடமை மறந்து போயிருந்தது. அப்போது தொலைபேசி கிணுகிணுத்தது. அதன் ஒலியே, தன் இல்லத்திலிருந்து வந்த அழைப்பு என்பதை கிளின்ரனுக்கு உணர்த்தியது. "ரெடியாகுங்கள், இதோ வந்து கொண்டிருக்கிறேன்," என்று கூறி தொலைபேசித் தொடர்பினை அறுத்துவிட்டு மோனிக்கா பக்கம் திரும்பியதும், அவள் நிலமையை உணர்ந்து வெளியேற ஆயத்தமாகிவிட்டது தெரிந்துவிட்டது. பரிதாபமாக அவளைப் பார்த்தார். அவளை அருகே இழுத்து முத்த மாரிபொழிந்தார். இருவரும் பிரிந்தனர்.

மோனிக்கா காலையில் வேளைக்கு எழுந்து விடுவாள். வீட்டின் அருகில் 'ஸ்டார்பக்ப்' என்றொரு தேனீர்ச்சாலைக்குச் சென்று விடுவாள். ஆடைநீக்கிய பால் கலந்த தேனீருக்குச் சொல்லி விட்டு அன்றைய தினசரிப் பத்திரிகையை அங்கிருந்த வண்ணமே மேலோட்டமாகப் படிப்பாள். அவளுக்குரிய சிம்ம ராசிக்குரிய அன்றைய தினப் பலனைப் பார்ப்பாள்.

அன்று திங்கட்கிழமை- வெள்ளை மாளிகையில் மோனிக்காவின் பணிக்கான இறுதிநாள். அன்று மாலை ஒவலில் இருவரும் சந்தித்தனர். ஆரத்தழுவி முத்தமிட்ட பின் அருகருகே அமர்ந்திருந்தபோது, தனது அன்றைய பலனைப் பற்றி வாசித்ததை யிட்டு கிளின்ரனிடம் கூறினாள். "எப்படியிருக்கிறது?" என்று கிளின்ரன் கேட்டார், அதற்கு மோனிக்கா, "என் காதலரிடமிருந்து நான் சில காலம் பிரிந்திருக்கப் போகிறேனாம் என்று பலன் கூறப் பட்டுள்ளது," என்றாள்.

### என் காதலர்

கிளின்ரன், குறும்புத்தனமாக "என்ன இது உண்மைதானா? உனக்கு காதலர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார். மோனிக்காவும், தாமதிக்காமல், "ஏன், இல்லாமல் இதோ இருக்கிறாரே! இவர்தான் என் காதலர்!" என்று கூறி தனது வலது சுட்டுவிரலால் கிளின்ரனின் மார்பைத் தொட்டாள். இதனைக் கேட்டதும் கிளின்ரன் மிகவும் இறுக்கமாக அவளைத் தாவி அணைத்துக் கொண்டார். "ஆகா... இந்த வார்த்தையே எனக்குப் போதுமானது!" என்றார்.



அன்றையச் சந்திப்புக்கு ஒன்றன்பின் ஒன்றாகப் பல இடையூறுகள் ஏற்பட்ட வண்ணமிருந்தன. இடையில் இருதடவைகள் தொலைபேசி அழைப்புகள் குழப்பின. இப்பொழுது ஒவல் அலுவலக முன் கதவுப்புறக் காவல் காக்கும் காவலரின் சமிக்ஞை மணி ஒலித்தது. மோனிக்காவும் கிளின்ரனும் அப்போது உள்ளறையில் இருந்தனர். கிளின்ரன் அவசர அவசரமாக உடைகளைச் சரிசெய்து கொண்டு அவருடைய ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டு வாயிற்புறக் கதவைத் திறக்குமாறு காவலனுக்கு சமிக்ஞை செய்தார். கதவு திறந்தது. வெள்ளை மாளிகை ஊழியர்களின் பிரதி அதிகாரி ஹரோல்ட் லெகஸ் வந்திருந்தார்.

இதற்கிடையில் ஒவல் அலுவலகத்தில் தனது பிரசன்னத்தை அவர் கண்டுகொள்ளா திருக்க மோனிக்கா மிக மெதுவாக பின்புறக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள். அடுத்த நாள் மோனிக்கா 'பெண்டகண்' அலுவலகத்தில் புதிய பணியை ஏற்கச் சென்றாள். அங்கு அவளுக்கு என்ன பணி என்பது நிர்ணயிக்கப்படவில்லை. சில நாட்களின் பின்னர் அவளுடைய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற பணி தரப்பட்டது. எனினும், தினசரி எப்படியோ ஒரு தடவையாவது பார்த்து மகிழ்ந்த கிளின்ரனை பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் இருந்தது.

ஏறத்தாழ ஒரு வருடம் வரை இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாமற் போய்விட்டது.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | எஸ்.சுவர்ணா, இல 137/26, தெவசிரிபுர, தலவாக்கலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# முதல் மரியாதை

அக்பர் அரசவையில் பாடகன் ஒருவன் இருந்தான். அவனது இனிமையான குரலை விரும்பாதவர்களே கிடையாது. மன அமைதியை விரும்பும் நேரங்களில் பாடகனைப் பாடச் சொல்லி இரசித்து மகிழ்வார் அரசர்.

அன்றும் அவனது இசைக்கச்சேரி நடந்தது. அவனது சங்கீத ஞானமும், இனிமையான குரலும் அரண்மனை மண்டபம் எங்கும் ஒலித்தது. அரசவையினர் மெய்மறந்திருந்தனர்.



சந்தோஷத்தில் பாடல் கலைஞனை மிகவும் பாராட்டிய அக்பர், "இசைக் கலைஞனே உனக்கு என்ன பரிசு வேண்டும்," என்றார்.

"அரசே! எனக்கு தாங்கள் பரிசு எதுவும் தரவேண்டாம். பீர்பாலுக்குத் தரப்படும் இராஜ மரியாதை எனக்கும் தரப்பட வேண்டும் அரசே," என்றான் கலைஞன்.

"கலைஞனே! இப்போதே இந்த அரசவையில் உனக்குரிய மரியாதை தரப்படுகிறதே. பீர்பால் மதியூகி, அரசாங்க விஷயத்தில் அவருடைய அறிவுக்கு ஈடு ஏதும் இல்லை," என்றார் அக்பர்.

ஆனாலும், இசைக்கலைஞன் திருப்தியடையவில்லை. ஆதலால், அவனுக்கு ஒரு பாடம் புகட்ட முயன்றார் அக்பர்.

மறுநாள்-

பாடகனையும், பீர்பாலையும் அழைத்தார் அக்பர். இருவரிடமும் ஓர் ஓலை ஒன்றைக் கொடுத்து, இதைப் பக்கத்து நாட்டு அரசனிடம் கொடுத்து வரச் சொன்னார். "அதன்பிறகு உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்" என்று சொன்னார் அக்பர்.

அரசர் உத்தரவுபடியே பக்கத்து நாட்டு அரசனிடம் சென்று ஓலையை கொடுத்தனர் பீர்பாலும், பாடகனும். அந்த ஓலையைப் படித்துப் பார்த்த அரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'இந்த ஓலையைக் கொண்டுவரும் இருவரின் கைகளையும் வெட்டி விடுங்கள்,' என்று எழுதப்பட்டிருந்தது.

அரசன் யோசித்தான். 'இதை அக்பரே செய்திருக்கலாமே ஏன் செய்யவில்லை. நம்மிடம் அனுப்பி இருக்கிறார் என்றால், இதில் ஏதேனும் விஷயம் இருக்கும்' என்பதை உணர்ந்த அரசன் தன் காவலர்களை அழைத்து, "நாளைக் காலையில் இவர்கள் இருவரது கைகளையும் வெட்டி விடுங்கள்." என்றான்.

அவ்வளவுதான் பாடகன் பதறிப்போய், 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டான். அவனுக்கு பீர்பால் எவ்வளவோ ஆறுதல் சொன்னார்.

"பயப்படாதே! நாளைக்கு அரசர் முன்னிலையில் என் கைகளை முதலில் வெட்டுங்கள் என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொல். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றார் பீர்பால்.

அதன் பிறகுதான் நிம்மதியாக உறங்கினான் இசைக்கலைஞன்.

மறுநாள் அரசர் முன்னிலையில் இருவரையும் இழுத்து வந்து நிறுத்தினர். அப்போது பாடகன், "அரசே என் கைகளை முதலில் வெட்டுங்கள்," என்றான்.

"இல்லை அரசே! என் கைகளை முதலில் வெட்டுங்கள்," என்றார் பீர்பால்.

இப்படி இருவரும் மாற்றி மாற்றி சண்டை போடவும் அரசருக்கு ஒரே ஆச்சரியம்.

"ஏன்! உங்கள் உயிர் மீது உங்களுக்கு ஆசையில்லையா? சாவதற்கு எதற்காக துடிக்கிறீர்கள்?" என்றார்.

"அது வந்து... இதில் ஒரு இரகசியமே இருக்கு. அதை எப்படிச் சொல்வது.." என்று தயங்கினார் பீர்பால்.

"மரியாதையாகச் சொல்!" என்று அதட்டினார் அரசர்.

அதற்கு பீர்பால், "அரசே! உங்கள் நாட்டின் மீது எங்கள் அரசருக்கு நீண்ட நாட்களாகவே ஒரு கண் உண்டு. ஜோதிடர்களைக் கலந்து ஆலோசித்தார். அவர்களோ, எப்படியாவது இரண்டு பேரை அந்த நாட்டிற்கு அனுப்பி, அரசன் முன்னிலையில் அவர்களது கைகளை வெட்டச் சொல்லுங்கள். யாருடைய கைகள் முதலில் வெட்டப்படுகிறதோ அவன் அந்நாட்டின் அரசனாவான். இரண்டாவதாக வெட்டப்படுபவன் அந்த நாட்டிற்கு அமைச்சராவான். அதன் பிறகு அந்த நாட்டை நீங்கள் அபகரித்துக் கொள்ளலாம் என்றனர். எனவே தான் அரசர் எங்களை அனுப்பியுள்ளார்," என்று சொல்லி முடித்தார் பீர்பால்.

அவ்வளவுதான் அரசனுக்கு வந்ததே கோபம்... "உங்கள் அரசர் தன்னுடைய மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார். நான் என்ன அவரது அடிமை என்ற நினைப்போ, அவரது உத்தரவை நிறைவேற்ற. மரியாதையாக இரண்டு பேரும் ஓடிப் போய்விடுங்கள், என் கண்முன் நிற்காதீர்கள்," என்று கத்தினார்.

பாடகனுக்கு போன உயிர் திரும்பி வந்தது. இருவரும் தம் நாட்டிற்கு வந்து அக்பர் முன்னிலையில் நின்றனர்.


ஒருவிதமான புன்சிரிப்புடன் இருவரையும் பார்த்த அக்பர், "இசைக்கலைஞனே! இன்றிலிருந்து உமக்கும், பீர்பாலுக்கும் சமமான அந்தஸ்தை வழங்குகிறேன்," என்றார் அரசர்.

பதறிப்போன இசைக்கலைஞன், "வேண்டாம் அரசே! பீர்பால் ஒரு அறிவுக்களஞ்சியம், மதியூகி. அவர் முன்னிற்கக் கூட எனக்கு தகுதியில்லை. எனக்கு தாங்கள் இதுவரை அளித்து வந்த கவுரவமே போதும்," என்றான் பணிவுடன்.

இசைக்கலைஞன் திருந்தியதை எண்ணி மகிழ்ந்தார் அக்பர்.

இந்தச் சிறுவனுக்கு ஐஸ்கிறீம் என்றால் கொள்ளை ஆசை. கீழே ஐஸ்கிறீம் இருக்கிறது. ஆனால் சிறுவனுக்கு அதைச் சென்று எடுக்க வழிதெரியவில்லை. எங்கே நீங்கள் அவனுக்கு உதவுங்கள் பார்க்கலாம்.





## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.04.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **340**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 338


பரிசுக்குரியவர்:
ரா.சரவணகீர்த்தி,
பள்ளே கலை, குண்டசாலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.சமீனா ஷவாஹிர், குறுகொடை, அக்குறணை. | எம்.மிஹால், லீச்றோட், கல்முனை-05. |
| கி.கீர்த்திகா, சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு. | பீ.சாந்தநிலா, தமிழ் மகாவித்தியாலயம், தலவாக்கலை. |
| சிவனடியான் பவித்ரா, நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா. | பாத்திமா ஷ.:.ப்கா, முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04. |
| முஷம்மில் முஹம்மது ஹிஷாம், விபுலானந்தா கல்லூரி, திருகோணமலை. | சி.பிரியதர்சினி, தவசிகுளம், வவுனியா. |
| க.ரஞ்ஞிதமலர், த.ம.வி, தெய்யோவிட்ட. | பாதிமா சகீலா, முன்வது கொடை முஸலிம் வித்தியாலயம், தந்துரை. |

## அதிசயத் தாவரம் 'சன்டியூ'

'சன்டியூ' என்னும் தாவரம் ஐரோப்பா மற்றும் வட அவுஸ்திரேலியாவில் உள்ள சதுப்பு நிலங்களில் வளர்கிறது. இதன் இலைகளில் நீள நீளமான முடிகள் போன்று வளர்ந்து, ஒவ்வொரு முடிகளின் முனைகளிலும் பளபளக்கும் மணிகள் போன்று இருக்கும்.



இந்த மணிகள் ஒட்டும் தன்மை கொண்டவை. இவை பூச்சிகளைக் கவர்ந்திழுக்கும். பளபளப்பாக இருக்கும் மணிகளின் அழகில் மயங்கி இவற்றின் மேல் உட்காரும்.


அவ்வளவுதான், உட்கார்ந்ததும் மணிகளின் மேல் பூச்சிகள் ஒட்டிக் கொள்ளும். இதனால் பூச்சிகள் எழும்பவே முடியாது. அப்படியும் இப்படியும் அசைந்து தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யும்.

இதன் அசைவை பக்கத்தில் இருக்கும் முடிகள் உணர்ந்த கொண்டு, அப்படியே வளைந்து பூச்சிகளைக் கிடுக்கிப் பிடிபோட்டுப் பிடித்துக் கொள்ளும்.

சில வேளைகளில் பெரிய பூச்சிகள் மாட்டிக் கொண்டால் முழு இலைகளும் வளைந்து பூச்சிகளை அப்படியே அமுக்கிச் சாப்பிட்டு விடும்.

இந்த மணிகளில் ஒருவகைத் திரவம் உள்ளது. இது பூச்சிகளை எளிதில் செறிமானம் செய்துவிடும்.

## செய்து பாருங்கள்



**தேவையானவை**

கடினமான கடதாசி அட்டை, ஸ்கெட்ச் பேனா, கத்தரிக்கோல், கம்பி.


**செய்முறை:**

கடதாசி அட்டையில் கப்பின் உதவியால் வட்டம் வரைந்து அதை வெட்டிக் கொள்ளுங்கள்.

வெட்டிய வட்டத்தின் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியான முகம் வரையுங்கள். மறுபக்கத்தில் சோகமான முகம் வரையுங்கள்.

இப்போது துளையிட்டு கம்பியில் கட்டித் தொங்க விட்டு விடுங்கள்.

கம்பியில் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும் இந்த முகம் அப்படியும் இப்படியும் திரும்பித் திரும்பிப் பறக்கும் போது சிரித்த முகத்துடனும் சோக முகமாய் மாறி மாறி வருவது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



# திக் திக் தொடர்

# 22 'சிகப்பு வணக்கம்'

"என்னோட இடது கை தோள் பட்டையை எதுவோ தீய்ச்சுகிட்டுப் போன மாதிரி வலி. அதைத் தொடர்ந்து கண்ணாடி ஜன்னல் சுக்கல். சுக்கலா உடைஞ்சு சிதறியது.... இப்ப நான் சொன்ன தெல்லாம் ஒரே செக்கண்ட்ல நடந்து முடிஞ்சுடுச்சு....."

விவேக் குறுக்கிட்டுக் கேட்டான். "அறைக் கதவை யாரோ திறந்து பார்க்கிற மாதிரி உங்களுக்கு உள்ளுணர்வு ஏற்பட்டதா சொன்னீங்க.... திரும்பியும் பார்த்தீங்க இல்லையா?"

"ஆமா....!"

"அப்படித் திரும்பிப் பார்த்தப்ப, உங்க பார்வைக்கு யாராவது தென்பட்டாங்களா......?"

"இல்லை...."

"கதவு திறந்தாவது இருந்ததா.....?"

நரேஷ் சிரமமாய் எழுந்து உட்கார்ந்தான்.

"ஸார்.... நான் பார்த்தது ஒரு விநாடிக்கும் குறைவான பார்வை.... கதவு திறந்ததா இல்லையான்னு தெரியலை...."

"சம்பவம் நடந்தபோது இந்த அறையில் உங்க மனைவியும் இருந்தாங்களா.....?"

"இல்லை ஸார்.... என்னோட மனைவி. ஹம்ஸா பக்கத்து ரூம்ல படுத்துட்டிருந்த அவ அம்மாவைப் பார்க்கப் போயிருந்தா. ஹம்ஸாவோட மதர்க்கு சைனஸ் ப்ராப்ளம். ஸோ இந்த ஏர்க்கண்டிஷன் ரூம் அவங்க ஹெல்த்துக்கு ஒத்துக்காததால பக்கத்தில் இருக்கிற சாதாரண ரூமுக்குப் போய்ட்டாங்க...."

நரேஷ் பேசிக் கொண்டிருக்கும் போதே ஹம்ஸா கண்களில் நீர் சிதற, தழு தழுத்த குரலில் சொன்னாள்.

"இவர் செல்ஃபோன்ல பேசிகிட்டிருக்கும்போதுதான் அம்மாவைப் பார்த்துட்டு வர்றதுக்காக பக்கத்து ரூமுக்குப் போனேன். அம்மா தூங்கிட்டிருந்தாங்க... அம்மாவை எழுப்பி 'ஏதாவது குடிக்கிறியா'ன்னு கேட்டுக்கிட்டிருக்கும்போதுதான் துப்பாக்கி வெடிக்கிற சத்தம் கேட்டது....ஓடி வந்து பார்த்தா, இவர் தோள்பட்டையில் ரத்தம் வழிய துடிச்சிட்டிருக்கார். கண்ணாடி ஜன்னல் உடைஞ்சு ரூமெல்லாம் சில்லுச் சில்லா சிதறிக் கிடந்தது...."

"மிஸஸ் ஹம்ஸா....! துப்பாக்கி வெடிக்கிற சத்தம் கேட்டு, இந்த அறைக்கு நீங்க வந்தபோது, கதவு திறந்து கிடந்ததா....? சாத்தியிருந்ததா....?"

"லேசா திறந்திருந்தது..?"

"யாரையும் நீங்க பார்க்கலை....?"

"பார்க்கலை...."

"யாராவது ஓடற சத்தமாவது கேட்டதா?"

"நான் இந்த அறைக்கு வர்றதுக்கு முன்னாடியே எல்லா செண்டரிஸும் தபதபன்னு ஓடி வந்துட்டாங்க. அந்த கலேபரத்துல யார் வந்தாங்க யார் சுட்டாங்க.... உள்ளே வந்த நபர் எப்படி வெளியே போயிருக்க முடியும்.... இந்தக் கேள்விகளெல்லாம் மனசுக்குள்ளே இருந்தாலும் எதுவுமே பிடிபடலை...."

இப்போது நரேஷ் குறுக்கிட்டான்.

"ஸார்.... இந்த சர்க்யூட் ஹவுஸுக்குள்ளே பாதுகாப்பு ஏற்பாடுகள் இவ்வளவு சிறப்பா செய்யப்பட்டிருந்தாலும், எங்கேயோ ஓர் ஓட்டை இருக்கும். அந்த ஓட்டையை உபயோகப்படுத்தித்தான் என்னைக் கொல்லப்பாக்குறாங்க..... முதல் முயற்சியா ஏர் கண்டிஷனரின் கண்டெய்னர் பாக்ஸில் ஒரு கெமிக்கல் பாய்ஸனை வெச்சுக் கொல்லப் பார்த்தாங்க.... ரெண்டாவது முயற்சி இந்தத் துப்பாக்கி பிரயோகம்! என் மனசுல பட்ட ஒரு சந்தேகத்தை உங்ககிட்ட சொல்லலாமா ஸார்?"

"சொல்லுங்க..."

"எனக்கு செக்யூரிட்டி தர்றதுக்காக வந்திருக்கும் இந்த போலீஸ் விங்கை சேஞ்ச் பண்ணணும்.... எதிரிகளுக்கு விசுவாசம் காட்ற ஒரு நபர், போலீஸ் யூனிஃபார்ம்க்குள்ளே இருக்கணும்ங்கறது என்னோட எண்ணம்...."

"யூ....மே.... பி.... கரெக்ட் மிஸ்டர் நரேஷ்! இந்த போலீஸ் விங்கை உடனடியா மாத்தி சி.ஆர்.எஃப். பொலிஸைப் போட ஏற்பாடு பண்ணிடலாம் சி.ஆர்.எஃப் ஆட்களை மீறிக்கொண்டு ஒரு ஈ எறும்புகூட உள்ளே வர முடியாது.... மிஸ்டர் சார்லஸ்......"

"ஸார்....."

"சி.ஆர்.எஃப்பைக் கொண்டு வர ஏற்பாடு பண்ணுங்க...."

"எஸ் ஸார்...."

"அப்படியே..... இப்போ செக்யூரிட்டி பணியில் ஈடுபட்டிருக்கிற போலீஸ் விங்சில் இருக்கிற நபர்களின் பர்சனல் ஃபைல்களைப் புரட்டிப் பாருங்க.... யாராவது மனசுக்கு நெருடலாக பட்டா, ஒரு ரெட் டாட் வெச்சு அந்த ஃபைலை எங்கிட்ட கொண்டு வாங்க...."

"எஸ்... ஸார்...." சார்லஸ் அட்டென்ஷனில் பின் வாங்கி, அறையை விட்டு வெளியே போவதையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நரேஷிடம் திரும்பினான்.

"மிஸ்டர் நரேஷ்... நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லுங்க.... தோட்டா எந்த திசையிலிருந்து பாய்ந்து வந்தது?"

"கதவுக்குப் பக்கத்திலிருந்துதான் ஸார்....."

"தோட்டா பாய்ந்து வந்தபோது நீங்க நின்னுட்டிருந்த இடம் அந்த ஜன்னலுக்குப் பக்கத்துலதானே....?"

"ஆமா ஸார்...."

"இங்கே ஃபாரன்ஸிக் யாரு....?"

"மை செல்ஃப் ஸார்...." தனக்குப் பின்னால் குரல் வர, விவேக் திரும்பிப் பார்த்தான்.

ஃபாரன்ஸிக் ஆபீஸர் விநாயகம், கையில் ஒரு வரைபடத்தை வைத்துக்கொண்டு முன்னால் வந்தார்.

"ஓ.... மிஸ்டர் விநாயகம்.... நீங்களா...? ப்ளீஸ் கம்...." - விவேக் அவருடைய கையைப் பற்றி ஸ்நேகமாய் குலுக்கிவிட்டுக் கேட்டான்.

"ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்தீங்களா?"

"பார்த்தேன் ஸார்...."

"தோட்டா கிடைச்சுதா.... பிஸ்டல் என்ன ஜாதி....?

"ஸாரி..... ஸார்.... தோட்டா கிடைக்கலை. ஜன்னலுக்கு வெளியே போய் சர்ச் பண்ணிப் பார்த்தோம்.... நாட் ஃபவுண்ட்.... ஃபாரன்ஸிக் ஆட்கள் இன்னமும் தேடிக்கிட்டு இருக்காங்க....."

"கையில் என்ன வரைபடம்.....?"

"மிஸ்டர் நரேஷ் சொன்ன ஸ்டேட்மெண்ட்டை வெச்சு, தோட்டா புறப்பட்ட இடம்....அது ட்ராவல் பண்ணின 'ட்ராஜக்டரி பாத்......' எல்லாத்தையும் நோட் பண்ணி ட்ராயிங் பண்ணினேன்...."

"கொண்டாங்க பார்க்கலாம்...."

விவேக் வாங்கிப் பார்த்தான்.

கதவுக்கும் ஜன்னலுக்கும் இடையே இருந்த பதினாலு



அடி தூரம், வரை படத்தில் ஒவ்வொரு அங்குலமாகப் பிரிக்கப்பட்டு, அதில் டாட் லைன் ஒன்று உற்பத்தியாகி, 'ட்ராஜக்டரி பாத்' என்று சொல்லப்படுகிற தோட்டா பயணம் செய்த பாதை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"மிஸ்டர் விநாயகம்...."

"ஸார்...."

"'ட்ராஜக்டரி பாத்' தோட கோணம் எவ்வளவு?"

"எழுபது டிகிரி ஸார்...."

விவேக் நெற்றிப் பொட்டை அவஸ்தையாய்த் தேய்த்துக்கொண்டே உடைந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் போய் நின்று வெளியே எட்டிப்பார்த்தான்.

சிட் அவுட் தெரிந்தது. கொஞ்சம் தள்ளி



பசுமையாய் லான். அதற்குப் பிறகு க்ரோட்டன்ஸ் தொட்டிகள்.

விவேக், வரைபடத்தோடு ஃபாரன்ஸிக் ஆபிஸர் விநாயகத்தையும் அழைத்துக் கொண்டு, வெளியே வந்து சிட் அவுட் பரப்புக்குள் நுழைந்தான்.

சில விநாடி பார்வைக்குப் பின் தன் சர்ட் பாக்கெட்டில் இருந்த பால் பாயிண்ட் பேனாவை எடுத்து வரைபடத்தில் இருந்த தோட்டா சென்ற பாதையாக 'ட்ராஜக்டரி பாத்' கோட்டை, எழுபது டிகிரி கோணத்தில் ஒரு இழுப்பு இழுத்தான். அந்தக்கோடு சிட் அவுட்டில் இருந்த கான்க்ரீட் தூணுக்குப் போய் முட்டிக் கொண்டது.

விவேக், ஃபாரன்ஸிக் ஆபீஸரிடம் நிமிர்ந்தான். "மிஸ்டர் விநாயகம்! நீங்க வரைந்திருந்த 'ட்ராஜக்டரி பாத்' படி தோட்டா அந்த பில்லர் மேல் பட்டிருக்கணும்.... பட் அப்படி பட்டதுக்கான அடையாளம் எதுவும் இல்லையே....?"

விநாயகம் பதில் சொல்லத் திணறிக் கொண்டிருக்கும்போதே, ஃபாரன்ஸிக் பிரிவைச் சேர்ந்த ஒருவர் வேகவேகமாய் வந்தார். கையில் சின்னதாய் ஒரு பாலிதீன் பை. அதற்குள் வெள்ளையாய் உருண்டையாய் ஏதோ ஒன்று.

விநாயகம் கேட்டார்.

"என்ன தோட்டா கிடைச்சுதா....?"

"இல்லை ஸார்..... இதுதான் கிடைச்சுது...."

"என்ன?"

விவேக் அந்த பாலிதீன் பையை வாங்கிப் பிரித்து, உள்ளேயிருந்து அதை எடுத்தான்.

அது ஒரு காகித உருண்டை.

## கிரைம் சக்கரவர்த்தி
## ராஜேஸ்குமார்

கவனமாய்ப் பிரித்தான்.

எலெக்ட்ரானிக் டைப்ரைட்டர், தமிழில் இரண்டு வரிகளை அடித்திருந்தது.

'அதிர்ஷ்டம் மூன்று தடவை நரேஷைக் காப்பாற்றிவிட்டது. நான்காவது தடவை அவன் தப்ப முடியாது. அவனுக்கு வைக்க நேரம் நெருங்கிவிட்டது!'


(தொடர்ந்து வரும்)

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# சத்த யுத்தம் 32

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றோம். ஜெனரேட்டர் இருக்கிறதா என்று விசாரிக்க ஆரம்பித்த போது அங்கு ஊட்டியிலேயே ஒரே ஒரு ஜெனரேட்டர்தான் இருந்தது. (இன்றைய நிலவரம் எனக்குத் தெரியாது.)

அந்த ஜெனரேட்டரை கொண்டு வருவதற்கு ஆட்கள் பறந்தார்கள். போன வேகத்தில் திரும்பி வந்த அவர்கள் சொன்ன தகவல், "ஜெனரேட்டர் இருக்கிறது... ஆனால் ஆபரேட்டர் இல்லை... அவர், பக்கத்திலுள்ள கேத்தி என்ற ஊருக்கு மாமனார் வீட்டு



விருந்திற்குப் போயிருக்கிறார்.. நாளைதான் வருவார்..."

உடனே புரொடக்ஷன் மேனேஜர் உள்ளூர் நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு ஆபரேட்டரை அழைத்துவர கேத்திக்கு காரில் புறப்பட்டார்.

மத்தியானம் ஆகிவிட்டது. சாப்பாட்டு வேளை வந்ததும் சாப்பாட்டின் சுவையே தெரியாமல் சாப்பிட்டு முடித்தோம். இதற்கிடையில் "கே. ஆர்.விஜயா அவர்கள் கேரளாவிற்குப் புறப்பட்டாகிவிட்டதா?" என்று சென்னையிலிருந்து டெலிஃபோன் கால்கள் வர ஆரம்பித்தன.

கே. ஆர்.விஜயா அவர்கள் டெலிஃபோன் இருக்குமிடத்திற்குச் சென்று இங்குள்ள நிலைமைகளை எடுத்துக் கூறி, "ஏகப்பட்ட செலவுகளுக்கு இடையில் மிக நெருக்கடியான சூழ்நிலை நிலவுகிறது. அதனால் எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து புறப்பட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு விடுகிறேன்" என்று சொன்னார்.

நாங்களும் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை முதலில் படமாக்கிவிட்டு அனுப்பி வைக்க பரபரப்போடு காத்திருந்தோம்.

மொத்த யூனிட்டுமே டென்ஷனில் இருந்தது. 3 மணியளவில் புரொடக்ஷன் மேனேஜர் ஆபரேட்டரை அழைத்துக் கொண்டு வந்தார்.

ஜெனரேட்டர் கொண்டு வரப்பட்டது. கனெக்ஷன்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டது. பரபரப்போடு வேலையைத் துவக்கினோம்.

கேமிராமேன் மறுபடியும் "ஆல் லைட்ஸ்" என்றார். எரிந்த விளக்குகள் ஒரு சில நொடிகளில் அப்படியே மங்கி மஞ்சளாகி மறைந்து போயின.

"என்னய்யா ஆச்சு?" என்று கத்தினேன். "ஜெனரேட்டர்லோடு தாங்கலை சார்..." என்று பதில் வந்தது.

மறுபடியும் சோதனை. ஜெனரேட்டரை சரி செய்வதற்கான முயற்சியில் இறங்கினார்கள் தொழிலாள நண்பர்கள்.

அவர்கள் சரி செய்துவிட்டதாக வந்து சொல்வதும், உடனே கேமிராமேன் "லைட்ஸ் ஆன்" என்று கத்துவதும், எரிகின்ற விளக்குகள் மின்மினிப் பூச்சிகளாக மாறி எரிந்த சுவடு தெரியாமல் மறைந்து போவதும் இப்படி ஒருகண்ணாமூச்சி விளையாட்டு மாலை வரை நடந்து கொண்டிருந்தது.

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிந்த நிலையில் காலையிலிருந்து மாலை வரை ஒரு ஷாட்கூட எடுக்க முடியாத சூழ்நிலை.

அந்த நிலையிலும் எங்களுக்குத் தைரியம் சொல்லி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார் தயாரிப்பாளர் கலைஞானம் அவர்கள்.

இன்று படப்பிடிப்பே நடக்காமல் போய்விடுமோ என்ற பயம் எனக்கு. அப்படி ஏதேனும் நடந்தால் மறுபடியும் இவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து எப்படி, எப்போது படப்படிப்பை துவங்குவது என்ற கவலை.

மாலை 7 மணியளவில் திடீரென்று அரங்கிலிருந்த அத்தனை விளக்குகளும் எரிந்தன. எரிந்த விளக்குகள் அணையாமலும் இருந்தன!

"ஜெனரேட்டர் சரியாகிவிட்டதா?" என்றேன். "இல்ல சார்... கரண்ட்டே வந்தாச்சு..." என்றார்கள்.

வேகமாக வேலையை ஆரம்பித்தோம். கே. ஆர்.விஜயா சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படமாக்கினோம். அவர் சம்பந்தப்பட்டக் காட்சிகள் முடிய பத்து மணி ஆனது, என்றாலும் அவர் உடனே கேரளாவுக்குப் புறப்பட்டார். அவரது பெருந்தன்மைக்கும், ஒத்துழைப்புக்கும் நன்றி கூறி வழியனுப்பி வைத்தோம்.

அடுத்து, மறுநாள் விமான டிக்கெட் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு வீரர்கள் சம்பந்தப்பட்ட வேலையை முடித்து அவர்களையும் அனுப்பிவிட்டு, கடைசியாக கூட்டத்தினரை வைத்து சில Insert ஷாட் எடுத்தோம்.

பலவிதப் போராட்டங்களுக்குப் பிறகு எப்படியோ வேலை முடிந்ததே... என்று சிறிது நிம்மதியுடன் வெளியில் வந்தோம்.

வெளியில் பயங்கரமான குளிர் நிலவியது. ஒவ்வொருவரும் குளிர் தாங்காமல் ஓடிப் போய் வண்டியில் ஏறிக் கொண்டிருந்தார்கள்.

நானும் ஓடிப் போய் காரில் ஏறிக் கொண்டு கண்ணாடிகளை எல்லாம் ஏற்றி விட்டு, டிரைவரிடம் "போகலாம்" என்று சொன்னபோது என்னுடைய உதவியாளர் சுதாகர் ஓடிவந்து கண்ணாடி வழியாக சைகை மூலம் என்னிடம் ஏதோ சொல்ல முற்பட்டார்.

நான், 'எதுவாக இருந்தாலும் ஹொட்டலில் போய் பேசிக் கொள்வோம்' என்று காரின் உள்ளேயிருந்தே சைகை செய்தேன்.

ஆனால் சுதாகர், "ஒரு முக்கியமான விஷயம்.." என்று கெஞ்சவே அரை மனதுடன் காரிலிருந்து இறங்கினேன். எரிச்சலுடன் "என்னப்பா விஷயம்?" என்றேன்.

"கேமிரால ஷட்டர் குளோஸ் ஆகியிருக்காம் சார்!"


கேமிரா ஷட்டர் குளோஸ் ஆகியிருந்தால் படம் எதுவுமே பதிவாகியிருக்காது. அவுட்டோர் யூனிட் உரிமையாளர் பாலனிடம் கேட்டேன். "எப்போ.. எந்த ஷாட்ல குளோஸ் ஆச்சுன்னு தெரியுமா?" என்றேன்.

"தெரியலை சார்..." என்றார். "முதல்ல இருந்தே அப்படி இருந்ததா... இல்ல, கடைசி ஷாட்லதான் அப்படி ஆச்சா..." என்று கேட்டேன்.

"தெரியலை சார்..." என்றார். "லேப்ல டெவலப் ஆனாத்தான் தெரியும்." ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றோம். 'இதைத் தயாரிப்பாளரிடம் சொல்வதா வேண்டாமா...? சொன்னால் எப்படித் தாங்கிக் கொள்வார்? இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் வேலை செய்தும் இப்படி ஒரு சோதனையா?'

(அனுபவங்கள் தொடரும்)

## வாழ்வைத் திருடும் வஞ்சகர்கள்



தங்கக்கோப்பை படப் பிடிப்பின் போது....

# வீரன் தான் பிரீன்

28

## தமிழில் ப.ராமஸ்வாமி

சென்ற இடங்களிலெல்லாம் அவர்களுக்குக் கிடைத்த பாதுகாப்புக்கும் உபசாரத்திற்கும் அளவில்லை. அவர்களை வாழ்த்தாத நண்பரேயில்லை; வியந்து போற்றாத ஜனங்களேயில்லை.

1921-ஆம் வருடம் ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே சில ஐரீஷ் தலைவர்கள் இங்கிலாந்தோடு சமாதானம் செய்து கொள்ள முயற்சித்த செய்தி வெளிவந்தது. ஜூலை மாதம் 1ஆம் திகதி முதல் சமாதானம் அமுலுக்கு வரவேண்டுமென்று உடன்படிக்கையும் செய்யப்பட்டது.

தொண்டர்கள் இந்தச் சமாதானத்தில் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும் என்றும், பின்னர் மீண்டும் சண்டையை ஆரம்பிக்கலாம் என்றும் எண்ணியிருந்தனர். அவர்களிடம் வெடிமருந்து அதிகமாயில்லை. குண்டுகளும் குறைவு. ஓய்வுக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வெடிமருந்தை ஏராளமாய் வரவழைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் தீர்மானித்தனர்.

சமாதானம் பின்னால் தேசத்தைப் பிளவுபடுத்திப் பெருத்த அவமானத்தை விளைவிக்குமென்ற விஷயம் அவர்களுக்குத் தெரியாமற் போய்விட்டது. சமாதானக் காலத்தில் தான் பிரீன் தென்பகுதியிலிருந்த குடியரசுப் படையின் 'குவாட்டர் மாஸ்டர்' பதவியில் இருந்தான். ஆனால், பின்னால் அப்பதவியை இராஜினாமாச் செய்துவிட்டான்.

அக்காலத்தில்தான் அயர்லாந்து முழுவதும் சிதறிக்கிடந்த குடியரசுப் படையின் பிரிவுகள் பெருஞ்சேனைகளாக ஒன்று சேர்க்கப்பட்டன.

சமாதானக் காலத்தில் தான் பிரீனும் மற்றத் தொண்டர்களும் நகரங்களில் சுயேச்சையாக நடமாட முடிந்தது. சென்ற இடமெல்லாம் ஜனங்கள் அவர்களை வரவேற்று, 'சுதந்திர வீரர்கள்' என்று பாராட்டிப் புகழ்ந்தனர்.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் அவர்களைக் 'கொலைகாரர்கள்' என்று கூறிவந்த ஜனங்களே, பின்னால் அவர்களைப் போற்றிப் பரவ நேர்ந்தது!

செப்டம்பர் மாதம் முடிவில் அவன் டப்ளினுக்குச் சென்று தங்கியிருந்தபோது, அங்கிருந்த தொண்டர்படைத் தலைவர்கள் அவனுக்கு ஒரு தங்கக் கடிகாரமும், சங்கிலியும் பரிசளித்து அவனைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

சமாதான உடன்படிக்கை கையெழுத்தாவதற்குச் சில தினங்களுக்கு முன்னால் தான் பிரீன் டப்ளினை விட்டுத் தென்பாகத்திற்குச் சென்றான். தொண்டர்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் போலிச் சமாதானத்தை எதிர்த்து நிற்கும்படி செய்துவிட்டால், தலைவர்கள் அவர்களுக்கு விரோதமாக நடக்கமாட்டார்கள் என்று அவன் நம்பியிருந்தான். தொண்டர்களே அரசியல் வாதிகளுக்கு வழிகாட்ட வேண்டியிருந்தது.

தான் பிரீன் டிசம்பர் 7ஆம் திகதி மீண்டும் டப்ளினுக்குச் சென்று லியாம் லிஞ்ச், ஸீன் ஹோகன் முதலிய நண்பர்களைக் கண்டு, சமாதானத்தைத் தொலைத்து, உடனே சண்டையை மறுபடி தொடர்ந்து நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினான்.

குடியரசுப் படையில் பிளவு ஏற்படாமலும், நாட்டுமக்கள் சோம்பலில் ஆழ்ந்து விடாமலும் இருக்க வேண்டுமானால், போர் நடத்துவதே உத்தமம் என்பதை விளக்கினான். பிரிட்டிஷாருடன் எவ்விதமான சமாதானம் செய்யப்பட்டாலும், ஜனங்கள் அதை ஏற்றுக் கொண்டு விடுவார்கள். என்பது அவனுக்குத் தெரியும். ஏனெனில், மக்கள் போராட்டத்தினால் பெரும் நஷ்டங்களடைந்து களைப்புற்றிருந்தனர். ஆதலால் சமாதான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு, அதன்படி புதிய தேர்தலை நடத்தி, அதன் மூலம் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வது சரியான முறையன்று என்று அவன் வாதாடினான்.

தலைவர்கள், யாவரும் அவனுடைய நோக்கத்தை ஆதரிக்க மறுத்து விட்டனர். பழைய நண்பர்கள் பலரும் அவனை இவ்விஷயத்தில் கைவிட்டனர்.

அவன் தன் முயற்சி தோல்வியுற்றதன் மேல் அயர்லாந்தை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுக்குச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தான்.

அவனும் ஸீன் ஹோகனும் இலண்டனில் இருந்த இந்தியத் தலைவர்களை இது சம்பந்தமாய்க் கலந்து பேசிய பொழுது அவர்கள், 'ஐரீஷ்காரர்களாகிய நீங்கள் உங்கள் நாட்டுப் போராட்டத்தையே முடிக்காமல் இடையில் நிறுத்திவிட்ட பொழுது, நீங்கள் இந்தியாவுக்கு வந்து என்ன செய்துவிடமுடியும்?" என்று கேட்டார்கள்.

இதனால் தான் பிரீன் இந்தியாவுக்கு வரவேண்டாம் என்று கருதி, அமெரிக்காவுக்குப் புறப்பட ஏற்பாடு செய்தான். இடையில், அவனுடைய உயர்த்தோழன் ஸீமஸ் ராபின்ஸனுக்கு டப்ளினில் திருமணம் நடந்தது, தான் பிரீன் கூடவே இருந்து அதை நடத்திவைத்தான்.

அவன் அயர்லாந்தை விட்டுப் புறப்படுவதற்குமுன்னால் குடியரசுப் படையின் முக்கியமான அதிகாரிகளைக் கண்டு, மீண்டும் போரை ஆரம்பிப்பதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறி, அதை ஆதரிக்கும்படி வேண்டினான். அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டிருந்தால், அவன் அயர்லாந்தை விட்டு வெளியேற வேண்டியிராது.

தான் பிரீன் நாட்டைவிட்டுப் புறப்படும் பொழுது, அதுவரை நானும் நண்பர்களும் செய்துவந்த அரும்பெரும் முயற்சிகள் வீணாக்கப்பட்டதையும், அவர்களுடைய தியாகமெல்லாம் தேசத்தை இரண்டு பிரிவுகளாக வெட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டதையும், அந்நிய அரசனுக்கு 'ராஜ விசுவாசமாக' இருப்பதாகப் பிரமாணம் செய்ய வேண்டிய கட்டுப்பாடுடைய சுதந்திரமே கிடைத்திருப்பதையும் எண்ணி மனம் வருந்தினான்.

ஸீன் ஹோகன் முன்கூட்டியே இலண்டனுக்குச் சென்று அவனுடன் சேர்ந்து கொண்டான். அதுவரை அவன் தேசத்தை விட்டு வெளியேறி எந்த அந்நிய நாட்டையும் கண்டதில்லை.

லண்டன் நகரில் புதுமைகள் அவன் தாய்நாட்டைப் பற்றிக்கொண்டிருந்த மனக்கவலையைக் கொஞ்சம் மறப்பதற்கு உதவி செய்தன. அந்நகரில் அவன் இரண்டு வாரம் தங்கியிருந்து, ஆங்காங்கிருந்த விசேஷங்களைக் கண்ணுற்று வந்தான். அங்கிருந்து நேராக அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்குச் செல்லமுடியா தென்பதை அறிந்து அவனும் ஹோகனும் முதலில் கனடாவுக்குப்போய், அங்கிருந்து ஐக்கிய மாகாணத்திற்குள் நுழைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

அவர்களிடம் போதிய பணமில்லை. கனடாவுக்குள் இறங்குவதற்கு அனுமதிச் சீட்டுக்களுமில்லை. பின்னால் ஏதோ தந்திரம் செய்து அவர்கள் அனுமதிச்சீட் டுக்களைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டனர். மூன்று வாரங்கள் கப்பலில் பிரயாணம் செய்து அவர்கள் சௌக்கியமாகக் கனடாவையடைந்தனர்.

அங்கிருந்து ஐக்கிய மாகாணத்திற்குப் போய், சிக்காகோ நகரையடைந்தனர். அங்கு தான் பிரீனுடைய இரு சகோதரர்களான ஜான், பாட் என்பவர்களும், சகோதரியான மேரியும் அவர்களைச் சந்தித்தனர். அவர்கள் பல வருஷங்களாக அமெரிக்காவிலேயே தங்கியிருந்தவர்கள். வெகு தொலைவிலிருந்த அந்த அந்நிய நாட்டிலும், தான் பிரீன் தம் பந்துக்களின் மத்தியிலே வாழ நேர்ந்ததால், தான் அயர்லாந்திலேயே இருந்ததாக எண்ணிக்கொண்டான். வேறு பல ஐரிஷ் நண்பர்களும் அவனைக் கண்டு மிகுந்த உபசாரம் செய்தனர். நாக்லாங்கிலே அவனுடன் போராடிய ஓ' பிரியன் அவனைக் கண்டு பேசினார்.

அமெரிக்காவில் பல ஐரிஷ்காரர்கள் ஏராளமான மூலதனங்களைப் போட்டுப் பெரிய தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருப்பதைக் காணத் தான் பிரீன் மகிழ்ச்சியடைந்தான். பிறகு அவன் பிலடல்பியா, கலிபோர்னியா முதலிய நகரங்களைப் பார்வையிட்டான்.

அக்காலத்தில் அவனுக்கு அயர்லாந்தில் நடந்து வந்த விஷயங்களைக் குறித்து அடிக்கடி தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

உடன்படிக்கைக்குப் பிறகு அயர்லாந்தின் நிலைமையைக் குறித்து அமெரிக்கப் பத்திரிகைகள் விரிவான செய்திகளை வெளியிட்டு வந்தன. அவற்றிலிருந்து தொண்டர்கள் இரு பிரிவாகப் பிரிந்து ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டிருந்தனர். என்பது தெளிவாய்த் தெரிந்தது.

ஒவ்வொருநாளும் அவர்களுக்குள் மனஸ்தாபம் பெருகிக் கொண்டே வந்தது. அயர்லாந்திலுள்ள பிளவு அமெரிக்காவிலிருந்த ஐரிஷ்காரர்களுக்குள்ளும் பரவிவிட்டது. அவர்களும் இருபிரிவாகப் பிரிந்து நின்றனர். மார்ச் மாதம் ஆரம்பத்தில் லிமெரிக் நகரில் தொண்டர்கள் இரு பிரிவாகப் பிரிந்து சண்டைக்குத் தயாராயிருந்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

ஒரு பிரிவினர் உடன்படிக்கையை ஆதரித்தும் மற்றப் பிரிவினர் எதிர்த்தும் நின்றனர். அவர்களுக்குள் சண்டை ஆரம்பித்து விட்டால், தேசம் முழுவதும் உடனே உள்நாட்டுக் கலகம் பரவிவிடும் லிமெரிக் நகரத் தொண்டர்கள் ஒரு சிறு சமாதானம் செய்துகொண்டு தான் பிரீனை உடனே புறப்பட்டு வரும்படி கம்பியில்லாத் தந்திமூலம் ஒரு செய்தி அனுப்பியிருந்தனர்.

தான் பிரீன் அப்பொழுது கலிபோர்னியாவில் இருந்தான். இரண்டு தினங்களில் அவன் அங்கிருந்து சிக்காகோவுக்கும் பிலடல்பியா வுக்கும் சென்று, பழைய நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, ஹோகனுடன் நிவ்யோர்க் நகரையடைந்தான்.

அங்கிருந்து கப்பலேறுவது எளிதென்று அவர்கள் கருதியிருந்தனர். போதுமான பணமும் அனுமதிச் சீட்டுக்களும் இல்லாமையால், அவர்கள் அமெரிக்காவுக்கு வரும்பொழுது ஏற்பட்ட கஷ்டம் அங்கிருந்து புறப்படும் பொழுதும் ஏற்பட்டது.

தான் பிரீனும் ஹோகனும் பின்னும் பல ஏமாற்றங்களடைந்து, கடைசியாக மிகுந்த முயற்சியின்மேல் ஒரு கப்பலில் ஏறிக் கொண்டு அயர்லாந்திலுள்ள கோப் நகரை நோக்கிப் புறப்பட்டனர். ஏப்பிரல் மாத ஆரம்பத்தில் அவர்கள் கோப் நகரை அடைந்தனர்.

அங்கு ஒரு நண்பர் அவர்களைச் சந்தித்து வரவேற்று, தான் பிரீனுடைய மனைவி ஓர் ஆண் மகனைப் பெற்றிருப்பதாயும், தாயும் குழந்தையும் அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாயும் அறிவித்தார்!

♦♦

(பயணம் அடுத்த இதழில் நிறைவுபெறும்)



---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

53

# அரங்கம் அந்தரங்கம்

பட்டம் கையிலே இருக்கும் போது நூல் அறுந்து போனால் அது எங்கே விழுந்திருக்கிறது என்று நமக்குத் தெரியும், உடனடியாக அதை எடுத்து விடவும் முடியும்.

வானத்தில் பறக்கும் போது அறுந்து போனால், விழுகின்ற தூரம் தெரியும்; இடம் தெரியாது; விரைவில் எடுக்கவும் முடியாது.

ரீந்திரநாத் சொன்னது போல், "கார் விபத்தில் நீ விழுந்த இடம் தெரியும்; விமான விபத்தில் தெரியாது!"

சம்பிரதாயத்தை மீறிவிட்டவர்கள் சிக்கக்கூடிய வலை எந்த நாட்டிலும் விரிக்கப்பட்டிருக்கலாம்.

நாலு சுவர்களுக்குள் வரும் துன்பம், அந்த நான்கு சுவர்களுக்குள்ளாகத் தீர்க்கப்

## கவியரசு கண்ணதாசன்

பட்டு விடும்.

மனிதர்கள் பறவையாக இருப்பதிலே ஒருவகைச் சுகம் இருக்கிறது. ஆனால் எந்த வேடன் அதன் ஆயுளை நிர்ணயிப்பானோ என்ற பயம் இருக்கிறது.

மலர்ச் செடியாக இருப்பதிலே தியாகமே மிஞ்சுகிறது. என்றாலும், அந்த நல்ல பெயரோடு உரமாகிவிட முடிகிறது.

மீண்டும் நான் பழமைக்கே வருகிறேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கணவன் மனைவியைக் கொலை செய்வதென்பது அபூர்வமாகவே நடந்தது. அப்படி ஒரு நிகழ்ச்சி அவ்வாறு நடந்து விட்டால், அது சரித்திரமாகி விடும். 'கொலைச் சிந்துக் கவிராயர்கள்' ஒரு காவியம் பாடி விடுவார்கள். டேப் அடித்துப் பாடுகிறவர்கள்; அதைத் திருவிழாக்களிலே பாடுவார்கள்.

அரிச்சந்திரன் கதையையும், மதன காமராஜனின் கதையையும் போல் அதற்கொரு முக்கியத்துவமும் வந்துவிடும்.

நடத்தைக் கேடும் அதன் விளைவுகளும் அன்று குறைவாக இருந்தன. இன்று நடத்தைக் கேட்டுக்கு ஒரு மரியாதை, விளைவுளின் விஸ்வரூபம், அவற்றை வெளியிடுவதற்கென்றே ஏராளமான பத்திரிகைகள்!



பரபரப்பான நாகரிகத்தின் இருபத்தொன்றாவது அம்சமாக அதுவும் மாறிவிட்டது.

காமத்திலும் பணத்திலும் திருப்தியடைவதே வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என்ற கருத்து, பழைய பண்பாடுகளையும் மீறி வேரோடி விட்டது.

நதிகூடத் தன் போக்கை அபூர்வமாகவே மாற்றிக் கொள்கிறது. மங்கையரோ அவசரமாக மாற்றிக் கொள்கிறார்கள்

பணக்காரக் குடும்பங்களில் மனைவி கெடுவதற்கு, கணவனே முதல் காரணமாக இருக்கிறான்.

கதவுக்குப் பின்னால் மறைந்தபடி காற்றுப் போன்ற ஓசையில், 'என்ன வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருந்த குலமகளை, மது ஊற்றிப் பரிமாறும்படிச் செய்து,

அவள் மனது கெடுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிப்பவர்கள் கணவன்மார்களே!

இப்படிக் காரணமாகிவிட்ட அவர்களே, திடீரென்று ஒரு கட்டத்தில் தங்கள் ஆண்மையை நினைவுபடுத்திக் கொண்டு சீசராகிக் கொலைக் கருவியை எடுக்கிறார்கள்.

அப்படித்தான் குமாரசாமியும் திடீரென்று ஆண் பிள்ளையாகி இருக்கிறான்!

செய்தி வந்ததும் கற்பகம் பதறினாள். சந்திரசூரியனிடம் இந்தச் செய்தியைச் சொல்லவே பயந்தாள்.

'இந்த வீட்டுக்குத் தான் வரும் போதெல்லாம், ஏதாவது ஒரு கொலை நடந்து கொண்டே இருக்கிறதே?' என்று அவர் பயந்து விட்டால்?

அந்தச் செய்தியை அவள் மறைத்து விட்டாள்.

"பம்பாய்க்கு மதன்லால் வரச் சொல்கிறார், நீங்களும் வர வேண்டுமாம்!" என்று ஒரு பொய்யைச் சொன்னாள்.

"இப்போது தேர்தல் நேரம். எப்படிப் போவது?" என்றார் சந்திரசூரியன்.

நள்ளிரவில் சந்திரசூரியன் வீட்டை விட்டு வெளியேறும் போது, கற்பகம் ஒரு இலக்கியக் காதலியாகவே நடந்து கொண்டாள்.

"என் வாழ்நாளில் இது மறக்க முடியாத நாள்!" என்றாள். "ஆனாலும் நீங்கள் அடிக்கடி வந்தால்தான் எனக்குச் சந்தோஷம்!" என்றாள்.

தன் மீதுள்ள வழக்கைப் பற்றி அவள் பேசவில்லை.

உடல் தொடர்பு ஏற்பட்ட உடனேயே அதைப்பற்றிப் பேசினால் இதற்காகப் பணம் கேட்பது போல் ஆகாதா?

இனி அவள் ஒரு வழக்கைப் பற்றிப் பேச முடியாது இரண்டு வழக்கைப் பற்றிப் பேச வேண்டும்.

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

ஆனால் இரண்டாவது வழக்கு பம்பாயில் அல்லவா நடக்கும்?

அதற்கும் பம்பாயில் ஒருவரைப் பிடிக்க வேண்டியிருந்தால் என்ன செய்வது?

ஒரு பெண் யாரிடம் சிபாரிசுக்குப் போனாலும் உடம்பைத் தானே லஞ்சமாகக் கொடுக்க வேண்டி இருக்கிறது?

குமாரசாமி ஆண்மகன், அவன் எப்படியும் வக்கீல் வைத்துத் தப்பித்து விடுவான். ஆறுமாதம் ஜெயிலுக்குப் போக வேண்டியிருந்தால்கூட கவலை இல்லை, தன் நிலைமை அல்லவே அவனுக்கு?

எனினும் தங்கசாமிக்கு விஷயத்தைச் சொல்லலாம் என்று டெலி:போன் செய்தாள்.

கற்பகத்துக்கு குமாரசாமி எப்படி மைத்துனனோ அப்படியே தங்கசாமிக்கும் லலிதா மைத்துனிதானே?

டெலி:போனை எடுத்தது நளாயினி.

"என்னக்கா...?" என்று கண்ணீரோடு கேட்டாள் நளாயினி.

❀❀

(அந்தரங்கம் வரும்)

# மயானம்!

**எம்.சண்முகராஜா, தலவாக்கல**

"குருவாயி.. ஏய்.. குருவாயி.. ப்ச். இந்தா குருவாயி.. எந்திரி, எத்தன நாளா இப்படியே படுத்தே கெடப்ப? எந்திரிச்சி வேல வெட்டிய பாரு..." புகைந்து கொண்டிருந்த, அடுப்பை ஊதியபோது, கிளம்பிய சாம்பல் ரொட்டித் தகரத்தில் கிடந்த ரொட்டியை அலங்கரிக்க, அதனைத் தட்டி சுத்தப்படுத்திய வண்ணம், வீரப்பன் நாக்கு நாட்களாய் காய்ச்சல், வாந்தியால் படுத்த படுக்கையாய்க் கிடந்த தன் மனைவி, குருவாயியை அவசரப் படுத்தினான்.

விடிந்தும், விடியாத அந்தச் காலைப் பொழுதில் லயங்களில், வீடுகள் என கருதப்படும், சந்துகளின் ஒன்றிற்குள் கணவன், வீரப்பனின் அவசரக் குரல் கேட்டு குருவாயியின் முனகல் சத்தம் அந்த லயத்துக்கே, ஒரு சுருதியாகத்தான் இருந்தது.

"இன்னிக்கு மட்டும் இருந்துட்டு நாளையிலர்ந்து போறனே. உடம்புக்கு கொஞ்சம் தேவலத்தான்... லேசா... தல சுத்தற மாதிரி இருக்கு, அதான். நீங்க அந்த பயலுக ரெண்டு பேத்துக்கும் ரெண்டு ரொட்டிய சுட்டு குடுத்துட்டு வேலக்குப் போங்க.. நானு நாளையிலர்ந்து போறேன்..!" படுக்கையிலிருந்தே ஒருவாறு முனகி முடித்தாள் குருவாயி.

"என்னா புள்ள நீனு... போன மாசமும் 'திருவிழா, திருவிழான்னு வேல இல்லை. அதுக்கு மொத மாசமும் 'ஸ்ரைக்' அது, இதுன்னு ஏழு எட்டு நாள் வேல இல்ல. மூணுநாலு மாசமா பத்தரவு கட பக்கமே போவல. அவன் போஸ் கார்டு போட்டு வேற மானத்த வாங்கியிருக்கான். இந்த மாசமாவது வேல செஞ்சி கொஞ்சம் நிம்மதியா இருப்போமுன்னு பாத்தாக்க நீ வேற படுத்து கெடக்குற!"

"எனிய என்னா செய்ய சொல்ற..? நா.. என்ன வேணும்னா கெடக்குறேன்.. தெனோ அரகொற சாப்பாடு, இருபது முப்பது கெலோ கொழுந்து கூடைய தலைல சொமந்துகிட்டு இல்ல எளவு எடுக்க வேண்டியதா கெடக்கு. நீயி.. மட்டும் என்னா.. அம்பது நூறுக்கு ஆசைபட்டு கொலனி காரிங்களுக்கு தோட்டத்து மரத்த கள்ளத்தனமா வெட்டி குடுத்து மாட்டிக்கிட்டு,போன மாசம் பூரா வேல நிப்பாட்டுப் பட்டு வீட்ல கெடந்த... நல்ல வேள.. நானு பிச்சமுத்து வூட்டு கச்சிலர்ந்து மாறி, செவுனுவூட்டு கச்சிக்கு ஒப்பம் வச்சதுனால அந்தாளு ஒரு மாதிரி தொரகிட்ட கதைச்சி, வேல வாங்கி குடுத்தது. இல்லாட்டி நக்கிபோயிருக்கும் பொளப்பு."

குருவாயி போட்ட போட்டில் வீரப்பன் அடுப்பு ஊதுவதை கூட நிறுத்திக் கொண்டு, "சரி... சரி... வுடு, ஒவுட்டு மூக்குத்திய சரி வச்சி டவுனுக்கு போயி.. பெறெவட்டு ஆஸ்பத்திரிலயாவது மருந்து, மாயத்த எடுத்து தொல." அவசர அவசரமாய் சொல்லி விட்டு ஆளைவிட்டால் போதுமென வீரப்பன் வேலைக்கு கிளம்பினான்.

"அதெல்லாம் ஒரு மண்ணும் தேவல...



நாங்கொஞ்சம் சாணி மத்தும், ரெண்டு டிஸ்பிரிங்கும், போட்டாக்கா சரியா போயிடும். நீ போயி வேலய பாரு." கணவனை துரத்தாத குறையாக வேலைக்கு அனுப்பிய குருவாயி, அத்தனை நாட்களும் அகற்றாமல் கிடந்த படுக்கையை சுருட்டி ஒரு மூலையில் போட்டுவிட்டு, நடுவீட்டு நிலபடியில் சிறிது தண்ணீர் ஊற்றி நன்கு விரலால் உராய்ந்து, சாணத்துடன் கலந்த உத்தையை எடுத்து முழு நெற்றியிலும் திருநீற்று பட்டை போல் அப்பிக்கொண்டு, வெளிமுற்றத்தில் வந்து வெய்யில் படும் இடத்தில் அமர்ந்து கொண்டாள்.

அப்பொழுது அவளது இரண்டு பிள்ளைகளும் தோட்டத்து பள்ளிக் கூடத்துக்கு செல்வதற்கு ஆயத்தமாய் வந்து பென்சிலுக்கும், கொப்பிக்கும் தொல்லை கொடுத்து கொண்டிருந்தார்கள்.

எரிச்சலடைந்த குருவாயி, "போய்த் தொலைங்க அங்கிட்டு, நாங்கெடக்குற கெடையில கொப்பியாவது, பென்சிலாவது, போங்க.. போய்ட்டு.. அந்தா.. அந்த தேயல மலைய கவாத்து வெட்றாங்களாம், போய்ட்டு.. மெளாரு கொஞ்சம் கொண்டாங்க. தண்ணி சுடவச்சி குளிச்சிட்டு நாளையோட வேலக்கு கெளம்புற வழிய பாக்க." என்று தனது பிள்ளைகளை துரத்திய வண்ணம் அன்றைய வேலைகளை கவனிக்கத் துவங்கினாள்.

மணிமாலை ஐந்தாகிவிட்டிருந்தது. வீரப்பன் வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பியபோது, விருந்தாளிகள் இருவருடன் வந்து சேர்ந்தான். அவர்களை வீட்டுக்குள் இருக்கச் செய்துவிட்டு குருவாயியை தனியாக அழைத்து "குருவாயி.. ரொம்ப நாளா வராதவங்க வந்துருக்காங்க, கறி, புளி ஒழுங்கா வச்சி குடுக்கணும். ஒம்புட்டு மூக்குத்திய குடு, நாம்போய்ட்டு ஒரு செமன்டின்ன, கிமன்டின்ன வாங்கியாரேன்".

குருவாயி எதுவும் பேச வக்கணையின்றி கழற்றிக் கொடுக்கலானாள். ஆனாலும் அவளுக்கு நம்பிக்கை இருந்தது. இந்த மாதம் ஒழுங்கா வேலை செய்தால் எல்லா வற்றையும் திருப்பி விடலாம் என்று!

மூக்குத்தியுடன் போன குருவாயியின் கணவன், செமன்டின், அரைபோத்தல் சாராயம் உட்பட இதர சில சாமான்களுடன் வந்து சேர்ந்தான். அன்றைய பொழுதில் அவர்களது வீட்டில் ஒரு வைபவமே நடந்து முடிந்திருந்தது.

அடுத்தநாள் காலை வேலைக்குப் போக ஆயத்தமானபோது, அடுத்த லயத்தில் ஒரே ஒப்பாரி சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஏய்.. புள்ள! கதிரவேலு தான் செத்து போய்ட்டது போல. நேத்து நான் கடைக்கு போய்ட்டு வரக்குள்ளத்தான் அந்தாள தோட்டத்து லொறில ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனாங்க. அதுக்குள்ள முடிஞ்சி போல. இரு நானு போய்ட்டு வரேன். வெல்லனவே போனாக்கா சேதம் சொல்ல அனுப்பு வாங்க." என்றவன் "அதுல பத்து, ஐம்பதை தட்டிக் கொள்ளலாம்!" என்ற சந்தோஷத்துடன் ஓடினான்.

"ச்சீ... எளவு சனியன், ஒழுங்கா நாலு நாள் பேரு போடவுடமாட்டேங்கிறாங்களே. மாசாமாசம் மரண நிதியும் பிடிச்சிக்குறது முள்ளாம, ஒரு நாள்வேலயவும் நிப்பாட்டி தொலக்கணும்." அலுத்துக் கொண்டவள், வேலைக்கு போவதற்காக இடுப்பில் சுற்றியிருந்த படங்கை அவிழ்த்து வீசிவிட்டு மரண வீட்டை நோக்கி சென்றாள்.

கதிரவேலுவின் அடக்கம் முடிந்து இரண்டு மூன்று தினங்களாக-தோட்டம் வேலையில் மூழ்கியிருந்தது. அடுத்த நாள் வேலைக்கு சென்று செவ்வனே கொழுந்து பறித்து கொண்டிருந்தவர்களுக்கு, மலையகத்தின் ஒரு முக்கிய தலைவர் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்து. அனைவரும் ஒவென ஒப்பாரி வைத்து கொண்டு கேள்வி கேற்பாரன்றி மலையை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நான்கைந்து நாட்களுக்கு சொந்த வீட்டுச் சாவீடு போல் வேலை வெட்டியின்றி துக்கம் அனுஷ்டித்தார்கள்.

அதன் பிறகு சம்பளம் கொடுக்கப்பட்ட தினத்தில் தான் அந்த தோட்டத்திலுள்ள ஒவ்வொருவரின் வீட்டிலும் மரணம் நிகழ்ந்து விட்டது போல், முகங்கள் வாடிப் போய் அலை மோதிக் கொண்டிருந்தார்கள்.

'குருவாயி'யின் வீட்டில் 'குருவாயி' மீண்டும் அதே படுக்கையில் தான். ஆனால் இப்போது கொஞ்சம் கவலைக்கிடமாக, முனகக்கூட முடியாத நிலையில். ■

# வாழ்க்கையின் பாடம்

**களுவாஞ்சிக்குடி- யோகன்**

மனித வாழ்வில் இன்பதுன்பங்கள் மாறிமாறி வருவது போல் ஏற்றதாழ்வுகளும் மாறிமாறித்தான் வருகின்றன என்பதை அன்று உணரும் நிலையில் கீதா இருக்கவில்லை.

இன்று அந்த சந்தர்ப்பத்தை உணர நேர்ந்த போது உண்மையிலேயே அவள் துடித்துப்போனாள்.

'கழித்த கல் தலைக்கல்லாகலாம்' என்றொரு பழமொழி. இதை அறியாமல் தான் உயிருக்குயிரான தன் தங்கை காதலித்த அந்த இளைஞனை அந்தஸ்து, படிப்பு, பதவி என்று பார்த்து தங்கையிடமிருந்து பிரித்தாள். ஆனால் அப்பொழுது அந்த இளைஞன் அடைந்திருந்த நிலையைப் பார்த்தபோது அவளுள் ஒரு மலைப்புத் தோன்றியது உண்மை. அந்த மலைப்பு சில நிமிடங்களில் சிந்தனையைத் தூண்டி, சிந்தனை வேதனையாகி வேதனையால் கண்ணீர் துளிர்த்து தன்னையே நொந்து கொண்டாள் கீதா.

நல்லூர் முத்தரப்புச்சந்தியிலுள்ள இரண்டு அடுக்குகளைக்கொண்ட அந்த மாடிவீட்டை யாரும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள். 'சந்திரோதயம்' என்றதும் முதலில் கீதா, வாணி என்ற பெண்கள்தான் ஞாபகத்தில் தங்குவார்கள். எல்லையில்லாத அளவு இருவரும் அழகினை தேக்கி வைத்திருந்தது தான் அதற்குக் காரணம். ஒருவருட வித்தியாசத்தில் பிறந்தாலும் பலரும் அவர்களை இரட்டைப் பெண்களென்றே இன்னமும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு இரண்டு பேரும் உருவத்தில் அச்சாகவே காட்சியளித்தார்கள். உருவத்திலென்ன ஒற்றுமையில் கூட இருவரையும் யாரும் குறைசொல்லிவிடமுடியாது. கடைத்தெருவிற்குப் போனால் கூட சேர்ந்தேதான் போவார்கள். பக்கத்து வீட்டிற்குப் போவதென்றாலும் ஒருவரையொருவர் பிரியமாட்டார்கள். அந்தளவு செயல், திறன், குணம் இவைகளில் ஒன்றாகவே இருவரும் திகழ்ந்தார்கள்.

"நீ உன் இரு பெண்களுக்கும் இரண்டு மாப்பிளைதேடவேண்டாம்; ஒரு மாப்பிள்ளை பார்த்தாலே போதும்" இப்படி பக்கத்து வீட்டுப் பஞ்சவர்ணம் பாட்டி சிவலோகன் மாஸ்டரிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வாள். மாஸ்டர் இருவருக்கும் தாராளமாச் சுதந்திரம் கொடுத்துத்தான் வளர்த்தார். ஆனாலும் பிழைகளைக்கண்டால் தக்க தருணத்தில் சுட்டிக்காட்டி அளவாகப் புத்தி சொல்லி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவார். அதனாலோ என்னவோ கீதாவிற்கு இருபத்திரெண்டும், வாணிக்கு இருபத்தியொரு வயதும் வரும்வரை எந்தவொரு பிரச்சினையுமில்லாமல் வளர்ந்தார்கள்.

அப்பொழுதுதான் பெரியவளான கீதாவிற்கு மாப்பிள்ளை தேடும் படலம் தொடங்கியது. "மூத்தபெண்ணுக்குப் பொருந்தக் கூடிய நல்ல மாப்பிள்ளையிருந்தால் சொல்லுங்கள்!" என்று மாஸ்டர் தனது சினேகிதர் ஒருவரிடம் ஒரேயொரு வசனம் தான் சொன்னார்.

மறுவாரமே யாழ். இந்துவில் படித்த ஒரு பொறியியலாளர் மாப்பிள்ளை குடும்பம் வீடு தேடிவந்தது. பேச்சுவார்த்தைகள் சம்மதம் கண்டு திருமணத்திற்கு நாளும் குறிக்கப்பட்டது.

இந்த நேரம் சின்னவளான வாணி ஆங்கிலவகுப்பிற்கு போய்க்கொண்டிருந்தாள். வகுப்பிற்குப் போய்வரும்போது அந்த 'மெக்கானிக்ஷொப்' பைக் கடந்துதான் போய் வருவாள். அப்படி அதைக்கடந்து சென்று வரும் போதுதான் அந்த ஷொப்பில் வேலை செய்த இளைஞனைக் கண்டாள் வாணி. காண்போரைக் கொக்கி போட்டு இழுக்கக் கூடிய வசீகரமும், கவர்ச்சியும் அவனிடம் மேலோங்கி இருந்தது.

வாணியைப் பாதையில் காணும் பொழுது மோட்டார் சைக்கிளை எடுத்து, ஒரு உறுமலுடன் ஸ்டார்ட் செய்து, அவளைக் கடந்து சென்று, பின்னர் திரும்பி ஒரு புன்முறுவலுடன் அவளைப் பார்த்துவண்டியை நகர்த்துவான். அவனது வசீகரம், நடவடிக்கை, சுறு சுறுப்பு எல்லாம் வாணியை



இலகுவாகக் கவர்ந்துவிட்டது. கவர்ந்துவிட்டது என்பதை விட அவனது செய்கைகளை அவளின் வயது உடன் ஏற்றுக்கொண்டு விட்டது. இருவரும் படிப்படியாகச் சந்தித்து சினேகிதமாகிப் பழகினார்கள். தமக்கையுடன் எதையுமே மனம் விட்டுக் கதைக்கும் வாணி தனது காதலைப்பற்றியும் தெரிவித்தாள்.

"அப்பாவுக்கு நீதான் அக்கா இதை பக்குவமாகச் சொல்ல வேணும்!" என்றும் வேண்டிக்கொண்டாள்.

கீதா பதில் எதுவும் உடன் சொல்லவில்லை. மிகவும் தீவிரமாக யோசித்தாள்.

ஏ/எல் வரைகூட எட்டாதவன். மிகவும் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தவன். சாதியென்று பார்க்கப்போனால் கூட தங்களிடமிருந்து மாறுபட்டவன்; இவையெல்லாவற்றையும் விட தனக்கு ஒரு 'என்ஜினியா' மாப்பிள்ளையாக வரும்போது தனது தங்கைக்குத் தராதரமில்லாத ஒருவன் கணவனாவதா? என்று நிதானமாகச் சிந்தித்தாள்.

ஒரு மாலை, வாணி வகுப்பு முடிந்து வந்தபோதுதான் அந்த விபரீதத்தை அறிய நேர்ந்தது. திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினால் ஒழுங்காகப் பேசும் சக்தியை இழந்து ஆஸ்பத்திரிக் கட்டிலிலே படுத்திருந்தார் தந்தையார். "உன்னால் தான் அப்பாவுக்கு இந்தநிலை, உன் காதலைப்பற்றிச் சொல்லப் போய்த்தான் அவருக்கு அதிர்ச்சியில் "மாரடைப்பே வந்தது!" என்று தங்கைக்கு வாய் கூசாமல் பொய் சொன்னாள் கீதா.

வாணி கூனிக், குறுகி, நடுங்கிப்போனாள் தன்னால்தான் அப்பாவுக்கு இந்த நிலையா? என்று தன்னையே நொந்து வருந்தி அந்த இளைஞனைச்சந்திக்காது, படிப்படியாக மறந்து, ஒதுங்கி, தன் காதலைத் துறந்தாள்.

மாதங்கள் சில கடந்தன. ஏற்கனவே தீர்மானித்தபடி கீதாவிற்கும் அந்த 'என்ஜினியா' மாப்பிள்ளைக்கும் திருமணம் நிகழ்ந்தது. அவர்கள் இலண்டன் மாநகரில் குடியேறினார்கள்.

இலண்டன் வந்தாலும் கீதா தன் தங்கையை மறக்கவேயில்லை. தங்கை வாணிக்குப் பல வழிகளிலும் மாப்பிள்ளை தேடினாள். ஏதோ ஒரு காரணத்தால் ஒவ்வொரு வரனும் தட்டுப்பட்டுக்கொண்டே போனது. எந்தவொருவரனும் சரியாக அமைந்து வரவேயில்லை.

இந்நிலையில் தான் அவுஸ்திரேலியாவில் போய் நிரந்தரமாகக் குடியேறலாம் என்று தீர்மானித்து கீதா குடும்பத்தினர் மெல்போண் நகருக்கு வந்திறங்கினார்கள்.

வந்து சில வாரங்களுக்குள் அந்த வியாபார ஸ்தலத்திற்கு அவள் செல்ல வேண்டியதாயிற்று.

வானுயர்ந்த கட்டிடத்துடன் அவுஸ்திரேலியாவில் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் கூட பிரசித்தி பெற்ற வியாபார நிலையமாக அந்தஸ்தாபனம் தென்பட்டது.

அந்த வியாபார நிலையத்தை நிர்வகிக்கும் அதன் சொந்தக்கார நபரை பார்த்து அறிய நேர்ந்தபோதுதான் அவள் திடுக்குற்றுப் போனாள்.

அந்தளவு சொத்துக்களுக்கும் உரியவர், இங்கு பலரும் மதிக்கும் பிரமுகர் வேறுயாருமில்ல!

அதிகம் படியாதவன், பணவசதியில்லாதவன், தங்கள் அந்தஸ்துக்கு சமனாக வரமுடியாதவன் என்று நினைத்து வாய் கூசாமல் பொய் சொல்லி தன் தங்கையிடமிருந்து பிரித்த அந்த இளைஞன் என்பதை புரிந்து கொண்ட போது, வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் எப்பொழுதும் மாறிமாறித்தான் வருகின்றன என்பதை ஆணி அடித்தது போல் அவளுக்கு உணர்த்தி நின்றன.

இருந்தும் தன் தங்கை இன்று கல்யாணமாகாத நிலையில், நாட்டில் பாதுகாப்பில்லாத சூழலில் வாழ்க்கையுடன் போராடியக் கொண்டிருப்பதை நினைத்துக்கொள்ள, கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் விக்கித்துப் போய் நின்றாள் கீதா. ●

# புல்லுருவிகள்

**-உவைஸ்கனி-**

கிழக்குப் பக்கமாய் இருந்த குறுக்குப் பாதைக்கு புதிதாய் கற்கள் போட்டு தார் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். ரவி அவசரமாக அந்த மர நிழலைக் கடந்து பிரதான வீதிக்கு வந்து சேர்ந்தான்.

வீதி எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. கடைகள் பூட்டப்படுவதற்கு அவசரப்பட்டதால் சில சாமான்கள் கவனிப்பாரற்று அப்படியே கிடந்தன.

'ஏதோ நடந்திருக்கிறது அல்லது நடக்கப் போகிறது', என்பது மட்டும் ரவிக்கு நன்கு புரிந்தது.

ரவிக்கு வேதனையும், பயமும் ஒன்று சேர்ந்து சோர்வை ஏற்படுத்த, தெற்கு பக்கமாய் சடுதியாய் திரும்பிப் பார்த்தான். மக்களில் சிலர் காதுகளைப் பொத்திக் கொண்டு கீழே குந்திக் கொண்டிருப்பது தெரிந்தது.



ஏதோ விபரீதம் நடக்கப்போவதாய் உணர்ந்து கொண்ட ரவி வீடு செல்வதற்கு யோசிக்கும்போது, அப்பாவிகள் போல் சிலர் அருகில் வந்து உடலை ஆராய்ந்த பின் அடையாள அட்டையைக் கேட்டனர்.

ரவி ஒரு மலைநாட்டுத் தமிழன். நன்கு சிங்களத்திலும் சாணக்கியம் கொண்டவன். வந்தவர்களில் ஒருவன் "டேய்!" என்றான் திடீர் என்று.

"மச்சான் நான் கொழும்பிலிருந்து வாரன். என்ன திடீர் என்று பஜார் இப்படி இழுத்து மூடி சனங்களையும் காணவில்லை ஏதும் பிரச்சனையா?" என்று மிகவும் பயந்தவனாயும், நட்புத்தனமாகவும் கேட்டான்.

வந்தவனும், "இல்லை மச்சான்; ஏதோ பார்சலொன்று அந்தக் கடைக்குப் பக்கத்தில் கேட்பாரற்றுக் கிடக்குதாம், அதுதான் இந்த ரவுணும் வெறிச்சேடிப் போயுள்ளது," என்றான்.

வந்தவர்களில் ஒருவன் "மச்சான் அபிற்றுப்பியல் விஸ்ஸக் ஒயாகாவ தியனவனங் தெண்ட புளுவந்த?" (உங்களிடம் இருபது ரூபாய் இருந்தால் தரமுடியுமா) என்று கேட்க ரவியும் தனது பேர்சைத் திறந்து இரு பத்து ரூபாய்களை எடுத்து நீட்டும் போது அவர்களில் ஒருவன் சடுதியாய் ரவியின் பேர்சை பறித்துக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

"என்ர காசு, காசு," என ரவி கத்திக் கொண்டே பின்னால் ஓடும் போது, தமிழில் பேசியவன் ஒரு கூரான ஆணியை எடுத்து ரவியின் முதுகில் சடாரென கீறினான். முதுகில் இரத்தம் வடிந்து கொண்டிருக்க தமிழில் பேசியவனும் "குண்டு, போம்பே!" எனச் சொல்லிக் கொண்டே ஓடத் தொடங்கினான்.

உரிமையில்லாத பார்சல் இருந்த இடம் வரைக்கும் அழுது கொண்டே வந்து சேர்ந்தான் ரவி.

"ஒரு குடிகார மனிசன் மறந்து போய் வைத்தது விட்டுச் சென்ற பார்சலாம். அதுதான் அந்தக் கடைக்கு அருகே கிடந்ததாம். சனங்களும் நல்லா அடிச்சிப் போட்டார்கள். பாவம் மடையன்!" என்றான் சிங்களத்தில் ஒருவன்.

வீதிகள் இன்னும் வெறிச்சோடியே கிடந்தது. ஊருக்குப் போகாமல் ரவி மீண்டும் அவன் வேலை செய்யும் கடைக்குப் போகிறான். தார் ஊற்றிக் கொண்டிருந்த குறுக்குப் பாதையில் இவனது பாதமே முதலில் பதிகிறது.

வேலை செய்து கொண்டிருந்தவர்களும் எங்கோ ஓடியிருக்க வேண்டும். தார் பீப்பாவிற்கு வைத்த நெருப்பு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. ரவியின் மனசு போல. ●

# ஒரே சூழலில் இரு நண்பர்கள்!

ராகவன் அன்று வந்திருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். அவனது உள்ளத்தின் குதூகலக் குடியிருப்பான அந்த இலுப்பை மரத்தை நோக்கி நடந்தான்.

அதன் நிழல் தருகின்ற ஆறுதல்தான் அவனுக்குத் தாய் நாட்டில் கிடைக்கிற ஒரேயொரு ஆறுதல் என்று தோன்றும்.

மரத்தின் நிழல் மனதுக்கு இதம் தந்தது.

உயிர்களை வாழவைக்கும் மரத்துக்கா இந்த நிழல்....!

நிழல் மரத்துக்கல்ல;
மரத்தின் மீது விழும் வெயிலுக்கு.

தன்னைக் கிழித்து உள்ளே இறங்குகிறவர்களுக்குச் சுகமளிக்கிற நதிபோல.... மரத்தின் வேதனையில் கிடைப்பதுதான் நிழல் சுகம்.

பொதுநலமும் தியாகமும் அதைச் செய்கிறவர்களுக்கு வேதனையளிப்பவையா? இல்லை. வெயில்தானே மரத்தின் உணவும் உயிர்ப்பும்.

தியாகம், அதைச் செய்பவர்களுக்குத் தருகிற திருப்திக்கும் சந்தோஷத்திற்காகவுமேதான். மற்றவர்களுக்கு உதவியாயிருப்பதை விட மனதுக்குச் சந்தோஷம் வேறென்ன?

ராகவன் மெல்ல கடிதத்தைப் பிரித்தான். அல்பேனிய நண்பர் தாபிட் அனுப்பியிருந்த பதில் கடிதம். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. மனதுக்குள் படித்துத் தமிழில் புரிந்துகொண்டான்.

நண்பரே!
உங்கள் கடிதம் பார்த்து வியந்தேன்.

என் வாழ்க்கையையே நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உலக மனிதர்களேல்லாம் என் உறவினர்கள் என்ற உணர்வு என்னுள்ளே அதிகமாக உதவியது உங்கள் கடிதமும். எங்குமுள்ள மனிதர்களின் செயல்களில் எல்லாம்தான் எத்தனை ஒற்றுமை!

வெறும் கலாசார, பாரம்பரிய அடையாளங்களால் தங்களை குழுக்குழுவாக வேறுபடுத்தி அறியும் மனிதர்கள், தங்கள் இனத்தைப் பாதுகாத்துக் கொள்வது, மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வது என்னுள் நோக்கில் எத்தகைய வெறிச் செயலுக்கெல்லாம் தயாராகிவிடுகிறார்கள்! சேர்பியர்கள் என் உறவினர்களை கொத்துக் கொத்தாய்க் கொன்றழித்தார்கள். எங்களால் முடிந்தளவு பதில் ஆவேசத்தோடு என் இனத்தவர்களும் ஆங்காங்கே சிலரை வெட்டினார்கள். விளைவு..... மனித குலத்தின் மீதே அடியோடு நம்பிக்கை இழக்குமளவுக்கு குரூரமானதாக இருந்தது.

அல்பேனியர்களான எங்களவரின் இயக்கம் ஒடி ஒளிந்தது. நேட்டோ படையினரிடம் சரண் புகுந்தனர். அவர்களோ சோபியர்களுக்குப் பாடம் புகட்டும் சாக்கில், மேலும் அழிவுகளைக் குவித்தனர்.

சிலரது கைகளில் இருக்கும்



ஆயுதங்கள், ஆயுதமற்ற மிகப் பெரும்பான்மையோரின் கருத்துக்களை ஒன்று மற்றதாக்கிவிடும் கொடுமையை என்ன சொல்ல? ஆயுதங்களிடையேயான போட்டியில் மனிதம் சிக்குண்டு நாராய்க் கிழிவதைப் பார்த்தபடியிருக்க நேருகிறது.

எங்களுக்காக ஆயுதமேந்தியதாகச் செல்லும் கே.எல்.ஏ.யினர் சேர்பியர்களைக் கொன்று குவிக்கும் முறைகளைப் பார்க்கும் போது குலை நடுங்குகிறது. இவர்களால் எப்படி எமது விடுதலை சாத்தியம்?

மனிதவதையில் மனிதர்களுக்கு எப்படி இத்தனை காதல் ஏற்பட்டது? மனித குல விடுதலைக்காக என்ற பேரில் இன்னும் எத்தனை மனித உயிர்களை அழிக்க வேண்டியிருக்கும்?

இன்னொரு உயிரை அழித்தொழிக்காமல் எனதுயிரின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளும் வழியை வரலாறு நமக்குக் கண்டு சொல்லவே சொல்லாதா?

நண்பரே!
இன்னொரு பல நூறு பேரின் அழிவில்தான்-வதையில் தான் எனது வாழ்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது...... அப்படித்தான் எனக்கு வாழ்க்கை சாத்தியமென்றால்..... இந்தக் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

இந்த வாழ்க்கைக்காக கட்டிச் சொல்லப்படும் நீதி மற்றும் அறம் குறித்த விளக்கங்களுக்கெல்லாம் என்ன நியாயம் இருக்கிறது? இந்த அமைப்பின் கோளாறு தெரிகிறது நண்பரே, இதை வெல்வதற்குரிய சரியான வழியைத்தான் இன்னும் அமைத்துக் கொள்ள முடியவில்லை. இங்கும் எங்கும் சோகம் ஒன்றுபோலத் தொடர்கிறது. கடைசியில் என்ன? காத்திருப்பது தவிர, வேறொரு மார்க்கமும் பிடிபடுவதாயில்லை. என், உடனடிக் காத்திருப்பு உங்கள் கடிதத்திற்காக என்று முடித்திருந்தார் நண்பர் தாபிட்.

அல்பேனிய நண்பர், கடித வார்த்தைகளினூடாகவே ராகவன் மனதுக்கு மிக நெருக்கமாகியிருந்தார். உடன் பதில் எழுதிப் போடுவதென்று நினைத்தான்.

# இலக்கிய நயம்

வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்து கொண்டிருந்தாலும், உலகத்தின் வேறு வேறு மூலைகளிலிருந்தாலும் ஒன்றுபோல் சிந்திக்கும் நண்பர்களைத் தெரிந்துகொள்வதில் ஏற்படுகிற ஆச்சரியத்தைத் தனக்கு முன்பும் மூதாதைப் புலவன் ஒருவன் உணர்ந்து சொல்லியிருப்பதை நினைவு கூர்ந்தான் ராகவன்.

ஒருவரோடொருவர் சந்தித்துப் பழகியிராத போதும் வாழ்க்கை முறையால் வசதிகளால் வேறு பட்ட நிலைகளிலிருந்த போதும், மனங்களால் இணைகிற நட்பு மிகுந்த அழகும் நயமும் பொருந்தியதாக இருப்பதை தக்க உவமானத்தோடு பாடியிருக்கிறார் அந்தப் புறநானூற்றுப் புலவர்.

ஒருவரையொருவர் கண்டுகொள்ளாமல் பிசிராந்தை யாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் ஏற்பட்ட ஆத்மார்த்த நட்பைப் பாடுகிறார் கண்ணகனார் என்பவர். பொன்னும், பவளமும், முத்தும், மணியும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத முற்றிலும் சம்பந்தமற்ற வெவ்வேறு இடங்களில்

## தருவது முழடில்யன்

தோன்றுகின்றன. ஆனால், நகையாக இணையும்போது பெரும் அழகையும் சிறப்பையும் பெறுகின்றன. அதுபோலத்தான் சான்றோர் கேண்மையும் என்கிறார் புலவர்.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும் தொடை
புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும்
சான்றோர்
சான்றோர் பாலராப
சாலார் சாலார் பால ராகுபவரே.

(புறம் 218)

## ஸ்போர்ட்ஸ்

# மனோஜ் பிரபாகர் மீது வழக்குத் தொடரவுள்ளார் அஸார்

முன்னாள் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் மனோஜ் பிரபாகர் மீது அவதூறு வழக்குத் தொடர வுள்ளதாகத் தெரிவித்துள் ளார் முன்னாள் இந்திய அணித் தலைவர் முகமட் அஸாருதீன்.



"இந்திய கிரிக்கெட் வீரர்கள் லஞ்சம் மற்றும் பெட்டிங் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ள னர். இதில் அஸாருதீன், அஜித் வடேகர் ஆகியோருக்கும் பங்கு உண்டு" என்று மனோஜ் பிர பாகர் முன்னதாகக் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்மையில் முகமட் அஸாருதீன் கூறியதாவது.

"தனிப்பட்ட விரோதம், காழ்ப்புணர்ச்சி காரணமாகவே பிரபாகர் இவ் வாறு கூறியுள்ளார்.

என் மீது கூறப்படும் புகார் கள் அப்பட்டமான பொய். இதில் துளியும் உண்மையில்லை, இது போன்று அபாண்டமாக பழிசுமத் தும் பிரபாகர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கத்தீர்மானித் திருக்கிறேன். அவதூறு வழக்குத் தொடர்ந்து நஷ்ட ஈடு கேட்க இருக்கிறேன்.

இந்த விஷயம் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யுடன் பேசவுள்ளேன்" என்றும் குறிப்பிட் டுள்ளார்.

# பந்து பட்டு மரணம்

கிரிக்கெட் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது கிரிக்கெட் பந்து பட்டு மரணமான சம்பவம் இந்தியாவின் உத்திரபிரதேச மாநிலத்தில் இடம் பெற்றுள்ளது.

நிர்மல் ராஜ்புட் என்ற இந்த 17 வயது இளைஞனின் தலையில் எதிர்பாராமல் பந்து ஒன்று பறந்து வந்து பட்டது. இதனால் இவர் மயக்கமுற்று வீழ்ந்தார்.

மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்து விட்டது

# தடை போடுகிறது அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் வருகின்ற செப்டெம்பர் மாதம் ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது.

இதனால் அவுஸ்திரேலிய அரசு போதை மருந்துகளுக்குக் கடுமையான தடைகள் கொண்டுவரவுள்ளது. போதை மருந்துகளைப் பயன்படுத்தினாலோ அல்லது விற்றாலோ ஒரு இலட்சம் டொலர் அபராத மும் 5 வருட சிறையும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப் பேரவை உறுப்பினரான வீரர்

இந்திய அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய 19 வயதிற்குட்பட்ட இந்திய அணியின் பயிற்சியாளருமான றொஜர் பின்னி சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்றுள்ளார்.

ஆங்கிலேயர் தந்தைக்கும் இந்திய அன்னைக்கும் மகனாகப் பிறந்தவர்தான் றொஜர் பின்னி.

கர்நாடக மாநிலத்தின் காங்கிரஸ் கட்சி றொஜர் பின்னியை நியமன சட்டப்பேரவை உறுப்பினராக (எம்.எல்.ஏ) தேர்வு செய்தது.

அண்மையில் எம்.எல்.ஏ.பதவியேற்பை முறைப்படி எடுத்துக் கொண்டார். இந் நிகழ்ச்சியின் போது முன்னாள் வீரர்களான பிரிஜேஷ் பட்டேல் சையட் ஹிர்மானி ஆகியோர் உட்பட பல கிரிக்கெட் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# வெற்றிச் சாதனை

வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வரும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஒரு நாள் போட்டித் தொடரில் தென்னாபிரிக்காவிடம் 2-1 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இருப்பினும் உலக சம்பியனான அவுஸ்திரேலியா தொடர்ந்து 12 ஒரு நாள் போட்டிகளில் வெற்றிகொண்டு உலக சாதனை படைத்துள்ளது.

இதே போல் டெஸ்ட் போட்டியிலும் ஒரு சாதனை படைத்திருக்கிறது.

1920ம் ஆண்டு வோர்விக் ஆம்ஸ்ட்ரோங் தலைமையில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து 8 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றது.

இந்தச் சாதனையை ஸ்டீவ் வோவ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி எட்டிப் பிடித்து விட்டது. இந்தச் சாதனையை நியூஸிலாந்துக்கெதிரான போட்டியின் போதே எட்டிப் பிடித்தது.

# சிந்தியா பதில்கள்

**★ நிஜங்கள் சுடுவது எப்போது?**

எஸ். பாமரன்-அருப்பொல.

*நிழலை விட்டு வெளியே வரும்போது.*

**★ அன்றைய ராமன் சீதையை மணக்க வில்லை முறித்தான். இன்றைய ராமன் என்ன செய்வான்?**

எம்.எம்.இமாம் ஹசன், ஹெம்மாதகம.

*வில்லையும் முறிக்கத் தெரிந்திருந்தால் விலையை இன்னும் ஏற்றலாமே என்றுதான்.*

**★ நம் நாட்டில் மெல்லிசைப் பாடல்களுக்கும் தென்னிந்திய திரைப்படப் பாடல்களுக்கும் என்ன வித்தியாசம்?**

எம்.அகிலம், டிக்கோயா.

*சுமார் எழுபது எண்பது வாத்தியங்கள்.*

**★ சிந்தியா! 'கங்கை ஆற்றில் நின்று கொண்டு...' பாடல் எந்தப் படத்தில் இடம் பெற்றது?**

சி.ஜூலியட், மவுசாகெல.

*'ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தால் நிலவில் குளிர் இல்லை' என்று பாடினார்கள். பிறகு போனால் போகிற தென்று 'பூமிக்கு வந்த நிலவே வா' என்ற ழைத்தார்கள். சாதாரண ஒரு நிலவு அவள் அழகுக்கு நிகராகாது என்றுணர்ந்து 'நூறு நிலாவை ஒரு நிலாவாக்கி செய்த பாவை' என்று 'காவல்காரன்' படத்தில் வாலி எழுதினார். புலமைப் பித்தனுக்கோ பெண்ணை வர்ணிக்க ஒரு நிலா நூறுநிலா எல்லாம் போதவில்லை 'ஆயிரம் நிலவே வா' என்று அடிமைப்பெண்ணில் எழுதினார். பிறகு, அதையே தலைப்பாக்கி கார்த்திக் நடித்த ஒரு படம் வந்தது. நீங்கள் கேட்ட பாடல்அந்தப் படத்தில் பி.சுசிலா பாடியது.*

**★ ஒரு பதில் எப்போது நகைச்சுவையாகிறது?**

கு.மணி, இணுவில்.

*நாம் எதிர்பாராத ஒரு கோணத்தில் பதில் வருகிறபோது அதில் தமக்கு வினோதச் சுவை கிடைக்கிறது: கன நாளைக்குப் பிறகு ஒரு கிழத் தம்பதியினரைப் பார்த்து வரலாம் என்று ஒருவன் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றான்.*

*வீட்டு வாசற்படியில் கிழவி அவனை எதிர்கொண்டபோது, அவன் அவளிடம், "பாட்டி, தாத்தா எப்படி இருக்கிறார்?" என்று கேட்டான்.*

*"வா தம்பி!" என்று வரவேற்ற கிழவி, "நீ அதைக் கேள்விப்படவே இல்லையா?" என்று முணுமுணுத்தாள்.*


*"என்ன பாட்டி?" என்றான் இவன்.*

*"அவர் சிறிது காலத்துக்கு முந்தி இறந்து போனார்" என்றாள் கிழவி.*

*"அடடா!" என்று வருத்தப்பட்டவன், "ஆமாம், எப்படிப் பாட்டி? இது நடந்தது?" என்று கவலை மேலிட்ட குரலில் கேட்டான்.*

*பாட்டி அந்த நிகழ்ச்சியை விவரிக்கத் தொடங்கினாள்.*

*"ஒருநாள் மத்தியானம் சமைப்பதற்காக பின்புறத்தோட்டத்திற்குச் சென்று காய்கறிகள் பறித்து வரும்படி அவரை அனுப்பினேன். போனவரை கன நேரமாகக் காணவில்லை. என்னவென்று பார்த்துவர நான் போனேன்.*



'தெனாலி' படத்தில் கமல்

*அங்கே அவர் விழுந்து கிடந்தார். அருகில் போய் தொட்டுப்பார்த்த போது, அவர் இறந்துவிட்டது தெரிந்தது...."*

*"ச்ச்சுச்சூ..." என்று பரிதாபப்பட்ட அவன், "ஐயோ; கடவுளே! இப்படித் திடீரென்று ஒன்று நடந்தால் நாமென்ன செய்ய முடியும்? அதன் பிறகு என்ன செய்தாய் பாட்டி? எப்படிச் சமாளித்தாய்?" என்று படபடப்போடு வினவினான்.*

*இறங்கிய குரலில் பாட்டி சொன்னாள்: "நான் என்னத்தைச் செய்ய? திரும்பி வந்து பேணியில் போட்டு வைத்திருந்த கடலையைத் தான் அன்று கறி சமைக்க வேண்டியதாச்சு!"*

**★ சேலை தவிர்ந்த ஏனைய உடைகளை உடுத்த மாட்டேன் என்ற சொல்லி வந்த தேவயாணி கூட இப்போது பாடல் காட்சி களில் மிக மோசமான உடுப்புகளோடு வந்து ஆடுகிறாரே.... இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?**

சி.முகுந்தன், பார்வீதி, மட்டக்களப்பு,

*என்னத்தை நினைப்பது? நீங்கள் அவர் தமிழில் முதலில் நடித்த 'தொட்டாச் சிணுங்கி' படமும் அதற்கும் முதலில் இந்தியில் நடித்த படமும் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.*

**★ கமல் நடிக்கும் 'தெனாலி', 'மவுஸ் ஹண்ட்' என்ற ஆங்கிலப்படத்தின் கொப்பியாமே உண்மையா?**

ரி.கணேஷ், கொழும்பு-10.

*இல்லையென்று மறுத்துள்ளார் அதன் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.*

# மன்னாதி மன்னன் 02

கம்பங் கொல்லையை மன்னர் போஜராஜனின் உடைமை யாக்கி அதற்கான ஓலையிலும் உரிமைசாசனத்தை எழுதிக் கொடுத்தான் சரவணப் பட்டன்.

அக்கொல்லையில் அமைக்கப்பட்டிருந்த பரணை. பிடுங்கி எறிந்து விடும்படி மந்திரி நீதிவாக்கியன் அங்கு நின்ற வேட்டைக் காரர்களிடம் கூறினார். தொடர்ந்து பரண் அமைக்கப்பட்டிருந்த குன்று போல் உயர்ந்திருந்த மண் மேட்டைத் தோண்டும்படி கட்டளையிட்டார். வேட்டைக்காரர்களும் ஏனைய ஏவளாளர்களுமாகச் சேர்ந்து மண் மேட்டைத் தகர்த்தனர். சிறிது தூரம் தோண்டியதும் அவர்களுடைய கண்களையே மழுங்கடிக்கும் அளவு பிரகாசமான ஒரு பொருள் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர்.

மன்னரும் மந்திரியாரும் அதனைப் பார்த்தனர். அப்பொருளுக்கு எச்சேதமும் ஏற்படாமல் தோண்டுமாறு பார்த்துக் கொண்டனர். இப்பொழுது அப்பொருளின் முழு உருவமும் தென்பட்டது. தங்கத்தாலான ஒரு சிம்மாசனம்தான் மண்ணால் மூடப்பட்டுக் கிடந்துள்ளது என்பதைக் கண்டனர்.

அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அச் சிம்மாசனத்தில் விலை மதிக்க முடியாத நவரத்தினங்கள் ஏராளம் பதிக்கப்பட்டிருந்தன. மிகவும் பத்திரமாக அச் சிம்மாசனத்தைத் தூக்கி எடுத்து வெளியே கொண்டு வந்து வைத்தனர். போஜராஜன், இந்தச் சிம்மாசனம் அப்போது வாழ்ந்து வந்த எந்த நாட்டு மன்னரிடமும் இருக்க முடியாததொன்று என்றும் இது தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்றும் கருதினார். மந்திரிப் பிரதானிகளும் மன்னரின் கருத்தை ஆமோதித்தனர்.

இச்சிம்மாசனம் மூடப்பட்டிருந்த மண் மேட்டின் மீது பரண் அமைத்து அமர்ந்திருந்த சரவணப்பட்டனின் குணம் மாறுபாடடைந்தமைக்குக் காரணம் இந்தச் சிம்மாசனத்தின் சக்தியே என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தது.

பூமிக்கும் கீழே இருந்த சிம்மாசனத்தை மேலே தூக்கி எடுத்து ஒரு பெரிய மர நிழலில் வைத்து அதனை மூடியிருந்த முழுத் தூசிகளையும் அகற்றினார்கள். அப்போது அந்தச் சிம்மாசனம் ஜொக ஜோதியாக ஜொலித்தது. உடனடியாகவே அந்தச் சிம்மாசனத்தின் மீது ஏறி அமர்ந்து விடலாமா என்று போஜராஜன் பெரிதும் ஆசைப்பட்டார். ஆனால் அமைச்சர் நீதிவாக்கியன் தடுத்து விட்டார். "தெய்வாம்சம் பொருந்திய இந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமர்வதற்கு நல்ல நேர காலம் பார்த்தாக வேண்டும். வேத விற்பந்நர்களை கொண்டு உரிய முறையில் அபிஷேகம், பூஜை முதலியவற்றை நடத்த வேண்டும். அல்லாவிட்டால் விபரீதமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என்று அமைச்சர் கூறினார்.

அமைச்சரின் கூற்றில் உண்மை இருப்பதை அறிந்த போஜராஜன் தனது அவாவினை அடக்கிக் கொண்டார்.

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும், மன்னனும் அவருடன் வேட்டைக்கு வந்திருந்த குழுவினரும் தருமபுரியை நோக்கிப் புறப்பட்டனர். பச்சை இலை குழைகளால் சிம்மாசனத்தை மூடி மறைத்து தூக்கிக் கொண்டு ஏவளாளர்கள் பின் தொடர்ந்தார்கள்.

அரண்மனையை அடைந்ததும். கால தாமதமின்றி அரச குருவையும் ஏனைய அமைச்சர்களையும் புரோகிதர்களையும் அழைத்துவரும்படி மன்னர் ஏவலாளர்களை அனுப்பி வைத்தார்.

அன்றிரவே சபாமண்டபத்தில் மன்னர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கம்பங்கொல்லையில் தங்களால் கண்டெடுக்கப்பட்ட தங்கச் சிம்மாசனத்தை ஆலோசனைக் கூட்டத்துக்கு வந்திருந்த அனைவருக்கும் மன்னர் காண்பித்தார். அவர்கள் அனைவரும் அந்த சிம்மாசனத்தைப் பார்த்து வியப்பிலாழ்ந்தனர். இந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து தான் அரச காரியங்களைக் கவனிப்பதற்கு என்னென்ன கைங்கரியங்களை செய்ய வேண்டும் என்றும், எந்த நல்ல நாளில் அதனைச் செய்ய வேண்டும் என்றும் விரைவாக நாள் ஒன்றைப் பார்த்து கூறுமாறு அரச குருவிடமும், புரோகிதரிடமும் போஜராஜன் கேட்டுக் கொண்டார்.

உடனடியாகவே நல்ல நாள்-நேரம் எல்லாம் குறிப்பிடப்பட்டது. மிக வேகமாக அலுவல்கள் நடைபெற்றன.

குறிப்பிட்ட தினத்தன்று புரோகிதர்கள் ஓமம் வளர்த்து, பூசைகளை நடத்தி முறைப்படி பணிகளை நடத்தினார்கள். சிம்மாசனத்துக்கு அபிசேகம் நடைபெற்றது. போஜராஜன் ஆலயம் சென்று தனது இஷ்ட தெய்வமான காளிதேவிக்கு பூசை செய்து பிரார்த்தித்து விட்டு, மேளவாத்தியங்கள் மற்றும் மங்கள பேரிகைகள் முழங்க ஊர்வலமாக சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்த அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

புரோகிதர்கள் மந்திர உச்சாடனங்களை ஓதிய வண்ணம் இருக்க போஜராஜன் சிம்மாசனத்தில் ஏறுவதற்காக முன் சென்றார்.

அந்த தங்க சிம்மாசனத்தில் முப்பத்தி இரண்டு படிகள் காணப்பட்டன. அந்தத் தங்கப்படிகள் ஒவ்வொன்றிலும் அழகான ஒவ்வொரு பதுமை இருந்தது. இப்பதுமைகள் வெறும்சாதாரண தங்கத்தாலான பொம்மைகள்தான் என்று அதுவரை எல்லோரும் கருதியிருந்தனர். ஆனால் போஜராஜன் முதலாவது படிக்கட்டில் தன்னுடைய வலதுகாலைத் தூக்கிவைக்க முற்பட்டதும் அவருடைய கால் இடறியது. படியில் கால் வைக்க முடியாமல் ஏதோ ஒரு சக்தியால் பிடித்துத் தள்ளப்பட்டவர் போலானார் அதே சமயத்தில் ஏக காலத்தில் பல பேர் ஒன்று சேர்ந்து நையாண்டி பண்ணிச் சிரிப்பது போன்ற ஒலி கேட்டது.

சபையிலிருந்தவர்கள் எவரோதான் சிரிக்கிறார்கள் என்று மன்னரும் ஏனையோரும் கருதினர். ஆனால் சிம்மாசனத்திலுள்ள படிக்கட்டுகளிலிருந்த பொம்மைகள்தான் அவ்வாறு சிரித்தன என்பதைப் புரிந்து கொள்ள வெகு நேரமாகவில்லை. இதனைக் கண்ட மன்னனுக்கு கடும் கோபம் உண்டாயிற்று. உடைவாளை உருவி கையிலெடுத்துக் கொண்டார். இதனைக் கண்ட அமைச்சர்களும் அரச குருவும் அரசரைத் தடுத்து விட்டனர்.

"இந்தப் பதுமைகள் சிரிப்பதில் ஏதோ அர்த்தம் மறைந்திருக்கிறது. அந்த மர்மத்தை முதலில் மன்னர் தெரிந்து கொள்ள வேண்டும். அதனை அறியாமல் இந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து பரிபாலனம் செய்ய இயலாமல் போய் விடும். தங்கத்தாலான பதுமைகளே பலத்த சத்தம் போட்டு சிரித்திருக்கின்றன. ஆகவே, வாளை உறையிலிட்டு அமைதி அடைந்து, சிரித்த பதுமைகளிடமே அதற்கான காரணத்தை அரசன் கேட்டறிய வேண்டும்" என்று அரச குரு மன்னரிடம் கூறினார்.

உண்மை நிலையை மன்னர் உணர்ந்து கொண்டார். இரு கரங்களையும் கூப்பியவாறு சிம்மாசனத்திலுள்ள பதுமைகளைப் பார்த்து போஜமன்னர், ''தங்கப் பதுமைகளே! என் குல தெய்வமான மாகாளியின் அருளால் தான் இந்தச் சிம்மாசனம் எனக்கு கிடைத்துள்ளது. ஆகவே இதே சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து அரச பரிபாலனம் செய்ய நான் விரும்பியதில் என்ன தவறு நேர்ந்து விட்டது? எதற்காக சிரித்தீர்கள். காரணம் எதுவானாலும் கூறி விடுங்கள்!'' என்று வினயமாகக் கேட்டார்.



இவ்வாறு போஜராஜன் கேட்டதும், முதலாவது படியிலிருந்த பதுமை பேசலாயிற்று.

''போஜ மகா மன்னனே! எனது பெயர் விநோத ரஞ்சிதப் பதுமை. இந்தச் சிம்மாசனம் வீரதீர பராக்கிரமசாலியான விக்கிரமாதித்த மன்னாதி மன்னன் வீற்றிருந்து நீதி வழுவாமல், நேர்மை தவறாமல் ஆட்சி புரிந்த சிம்மாசனம் இதுவாகும்.

இதே சிம்மாசனத்தில் இரண்டாயிரம் ஆண்டுகள் அமர்ந்து விக்கிரமாதித்த மன்னன் ஆட்சி புரிந்தார். ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் சிற்றரசர்களும் கப்பங்கட்டி விக்கிரமாதித்த மன்னனுடைய ஆணையை சிரமேல் ஏற்று வணங்கி வந்தனர். அத்தகைய ஆற்றல் மிக்க விக்கிரமாதித்த மன்னனின் ஆற்றல்களில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் உம்மிடம் இருக்குமேயானால் நீர் இந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து பரிபாலனம் செய்யலாம். இல்லையேல் நாங்கள் முப்பத்திரண்டு பதுமைகளும் உம்மை இச்சிம்மாசனத்தில் ஏறி அமர்வதற்கு இடந் தரமாட்டோம்!'' என்று அந்த விநோதரஞ்சிதப் பதுமை கூறிவிட்டது.

பதுமை இவ்வாறு கூறியதும் போஜராஜன், ''நீங்கள் குறிப்பிட்ட மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தனைப் பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆகவே அந்த மாமன்னனைப் பற்றிய கதைகளை நீங்கள்தான் இச்சபையில் உள்ளோருக்கும் எனக்கும் கூற வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டார்.

''மன்னரே! நீர் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக மன்னாதி மன்னன் விக்கிரமாதித்த மன்னனுடைய கதையை பதுமைகளாகிய நாங்கள் ஒரு நாளைக்கு ஒரு கதை வீதம் உங்களுக்கு கூறுவோம். ஆகவே நாளைக் காலை சூரியோதயத்தின் பின் இங்கு வாரும்!" என்று கூறியது.

*(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

# காதோடு காது

உதாரா

## நெதர்லாந்தில் தமிழர் பேரணி:

மார்ச் திங்கள் எட்டாம் நாள்-நெதர்லாந்தில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள்-ஒன்றிணைந்து-மாபெரும் அமைதிப் பேரணியொன்றை நடாத்தினர். நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களின் நலன் நோக்கமும், இலங்கையில் போர் அழுத்தத்தால் சிறையில் வாடும் இளைஞர்களின் விடுதலை வேண்டியும்-அர்த்தமுள்ள பல கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பதாகைகள்-நெதர்லாந்து மொழியிலும்-எழுதப்பட்டிருந்தன. கோஷங்களும் இம்மொழியில் பெரிதும் எழுப்பப்பட்டன. புலம் பெயர்ந்த நாட்டிலும் தாயக மண்ணிலும்-தமிழ் மக்கள் எதிர் கொள்ளும்-ஹிம்சை வாழ்வை எடுத்தியம்புவதாக இருந்தன.

நெதர்லாந்து-நாடாளுமன்ற வழியில் பேரணி நகர்ந்து வந்தது. இரண்டாயிரம் பேர் இப்பேரணியில் பங்கு கொண்டனர். நெதர்லாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டிலான இப்பேரணி பிரதான சாலைகள் ஊடாக வந்த போது-நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரமுகர்களும்-எதிர்கொண்டு சந்தித்தனர். மக்கள் முன்னிலையில் வைத்து-பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் பெற்றுக் கொண்டனர். நெதர்லாந்தில் புலம் பெயர்ந்து வதியும் தமிழர்கள் தர்க்கரீதியாக-சட்டத்திற்கமைவாக அந்நாட்டில் வதியும் உரிமையைப் பெற-உரிய ஆவணங்களை முறைப்படி சமர்ப்பித்தல் வேண்டும். இது தவறின் அவர்களைச் சட்டப்படி பிடித்து இலங்கைக்கு அனுப்பும் நிலை உண்டு. இதற்கான சட்டப்படியிலான ஆலோசனைகளைப் பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்டத்தரணிகளை நாடி இவர்கள் ஆலோசனை பெறவும்-இங்கு இயங்கும் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வழி காட்ட முனைந்துள்ளனர்.

ஈழத் தமிழர்கள் விடயத்தில்-நெதர்லாந்து அகதிகள் திணைக்களம் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்காது-போதுமான அர்த்தபுஷ்டியான தரவுகளை வழங்கும் பொறுப்பும் உண்டு. உத்தேச அமைதிப் பேரணி மூலம் தமிழர் தம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள்-நீதி அமைச்சிடம்-கையளிக்கப்பட்டன. ஆறு வாரத்தில்-அகதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு முடிவு தெரியுமென நம்புகின்றனர், நெதர்லாந்து தமிழர் ஐக்கிய ஒன்றியத்தினர். நெதர்லாந்தில் தற்போது ஏழு (7) ஆயிரம் தமிழர்கள் வாழ்கிறார்கள்- என்பது தெரிந்து கொள்ள வேண்டிய தகவலாகும்.

## போதாமை ஏன்?

ரூபவாஹினி தமிழில் முந்திய நிகழ்ச்சிகள் நேர்த்தியாகவும், தரமானதாகவும், தாராளமானதாகவும் இருந்தே உள்ளன. ஆனால் சமீபகாலத்தில் இருந்ததும் இல்லாமல் போகின்றன. வளர்ச்சியின் உதாரணங்களாக-கலைமாமணி வைரமுத்துவின் மயான காண்டம், கலைஞர் விஸ்வநாதன் தயாரித்தளித்தது, 'காதம்பரி'-மூலம் தந்த நடனம் போன்றவை தரமானவை. எனினும்-கலாநிதி துரை மனோகரன் குறிப்பது போல 'தமிழில் நிகழ்ச்சி'- போதாமை உண்டு. ரூபவாஹினி-கடந்த பதினெட்டு வருட கால வரலாற்றில் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது- உண்மையிலும் உண்மை. சிங்கள மொழியில்-கலை, இலக்கிய, பாரம்பரிய, பண்பாட்டுத் துறையிலான அவர்களது வளர்ச்சி அபரிமிதமானது- தமிழில் அல்ல என்பதை ஏற்றாக வேண்டும்.

ரூபவாஹினி-தமிழ்ப்பிரிவைச் சேர்ந்த எஸ்.விஸ்வநாதன்-அழகு தமிழ்ச் சொல்லாளன். அவர் செய்தி அறிக்கையை வாசித்துத் தரும் போது-ஒரு தனித்துவப் பாணி மிளிரும். சொற்பஞ்சம் இல்லாதவர், ஜனரஞ்சகமாக நடிக்கக்கூடிய நடிப்பாற்றல் மிக்கவர், சிறந்த தயாரிப்பாளர், தமிழ்க்கலை, இலக்கியங்களை அறிந்தவர். இலங்கை வானொலியில் அவர் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சி போல் ரூபவாஹினியில் காண முடியவில்லையே! ஆனதால்-'இல்லாமை' ஏன்? போதாமை ஏன். பொறுத்திருந்து பார்ப்போமா? போதுமானதாக எப்போ வருமென்று! ■



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)

இரத்தினங்கள்
Accredited by National Gem & Jewellery Authority
அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS

# ஆ ஆ ஆடை

உலகிலேயே மிகப் பெரிய மணமகள் அலங்கார ஆடை தான் இது.

இப்பெரிய ஆடையை ஸ்பெயின் நாட்டின் 'புல்லினோவி' என்ற திருமண ஆடைகளைத் தயாரிக்கும் நிறுவனம் உருவாக்கியது.

அது மட்டுமன்றி மணப்பெண்ணின் தலை முகம் ஆகியவற்றை மூடும் 'வெயில்' நிலையில் பெரிது தான். பல பெண்கள் கைகளில் ஏந்திய வண்ணமுள்ள இந்த வெயிலின் நீளம் மட்டும் 150 மீட்டர்.

இந்தத் திருமண ஆடையை அணிந்திருப்பவர் மணமகள் அல்ல; ஒரு மொடல் அழகி. கடந்த பெப்ரவரி மாதம் 21ம் திகதி இதை கண்காட்சி ஒன்றில் அணிந்து மக்களைக் கவர்ந்தார் அந்த அழகி.

(பட உதவி: அஹமட் நியாஸ்- அஸாம் அலி)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# கட்டு மீறும் காளை

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கிரீடத்தைத் தலையில் சூடிக் கொள்வதற்காகப் பிறந்துள்ள இளவரசர் சார்ள்ஸ்-இளவரசி டயானா ஆகியோரின் மூத்த புதல்வன் வில்லியம் 17 வயது இளங்காளையாக வளர்ந்து விட்டார். ஆனால் 'இங்கிலாந்தின் பெருமைக்குரிய சிம்மாசனத்தின் வாரிசு இப்படியா கெட்டுக் குட்டிச் சுவராகப் போக வேண்டும்?' என்று மக்கள் விசனப்பட வைத்துள்ளார். எப்போதும் குடித்து வெறித்து தன்னைவிட வயதில் முதிர்ந்த அழகிகளுடன் கும்மாளம் போடுகிறார். போதைப் பொருட்களெல்லாம் அவருக்குத் 'தண்ணிபட்டபாடு'.

இளவரசி டயானா உயிருடன் இருக்கும்வரை தனது மகன் எவ்வாறு வளரவேண்டும் என்று அக்கறையுடன் திட்டமிட்டு வளர்த்து வந்தார். தந்தையாரான இளவரசர் சார்ள்ஸுக்கு தனது மகனைத் தட்டிக் கேட்டு வழி நடத்த தைரியமுமில்லை; நேரமுமில்லை. அவருக்கு அவருடைய ஆசைநாயகி கமிலா பார்க்கரை, பிரிட்டிஷ் மக்கள் தங்கள் எதிர்கால மன்னரின் பட்ட மகிஷியாக ஏற்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் தான் காலம் செலுத்திவருகிறார். வில்லியமை அவர் தட்டிக் கேட்க தைரியமில்லாமல் போனமைக்கு டயானா விவகாரத்தில் அவர் நடந்து கொண்ட முறையைப் பற்றி, தனது மகன் தன்னிடமே தாறுமாறாகக் கேள்வி கேட்டு மடக்க நேர்ந்தால் என்ன செய்வது? என்ற பயம் தான்.

மாளிகையில் தனக்குரிய பகுதியில் இரவு வேளைகளில் வேலைக்காரர்கள் எவரும் இருக்க வேண்டியதில்லை என்று தந்தை சார்ள்ஸிடம் கேட்டு அனுமதியாக்கிக் கொண்டார். வில்லியம் இதனால் அவருடைய அரச போகத்தில் பங்கு கொள்ள வகை வகையான அழகிகள் அங்கு வந்து உல்லாசமாகத் தங்கி வீட்டுச் செல்கின்றனர்.

வரும் பருவத்திலேயே அளவுக்கு மீறிய தான்தோன்றித்தனமான போக்கில் போகும் இளவரசர் வில்லியம் வரம்பு மீறி எங்கே சென்று முட்டி மோதப் போகிறாரோ என்று பிரிட்டிஷ் மக்கள் கவலை கொள்ளுகிறார்கள்!



# பி(பெ)ரிய தொகை

சில வருடங்களுக்கு முன்னர் உலகிலுள்ள பெருமளவான மக்களால் பிரமாதமாகப் பேசப்பட்ட ஜோடி இது. ரொக்இசை மன்னனாக இருந்து மறைந்த எல்விஸ் பிரெஸ்லியின் மகள் லிசா மாரி இந்நாள் இசை உலக மாமன்னர் மைக்கேல் ஜாக்சனை மணந்தார். இவர்களின் இணைப்புத்தான் அன்று பலரையும் மலைக்க வைத்தது. ஆனால் இவர்கள் உறவு நீடிக்கவில்லை. இவர்கள் ஒன்றாக இருந்தபோது பிடிக்கப்பட்ட படம் இது. பிரிந்துவிட்டனர். ஜாக்சன் லிசா மாரிக்கு ஏராளமான சொத்தைக் கொடுத்துத்தான் உறவை வெட்டிவிட்டார்.

லிசா மாரியும் ஜாக்சனின் பணத்தை நம்பித்தான் வாழ வேண்டிய நிலையிலுள்ளவரல்ல. தந்தை எல்விஸ் பிரெஸ்லியும் தன் ஒரே மகளுக்காக ஏராளமான சொத்தை விட்டுச் சென்றார். இந்தச் சொத்தின் பெறுமதி மொத்தம் 13 கோடி டொலர். மாரியின் 30வது வயதில் இந்தச் சொத்திலிருந்து வருடத்துக்கு 38 இலட்சம் டொலர் கிடைக்கும்.

எல்விஸ் பிரெஸ்லியின் அந்தப் பிரமாண்டமான சொத்தும் எப்போதோ அரசுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். இன்று லிசா மாரியின் வாரிசு உரிமை நிரூபிக்கப்படாமையினால் அந்தத் திரண்ட சொத்தின் வாரிசாக அவர் ஆகிவிட்டார்.



# செங் குத்து

உலகிலேயே அதிக உயரமானதும் பெரியதுமான செங்குத்துப் பாறைகள் இந்தியாவின் காஷ்மீர் பிரதேசத்தில் கேஷாபிராவ என்ற இடத்தில் உள்ளது. இவற்றை 'டாரங்கோ டவேர்ஸ்' என்று அழைக்கிறார்கள். இவற்றுக்கு மூன்று சிகரங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் 6,000 மீட்டர் (19,700 அடி)க்கு மேல் உள்ளன. ஆக உயரமான சிகரம் 6286 மீட்டர் (20,625 அடி) உயரமுடையது.

இச்சிகரங்களை அடைவதானால் ஒரே செங்குத்தான முறையில்தான் ஏற வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்காக இங்கு யாரும் செல்ல விடாமல் 1975ம் ஆண்டு வரை தடுக்கப்பட்டனர். பின்னர் 1977ல் ஒருவர் இச் சிகரத்தைத் தொட்டார்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 28.04.2000

